சக்தி



88873
சென்னை-600 008.

முல்லைச் சிரிப்பு.

இன்று உலகம் சிரிப்பை வேண்டுகிறது. சிரிக்கும் முகம் அழகாய் இருக்க வேண்டும். பல்களும் அழகாய் வரிசையாய் முத்துப் போல இருக்க வேண்டும். எத்தனைதான் உதட்டிற்கு வர்ணம் தீட்டினாலும், முகத்தில் ஸ்னோக்கள் தடவினாலும், பலவிதமான பசைகளைப் போட்டு பல் துலக்கினாலும் இயற்கையான முக வசீகரம் வராது. தாம்பூலம் போட்டுக் கொள்ளுங்கள். பல் அழகாக இருக்கும். உதட்டில் இயற்கையாக வெற்றிலைச் சிகப்பு இருக்கும். நீங்கள் சிரிப்பதை ஒவ்வொரு கண்ணும் பார்த்து மகிழும். தாம்பூலத்துக்கு உகந்த சுகந்த மணமுள்ள பாக்குத்தூள் 'அசோகா'தான்.

அசோகா

சுகந்த பாக்குத் தூள்

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்

SRB
வாலாயமான பழைய கடை !
ஆகாய வீதியில் அந்திவானத்தின் அழகிய வர்ணங்களை அப்படியே
பிடித்து அடைத்தாற்போல் பல நூதன பட்டு ஜவுளி தினுசுகள்
தற்சமயம் ஏராளமாய் கைவசம் குவிந்துள்ளன
நேரில் வந்து பாருங்கள் !
S. R. B. குப்புசாமி அய்யர் & சன்
(பழைய விலாசம்) S. R பாலுசாமி அய்யர் & சன்ஸ்
No. 117, நயினியப்ப நாய்க்கன் தெருவு, P. T. மதருஸ்
No. 230, கீழமாரெட் வீதி, மதுரை

ஆஸ்துமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்

தற்சமயத் திறகு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோஹித் சுவாஸ்ஹரி" தற்சமயத்திறகு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூல காரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டைக் காகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸ்ஹரி" ப்௳ளயின், (நீலப் பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸ்ஹரி" காம்பௌண்டு (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :
1. அப்பா அண்டு கோ, சைனா பஜார்.
2. அமிருத் ரத்னகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :
K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.

புரோகிதஸ் ஸ்வாஸஹரி

இந்தாங்கோ!

பத்மா: இந்தாங்கோ! உங்களைத்தானே! என்னென்னவோ பத்திரிகைகளையும், புத்தகங்களையும் வாங்கிவந்து போடுரேளே. அதுகளிலே எனக்குப் பிரயோஜனமான விஷயங்கள் ரொம்பக் கொஞ்சமாத்தானே இருக்கு. ஏதோ '**மங்கை**' யாம். பெண்களுக்காகவே பட்டணத்திலேருந்து வரதாம். ரொம்ப நன்னாருக்குன்னு அடுத்தாத்து வத்ஸலா சொன்னா. நானும் அவளிட்டேயிருந்து வாங்கிப் படிச்சேன். எல்லாம் பெண்களுக்காகவே தான் எழுதியிருக்கா. அதுவும் எல்லாமும் பொம்மனாட்டிகதான் எழுதியிருக்கா. எனக்கு ரொம்பப் பிடிச்சுருக்கு.

ராமசாமி: அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்றே!

பத்மா: என்ன செய்யச் சொல்றேன்! ரூ. ஆறுதானும் வருஷத்துக்கு. அவாளுக்கு இன்னிக்கே அனுப்பிடுங்கோ. விலாசங் கூட இதோ இருக்கு.

அந்த விலாசம்:

சக்தி காரியாலயம்

சென்னை — 14

பொருள் அடக்கம்

●

நம் லட்சியம்	...	பண்டித நேரு	1
பிரிட்டிஷ் திட்டம்	...	ராஜாங்கம்	5
இந்தியாவின் புதுக்கோலம்	...	படம்	12
நாம் விரும்பும் இந்தியா	...	,,	13
மவுண்ட்பாட்டன் கைங்கரியம்	...	பி. ஸி. ஜோஷி	14
எப்படி இருந்தோம்!	...	பி. சிதம்பரம் பிள்ளை	19
ஏரோப்பிளேனும்...	...	போ. குருசாமி	20
மயான போகம்	...	தமிழ்வாணன்	24
க்ஷயரோகமும்...	...	இருவர்	25
இந்தியாவின் கதை	...	ஈவ்ஜெனி ஜுகாவ்	27
திருப்பூர்க் குமரன்	...	வ. வ. நடராஜன்	36
குஜராத்தி இலக்கியத்தின்...	...	பி. எச். பி.	39
சர்க்கரையைப் பற்றி...	...	'ஜீனி'	42
புத்தக விலை அதிகமா?	...	வை. கோவிந்தன்	44
மண் புழு	...	இ. ஆர். யர்ஹாம்	46
வெள்ளிக் கணை	...	"பிரயாணி"	48
விஜயலட்சுமி பண்டிட்	...	பெர்ள் பக்	57
காதலிக்கு—	...	கு. அழகிரிசாமி	64
வஸந்தம் வந்தது	...	சுரபி	66
திருவாங்கூர்த் திவானின்...	...	ஆர். எச். நாதன்	74
புத்தக உலகம்	...	கு. அ.	77

முதலியவை

✲

சர்வசித்து — ஆனி

மலர் 14 — இதழ் 3

சக்தி



ஆயிரங் காலப் பயிர்

நம் நாட்டில் திருமணத் தம்பதிகளை 'ஆயிரங் காலப் பயிர்' என்று வாழ்த்துவார்கள். நம் நாட்டுப் பண்பாட்டின் அறிகுறியாய்—நம்மவர் திருமணத்தின் மதிப்புக்குரிய சின்னமாய் இலங்கும் **திருமங்கலியத்தை** எண்ணிப் பெருமைப் படாதவர் யாருமே இல்லை.

திருமங்கலியத்தை யார் வேண்டுமானாலும் செய்யலாமா என்ன? ஆயிரங் காலப் பயிரல்லவா திருமங்கலிய தாரணம்! எனவே, புகழ் பெற்ற நகை வியாபாரியின் அனுபவமும், ராசியும் அவசியம்.

பாபாலால் கம்பெனியார் செய்யும் இத்தகைய அணிகள் உங்கள் வீட்டுக்கு அழகு மட்டுமல்லாமல் கிருஹ லட்சுமியையும் சேர்த்து வைக்கின்றன.

சர்வசித்து

மலா 14

சக்தி

ஆனி

இதழ் 3

மெய்ப் பொருள் காண்பது அறிவு

●

நம் லட்சியம்

பண்டித ஜவாஹர்லால் நேரு

சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன்பு, நான் பதவி யேற்ற உடனே, இதே இடத்தி லிருந்து உங்களிடம் பேசினேன். 'நாம் முன்னேறிக்கொண் டிருக்கிறோம்; ஆனால், இன்னும் லட்சியம் கிட்டவில்லை' என்று நான் அப்போது உங்களுக்குச் சொன்னேன். நம்முடைய பாதையில் கஷ்டங்களும் தடங்கல்களும் இருக்கின்றன என்றும், நம் பிரயாணம் முற்றுப் பெறுவதற்குரிய காலம் அருகில் இல்லாமலும் இருக்கலாம் என்றும் சொன்னேன். ஏனெனில், இந்திய சர்க்காரில் பதவி ஏற்பதுடன் நம் பிரயாணம் முடிவடைந்துவிடாது. மனிதனுக்கு அளிக்க வேண்டிய சந்தர்ப்பங்களிலும், வாழ்க்கைக்கு அர்த்தமும் அந்தஸ்தும் அளிக்கக்கூடிய எல்லா விஷயங்களிலும், அனைவரும் சம பங்கு பெறக்கூடிய ஒரு கூட்டுறவுச் சாம்ராஜ்யத்தை நிறுவுவதும், இந்தியாவின் பூரண விடுதலையைப் பெறுவதுமே நம் லட்சியம்.

ஒன்பது மாதங்கள் கழிந்துவிட்டன. வேதனை மிக்க, கவலை தோய்ந்த, சில சமயங்களில் உள்ளம் உடைந்து போகவும் கூடிய சோதனைகளும், சிரமங்களும் ஏற்பட்டிருக்கின்றன, இந்தக் காலத்தில். ஆனால், கடந்த காலத்திய துன்பங்களையும், மக்களின் துயரங்களையும் பார்க்கும் போது, நாம் சந்தோஷப்படக் கூடிய சில சாதனைகளும் நடந்திருப்பது தெரியவரும். ஏனெனில், இன்று இந்தியா, தேசிய, சர்வதேசிய விவகாரங்களில் முன்னேற்ற மடைந்து உலக சபைகளில் பெரிதும் மதிக்கப் படுகிறது. சாதாரண மனிதனின் வாழ்க்கைச் சுமை பயங்கரமான அளவுக்குப் பெரிதா யிருந்தாலும் லட்சக் கணக்கான பேர் உடை, உணவு போன்ற வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்கள் இல்லாமல் கஷ்டப்பட்டாலும், உள்நாட்டில் பிரயோசனமான ஒன்றைச் செய்தே இருக்கிறோம். அபிவிருத்திக்கான பல பெரிய திட்டங்கள் அநேகமாகத் தயாரா யிருக்கின்றன. ஆனாலும், நாம் நிறைவேற்ற எண்ணியிருக்கும் பல தீரச் செயல்கள் நனவாகாமல் இன்னும் கனவாகவே இருக்கின்றன. பொருளாதார, அரசியல், சமூக விவகாரங்களில் நம்

தேசம் எத்தனையோ கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த மாதங்கள் சோகம் நிரம்பியவை; இந்த நாட்டின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருப்பவர்களுடைய பொறுப்பு மிக அதிகமாயிருந்தது.

கலகப் பிரதேசங்களில் துன்பப்பட்ட நம் மக்களைப் பற்றி—மாண்டு மடிந்த ஆயிரக் கணக்கானவர்களைப்பற்றி, குறிப்பாக, சாவைவிட மோசமான துன்பங்களை அனுபவித்த நம் பெண் மக்களைப் பற்றி—எண்ணும்போது என் மனம் வேதனைப்படுகிறது. வீடு வாசலை இழந்த குடும்பங்களுக்கும், அநாதையாக்கப்பட்ட எண்ணற்ற மக்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க எங்களால் முடிந்ததையெல்லாம் செய்வோம் என்று உறுதியும் கூறுகிறேன். இந்தத் துர்ப்பாக்கியங்கள் இனி ஒரு முறையும் ஏற்படாதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

எவ்வளவோ கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் இடையேயும் உருவாகிவரும் இந்தியாவின் விதியைப் பற்றி நாங்கள் ஒரு போதும் நம்பிக்கை இழந்ததில்லை. நான் முன்பு செய்துவந்தது போல, இந்தியாவின் பல நகரங்களுக்குக் கிராமங்களுக்கும் சென்று, என் ஜனங்களைச் சந்தித்து, அவர்களுடைய கஷ்டங்களைப் பற்றி நேரடியாகத் தெரிந்துகொள்ள இந்தக் காலத்தில் என்னல் முடியாமல் போய்விட்டது. வேலை மிகுதியினால் இது முடியவில்லை. இதைக் குறித்து நான் மிகவும் வருந்துகிறேன்.

இந்தியாவின் எதிர்காலத்தைப் பெரிதும் பாதிக்கக் கூடிய ஒரு முக்கிய மாறுதல் நிகழ இருக்கும் இன்னொரு சரித்திரப் பிரசித்தி பெற்ற சந்தர்ப்பத்தில் நான் உங்களிடம் பேசுகிறேன். பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பாக வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையை நீங்கள் இப்போதுதான் கேட்டீர்கள். இந்தியாவின் சில பகுதிகள் சுய நிர்ணயம் செய்து கொள்ளும் உரிமைகளை இத் திட்டம் வகுக்கிறது. இந்தப் பிரதேசங்கள் இந்தியாவிலிருந்து பிரிந்து போகச் சாத்தியமுண்டு என்று ஒருபுறத்தில் இந்தத் திட்டம்கூறுகிறது. அதே சமயத்தில் பூரண விடுதலையைக் குறித்த பெரிய முன்னேற்றத்தையும் இது உறுதியுடன் வாக்களிக்கிறது. இந்தப் பெரிய மாறுதல் அமுலுக்கு வருமுன், மக்களின் பூரண சம்மதத்தையும் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், இந்தியாவின் எதிர்காலத்தை இந்திய மக்களே தீர்மானிக்க முடியும் என்பது, வெளி அரசாங்கம் எதுவும்—அது எவ்வளவு சிநேக பாவம் வாய்ந்ததானலும்—தீர்மானிக்க முடியாது என்பதும் என்றும் ஞாபகத்தில் இருக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபைகளிடம் ஆலோசனைக்காக இந்தத் திட்டம சமர்ப்பிக்கப் படும். ஆனல், இடையே காலம் ஓடிவிடும. முக்கியமான தீர்மானங்கள் சாதாரணமான காரியங்களுக்காகக் காத்திருக்க முடியாது. எனவே, மக்களின் முடிவான தீர்ப்புக்கு நாங்கள் அவசியம் கட்டுப்பட்டாக வேண்டும் என்ருலும், நாங்களாகவே சிற்சில முடிவுகளைச் செய்து,

அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி மக்களுக்குச் சிபாரிசு செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆகையால், இந்தத் திட்டங்களை ஏற்பதென நாங்கள் தீர்மானித்து விட்டோம். அகில இந்தியக் காங்கிரசுக்கும் இதை ஏற்கும்படி சிபார்சு செய்வதென முடிவு செய்திருக்கிறோம்.

இதுவே சரியான வழி என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. ஆயினும், இந்தத் திட்டத்துக்குப் பரிந்து பேசும்போது என் மனம் மகிழவில்லை. பூரண சுதந்தரமான ஓர் ஐக்கிய இந்தியாவைப் பற்றிக் கனவு கண்டு, தலைமுறை தலைமுறையாக அதற்காக நாம் போராடி வந்திருக்கிறோம். சில பிரதேசங்கள் விரும்பினால் பிரிந்து போகலாம் என்று இந்தத் திட்டம் அனுமதிப்பதை எண்ணும்போதே வேதனையாயிருக்கிறது.

எனினும், பரந்த நோக்கில் பார்த்தாலும், எங்களுடைய தற்பொழுதைய தீர்மானமே சரியானதென்று நான் திருப்தியடைகிறேன். நாம் இத்தனை நாளும் அடையவேண்டுமென்று கஷ்டப்பட்ட ஐக்கிய இந்தியா, பலாத்காரத்தினாலும், நிர்ப்பந்தத்தினாலும் ஏற்படுவதல்ல. ஆனால், சுதந்தரமான மக்கள் இஷ்டப்பட்டுச் சேர்ந்துவரும் ஐக்கிய இந்தியாவே நாம் விரும்பியது. இந்த வழியிலேயே, என்றாவது ஒரு நாள் நாம் ஐக்கிய இந்தியாவை அடையலாம்; அப்போது தான், இந்தியா பலமும், பாதுகாப்பு அஸ்திவாரமும் பெறும்.

மகத்தான லட்சியங்களுக்காகப் போராடும் சாதாரண மனிதர்கள்தான் நாம். ஆனால், லட்சியம் மகத்தானதாயிருப்பதால், அந்த மகத்துவத்தின் ஒரு பகுதி நம் மேலும் விழுகிறது. உலகத்திலும் இந்தியாவிலும் இன்று மகத்தான சக்திகள் வேலை செய்கின்றன. இந்தியாவுக்குப் பெருமை தரும் ஒரு காலத்தை நாம் கடந்துகொண்டிருக்கிறோம் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. பூகோளத்திலும், சரித்திரத்திலும், கர்ணபரம்பரையிலும் சிறப்புற்ற இந்தியா, நம்முடைய எண்ணத்திலும், உள்ளத்திலும், இடம்பெற்றிருக்கும் இந்தியா, மாற முடியாது. தாய் நாட்டுக்கு—பரந்த அளவில், மனித சமூகத்துக்கே—சேவை செய்வதில், நமக்குச் சரியான வழி காட்ட வேண்டும் என்று நாம் ஒவ்வொருவரும் இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமயத்தில் பிரார்த்திப்போமாக. கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் பிரிக்கும் ஓர் எல்லைக் கோட்டிலே நாம் நிற்கிறோம். கடந்த காலத்தின் தீமைகளையெல்லாம் புதைத்து விடுவோம்; கொடுமைகளையும், பரஸ்பர தூஷணைகளையும் மறந்துவிடுவோம். பேச்சிலும் எழுத்திலும் நிதானம் காட்டுவோம். நம் மனத்திலே உள்ள லட்சியங்களை ஒட்டிச் செல்லுவதில் பலமும், விடாமுயற்சியும் இருக்கட்டும். எதிர்காலத்தை, வெறும் மேலோட்டப் பார்வையுடனோ, சுய திருப்தியுடனோ, பலவீனத்துடனோ நாம் எதிர்நோக்க வேண்டாம். ஆனால், நம்பிக்கையுடனும், இந்தியாவிடம் உறுதியான விசுவாசத்துடனும் எதிர்நோக்குவோம்.

இந்தியாவின் பல பகுதிகளிலும பலாத்காரம்—வெட்கப்படகூடிய, நம்மைக் கீழ்நிலைக்குத் தள்ளும் பயங்கரமான பலாத்காரம் — நடைபெற்றிருக்

கிறது. இதற்கு ஒரு முடிவு ஏற்பட்டாக வேண்டும். இதை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று நாங்கள் உறுதி கொண்டிருக்கிறோம். இப்போதோ, எதிர்காலத்திலோ அரசியல் லட்சியங்களைப் பலாத்காரத்தின் மூலம் அடைய முடியாதென நாம் தெளிவுபடுத்த வேண்டும்.

தெளிந்த நோக்கு, உறுதி வாய்ந்த எண்ணம், விடாப்பிடியான போக்கு, சகிப்புத் தன்மை, நிமிர்ந்த நெஞ்சம் ஆகியவற்றுடன்—இந்தியாவில் பெரிய மாறுதல்கள் நடக்கவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில்—நாம் புதிதாகக் காரியங்களைத் தொடங்க வேண்டும். ஒவ்வோர் இந்தியனையும் எப்போதும் நமது தோழனாகவும் சகோதரனாகவும் கருதவேண்டும். யாருக்கும் தீங்கு எண்ணக் கூடாது. நாற்பது கோடி மக்களின் நன்மையே நமது மேலான லட்சியமாக இருக்க வேண்டும். நமக்கு மிகவும் வேதனையளித்த கடந்த காலத்தை மறந்து விட்டு, சிநேகப்பான்மை, பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இங்கிலாந்துடன் நாம் புதிய உறவு முறைகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். நம்முடைய சரித்திரத்திலேயே மிக நெருக்கடியான ஒரு கட்டத்தின் போது இங்கு வந்த, அன்று முதல் நமக்காகப் பாடுபட்ட வைஸ்ராய் மவுண்ட்பாட்டனுக்கு என்னுடைய ஆழ்ந்த பாராட்டுதல்களை இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நெருக்கடியும், கஷ்டமும் ஏற்படும் ஒவ்வொரு சமயத்திலும் தவிர்க்க முடியாதபடி, நாம் நம் மாபெரும் தலைவர் மகாத்மா காந்தியைப் பற்றியே நினைவு கூர்ந்து வந்திருக்கிறோம். ஒரு தலைமுறைக்கு மேலாகக் காந்திஜி, இருளும் துயரும் நிரம்பிய பாதையில் நமக்கு வழிகாட்டி, சுதந்தர வாயிலுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். அவருக்கு நாம் மறுபடியும் ஒரு முறை நம் வணக்கத்தைத் தெரிவிப்போமாக. எப்போதும் போல, வரப்போகும் முக்கியமான காலங்களிலும் நமக்கு அவருடைய ஆசீர்வாதமும், தீர்க்க யோசனைகளும் இருந்துகொண்டிருக்கும்.

எதிர்காலத்திலே முழு நம்பிக்கையும் வைத்து, நம் முன்னிருக்கும், மகத்தான வேலையில் ஒத்துழைத்து, இந்தியாவிலுள்ள ஒவ்வொருவருக்கும் விடுதலை தரும் அந்தச் சுதந்தர சுவர்க்கத்தை நோக்கி முன்னேறுமாறு உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜே ஹிந்த்!

✲

இரண்டும் முடியாது

சுதந்தரமில்லாமல் ஒருவன் சந்தோஷமாக இருக்க முடியாது; யோக்கியனாகவும் இருக்க முடியாது.

—ஜூனியஸ்

இரண்டு குற்றவாளிகள்

இரண்டு நல்ல மனிதர்கள் சண்டையிட்டுக்கொள்ளத் தொடங்கும் போது இருவரில் ஒருவர்தான் தப்பிதம் செய்தவராக இருப்பார்கள். ஆனால், சண்டை வெகுகாலம் நீடித்தால் இருவருமே தப்பிதம் செய்தவர்களாகிவிடுவார்கள்.

—புல்லர்

பிரிட்டிஷ் திட்டம்

●

ராஜாங்கம்

1. 1948-ம் வருஷம் ஜூன் மாதத்துக்குள் பிரிட்டிஷ் இந்தியாவில் தங்களுக்குள்ள அதிகாரத்தை இந்தியர்கள் கைக்கு மாற்றிவிடுவது என்னும் தங்கள் உத்தேசத்தை 1947, பிப்ரவரி 7-ம் தேதி பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்தார்கள். 1946-ம் வருஷம் மே மாதம் 16-ம் தேதி பிரிட்டிஷ் மந்திரி சபை வெளியிட்ட திட்டத்தை அமுல் நடத்துவதில் ஒத்துழைத்து, சம்பந்தப்பட்ட எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஓர் அரசியல் அமைப்பைத் தயாரிப்பது பிரதம கட்சிகளுக்குச் சாத்தியமாயிருக்கும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் நம்பியிருந்தது. இந்த நம்பிக்கை நிறைவேறவில்லை.

2. சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீஹார், மத்திய மாகாணங்கள், பீரார், அஸ்ஸாம், ஒரிஸா, வடமேற்கு எல்லைப்புறம் ஆகிய மாகாணங்களின் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோரும், டில்லி, ஆஜ்மீர்-மேவார், குடகு ஆகியவற்றின் பிரதிநிதிகளும், புதிய அரசியல் அமைப்பைத் தயாரிப்பதில் ஏற்கெனவே ஈடுபட்டு முன்னேறியிருக்கிறார்கள். மற்றொருபுறம், வங்காளம், சிந்து, பஞ்சாப் மாகாணங்களின் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோரும், பிரிட்டிஷ் பலுஜிஸ்தானத்தின் பிரதிநிதியும் அடங்கிய முஸ்லிம் லீக் கட்சி, அரசியல் நிர்ணய சபையில் பங்கெடுத்துக் கொள்ளுவதில்லை யெனத் தீர்மானித்திருக்கிறது.

3. இந்திய மக்களின் சொந்த விருப்பங்களுக்கு ஒட்டியவாறே அதிகார மாற்றம் நடைபெற வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கம் என்றுமே கருதி வந்திருக்கிறது. இந்திய அரசியல் கட்சிகளுக்கிடையே உடன்பாடு ஏற்பட்டிருந்தால், இந்த வேலை மிகவும் சுலபமானதாகப் போயிருக்கும். இந்த உடன்பாடு ஏற்படாததால், இந்திய மக்களின் விருப்பத்துக்கு உறுதிகூறும் ஒரு முறையை வகுக்கும் வேலை பிரிட்டிஷ் சர்க்காருக்கு நேர்ந்திருக்கிறது. இந்தக் காரியத்துக்காகக் கீழ்க்கண்ட முறையைக் கைக்கொள்வதென்று, இந்தியத் தலைவர்களுடன் முழுதும் ஆலோசனை செய்த பின்னர், பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. இந்தியாவுக்காக இறுதியான அரசியல் அமைப்பு எதையும் தாங்கள் வகுக்கும் உத்தேசம் கிடையாதென்று பிரிட்டிஷ் சர்க்கார் தெளிவுபடுத்த விரும்புகிறார்கள். இந்தியர்களே தீர்மானிக்க வேண்டிய விஷயம் இது. ஐக்கிய இந்தியாவுக்காக, சமூகங்கள் தங்களுக்குள் பேச்சு வார்த்தைகள் நடத்துவதைத் தடுக்கக் கூடிய எதுவும் இந்தத் திட்டத்தில் கிடையாது.

4. நடைபெற்றுவரும் அரசியல் நிர்ணய சபையின் வேலையைத் தடை செய்யும் உத்தேசம் பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கிடையாது. கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் சில மாகாணங்களுக்கு, சில ஏற்பாடுகள் செய்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவுக்கென்று தயாரித்து வெளியிட்ட இந்தத் திட்டத்தை அரைகுறை மனதுடன்தான் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் அரசியல் கட்சிகள் பரஸ்பரம் உறவு கொள்ளாத பெருங் குறையால் ஏகாதிபத்தியப் பேனா இந்தியாவின் தலையில் எழுதிய தலையெழுத்து இது.

யப்பட் டிருக்கின்றன. இந்த மாகாணங்களின் பெரும்பான்மையான பிரதிநிதிகள் அ. நி. சபையில் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது, அவற்றிலுள்ள முஸ்லிம் லீக் பிரதிநிதிகளும் அ. நி. சபையின் அலுவல்களில் தங்களுக் குரிய பங்கை எடுத்துக்கொள்ளுவார்கள் எனப் பிரிட்டிஷ் சர்க்கார் நம்புகிறது. அதே சமயத்தில் இந்தச் சபை வகுக்கும் அரசியல் அமைப்பை ஏற்றுக்கொள்ள விரும்பாத தேசப் பகுதிகளைக் கட்டுப்படுத்தாது என்பதும் தெளிவு. தங்கள் அரசியல் அமைப்பை, (அ) தற்போதுள்ள அரசியல் நிர்ணய சபையில் அல்லது (ஆ) தற்போதுள்ள அ. நி. சபையில் கலந்துகொள்ளுவதில்லையெனத் தீர்மானிக்கும் பிரதேசங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட, புதிய, தனித்ததோர் அ. நி. சபையில் வகுத்துக்கொள்ளுவது பற்றி, அந்தப் பிரதேசவாசிகளின் விருப்பத்தைக் கண்டறியக் கீழ்க்கண்ட வழியே காரியசாத்தியமான சிறந்த வழி என்று பிரிட்டிஷ் சர்க்கார் கருதுகிறார்கள்.

இது முடிந்ததும், எந்தச் சர்க்காருக்கு அல்லது சர்க்கார்களுக்கு அதிகாரத்தை மாற்ற வேண்டும் என்று தீர்மானிப்பது சாத்திய மாகும்.

5. வங்காளம், பஞ்சாப் ஆகிய மாகாணங்களின் மாகாண சட்ட சபைகள் (ஐரோப்பிய அங்கத்தினர்களைச் சேர்க்காமல்) இரண்டு பிரிவுகளாகப் பிரியும்படி கேட்டுக்கொள்ளப்படும். முஸ்லிம் பெரும்பான்மை—

பிரிட்டிஷ் திட்டத்தை இந்தியாவுக்குக் கொண்டுவந்து சேர்த்த வைஸ்ராய் மவுண்ட்பாட்டன் பிரபு

ஜில்லாக்களுக்காக ஒரு சட்ட சபையும், மாகாணத்தின் இதர பாகங்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்க மற்றொரு சட்டசபையும் இருக்கும். ஜில்லாக்களின் ஜனத் தொகையைக் கணக்கிட, 1941-ல் எடுக்கப்பட்ட ஜனசங்கியையே ஆதார பூர்வமானதாக எடுத்துக் கொள்ளப்படும். இந்த அறிக்கையுடன் சேர்க்கப்பட்டுள்ள அனுபந்தத்தில், இந்த இரு மாகாணங்களின் முஸ்லிம் பெரும்பான்மை ஜில்லாக்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

6. ஒவ்வொரு மாகாண சட்டசபையின் இரண்டு பிரிவுகளும், தங்கள் மாகாணத்தைப் பிரிப்பதா, வேண்டாமா என்பதற்கு வாக்களிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கும்.

7. ஏதாவது ஒரு பாகத்தின் கொஞ்சப் பெரும்பான்மையினர் பிரிவினைக்குச் சாதகமாகத் தீர்மானித்தாலும், பிரிவினை நடைபெறும். அதற்கேற்றபடி, ஏற்பாடுகளும் செய்யப்படும்.

8. பிரிவினைப் பிரச்னை தீர்மானிக்கப்படுமுன், இந்த இரு பிரிவுகளும் சேர்ந்தேயிருப்பது என்று பிற்பாடு தீர்மானிக்கும் பட்சத்தில், மாகாணம் முழுவதும் எந்த அரசியல் நிர்ணய சபையில் சேருவது என்பதை, முன்கூட்டித் தெரிந்துகொள்ளுவது விரும்பத்தக்கது. எனவே, சட்டசபையின் எந்தப் பிரிவு அங்கத்தினராவது இதைக் கோரும் பட்சத்தில், (ஐரோப்பியரல்லாத) மாகாண சட்டசபை அங்கத்தினர்களின் கூட்டம் நடைபெறும். இரு கட்சிகளும் சேர்ந்தேயிருக்க முடிவாகுமானால், எந்த அ. நி. சபையில் சேர்வது என்பது தீர்மானிக்கப் படும்.

8. பிரிவினை வேண்டுமென்று தீர்மானிக்கப்படுமானால், மாகாண சட்டசபைகளின் இரு பிரிவுகளில் ஒவ்வொன்றும், தாங்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் பிரதேசங்களின் சார்பாக, 4-வது பாராவில் கண்டவற்றுள் எதை மேற்கொள்ளுவது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

9. பிரிவினைப் பிரச்னையை உடனடியாகத் தீர்மானிக்க வேண்டி, வங்காளம், பஞ்சாப் ஆகியவற்றின் மாகாண சட்டசபை அங்கத்தினர்கள், (அனுபந்தத்தில் கண்டுள்ளபடி) முஸ்லிம்கள் பெரும்பான்மையான ஜில்லாக்களுக்காக ஒரு பிரிவாகவும், முஸ்லிம் அல்லாதார் பெரும்பான்மையான ஜில்லாக்களுக்காக ஒரு பிரிவாகவும், ஆக இரண்டு பிரிவுகளாகக் கூடும். இது முற்றிலும் தற்காலிகமான ஒரு நடவடிக்கையின் ஆரம்ப ஏற்பாடேயாகும். ஏனெனில், இந்த மாகாணங்களை இறுதியாகப் பிரிப்பதற்கு, எல்லைப் பிரிவினைகளைத் தீவிரமாக ஆராய்வது அவசியமாக இருக்கும். எந்த மாகாணத்தையும் பிரிவினை செய்யத் தீர்மானித்த உடனே, கவர்னர் ஜெனரலால் ஓர் எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும். சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசித்த பின்னர், இந்தக் கமிஷனின் அங்கத்தினர்கள் பற்றியும், அது தீர்மானிக்க வேண்டிய விஷயம் பற்றியும், முடிவு செய்யப்படும். தொடர்ந்துள்ள முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களையும், முஸ்லிம் அல்லாதார் பெரும்பான்மைப் பிரதேசங்களையும் நிர்ணயித்து, அந்த அடிப்படையில் பஞ்சாப்பின் இரண்டு

பிரிவுகளின் எல்லைகளையும் வரையறுக்கும்படி அதற்குத் தாக்கீது பிறப்பிக்கப்படும். மற்ற விஷயங்களையும் கவனிக்கும்படியும் அதற்குக் கூறப்படும். வங்க எல்லைக் கமிஷனுக்கும் இதைப் போன்றே தாக்கீதுகள் கொடுக்கப்படும். ஓர் எல்லைக் கமிஷனின் யாதாஸ்து அமுலுக்கு வரும் வரை, அனுபந்தத்தில் கண்டுள்ள தற்காலிகமான எல்லைகளே உபயோகிக்கப்படும்.

10. மேலே 4-வது பாராவில் கண்டுள்ளவற்றுள் எதை ஏற்பது என்பதை, ஸிந்து மாகாண சட்டசபை (ஐரோப்பிய அங்கத்தினர்களைத் தவிர்த்து) தன்னுடைய விசேஷக் கூட்டத்தில் தானே தீர்மானித்துக்கொள்ளும்.

11. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் நிலைமை விதிவிலக்கானது. இந்த மாகாணத்தின் மூன்று பிரதிநிதிகளுள் இருவர் தற்போதுள்ள அ. நி. சபையில் ஏற்கெனவே பங்கெடுத்து வருகிறார்கள். பஞ்சாப் முழுவதுமோ, அல்லது அதன் ஒரு பாகமோ தற்போதுள்ள அ. நி. சபையில் சேருவதில்லை யெனத் தீர்மானித்தால், எல்லைப்புற மாகாணத்தின் பூகோள அமைப்பையும், மற்ற விஷயங்களையும் கருதி, தன் நிலைமையைப் புனராலோசனை செய்வதற்கு அதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், 4-வது பாராவில் கண்டவற்றுள் எதை மேற்கொள்ள விரும்புகிறார்கள் என்பதைத் தீர்மானிக்க, வடமேற் கெல்லை மாகாணத்தின் தற்போதைய சட்டசபையைத் தேர்ந்தெடுத்தவர்களிடம் சர்வ ஜனவாக்கு எடுக்கப்படும். கவர்னர் ஜெனரலின் ஆதரவிலும், மாகாண சர்க்காரின் ஆலோசனையுடனும், இந்தச் சர்வஜன வாக்கு எடுக்கப்படும்.

12. பிரிட்டிஷ் பலுஜிஸ்தானம் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆனால், அவர் தற்போதைய அரசியல் நிர்ணய சபையில் கலந்துகொள்ளவில்லை. அதன் பூகோள அமைப்பை உத்தேசித்து, தன் நிலைமையைப் புனராலோசனை செய்யவும், மேலே 4-வது பாராவில் கண்டவற்றுள் எதில் சேருவது என்பதைத் தீர்மானிக்கவும், இந்த மாகாணத்திற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும். இதை மிகப் பொருத்தமாகச் செய்வதை மே. த. கவர்னர் ஜெனரல் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்.

13. அஸ்ஸாம், முஸ்லிமல்லாதார் மிகப் பெரும்பான்மையாயுள்ள மாகாணம். ஆயினும், வங்காளத்தை ஒட்டியிருக்கும் ஸில்ஹெட் ஜில்லா முஸ்லிம் பெரும்பான்மையானது. வங்காளம் பிரிக்கப்படுமானால், அதனுடைய முஸ்லிம் பிரிவுடன் ஸில்ஹெட் ஜில்லா சேர்க்கப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. எனவே, வங்கம் பிரிக்கப்படுமானால், கவர்னர் ஜெனரலின் ஆதரவின் கீழும்; அஸ்ஸாம் மாகாண சர்க்காரின் ஆலோசனையுடனும், ஸில்ஹெட் ஜில்லாவில் சர்வஜன வாக்கு எடுக்கப்படும். அஸ்ஸாம் மாகாணத்தின் ஒரு பகுதியாகவே ஸில்ஹெட் இருப்பதா, அல்லது, புதிய கீழ் வங்காள மாகாணத்துடன்—அந்த மாகாணம் இஷ்டப்படுமானல்—இணைக்கப்படுவதா என்பதை இந்

தச் சர்வஜன வாக்குத் தீர்மானிக்கும். கீழ் வங்காள மாகாணத்துடன் இணைப்பது என்று சர்வஜன வாக்குத் தீர்மானிக்குமானுல், ஸில்ஹெட் ஜில்லாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாயுள்ள பிரதேசங்களேயும், அதற்குப் பக்கத்தில் உள்ள ஜில்லாக்களின் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசங்களேயும் வரையறுப்பதற்காகப் பஞ்சாப், வங்காளம் ஆகியவற்றின் எல்லேக் கமிஷன்களுக்குள்ள அதே அலுவல்களுடன் ஓர் எல்லேக் கமிஷன் நியமிக்கப்படும். பிறகு, இந்தப் பாகங்கள் கீழ் வங்காளத்துக்கு மாற்றப்படும. எப்படியும், அஸ்ஸாம் மாகாணத்தின் மற்றப் பகுதிகள், தற்போதுள்ள அ. நி. சபையின் நடவடிக்கைகளில் மேற்கொண்டும் கலந்துகொள்ளும்.

14 வங்காளமும், பஞ்சாப்பும் பிரிக்கப்படுவது நிச்சயமானுல், 1946, மே, 16-ம் தேதிய பிரிட்டிஷ் மந்திரி சபைத் திட்டத்தில் அடங்கிய கொள்கைக்கேற்ப, 10 லட்சம் பேருக்கு ஒருவர் வீதம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகப் புதிய தேர்தல்கள் நடத்துவது அவசியமாயிருக்கும். ஸில்ஹெட் ஜில்லா கீழ் வங்காளத்தில் சேருவது என்று தீர்மானிக்கப்படுமானுல், அங்கேயும் புதுத் தேர்தல்கள் நடைபெற வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்துக்கும் எத்தனை பிரதிநிதிகள் அனுப்ப உரிமையுண்டு என்பது கீழே கூறப்படுகிறது:—

மாகாணம்	பொது	முஸ்லிம்கள்	சீக்கியர்கள்	மொத்தம்
ஸில்ஹெட் ஜில்லா	1	2	இல்லை	3
மேற்கு வங்காளம்	15	4	இல்லை	19
கிழக்கு வங்காளம்	12	29	இல்லை	41
மேற்குப் பஞ்சாப்	3	12	2	17
கிழக்குப் பஞ்சாப்	6	4	2	12

15. இப்படியுள்ள பல்வேறு பிரதேசங்களின் பிரதிநிதிகளும், அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அனுசரித்து, புதிய அ. நி. சபையில் சேருவார்கள். அல்லது புதிய அ. நி. சபையை அமைப்பார்கள்.

16. இப்படித் தீர்மானிக்கப்படும் ஏதேனும் ஒரு பிரிவினை காரணமாக எழும் நிர்வாகப் பிரச்னைகள் பற்றி, கூடிய விரைவில், கீழ்க்கண்டவாறு பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பெற வேண்டும்.

(அ) பாதுகாப்பு, நிதி, போக்குவரத்து ஆகியவை உட்பட, இப்போது மத்திய சர்க்காரால் நிர்வகிக்கப்படும் எல்லா விஷயங்களையும் பற்றி அந்தந்த அதிகார சபைகளுக்கு வாரிசாக வருபவைகளுக்கிடையேயும்,

(ஆ) அதிகார மாற்றம் காரணமாக எழும் விஷயங்கள் பற்றி, வெவ்வேறு அதிகாரசபை வாரிசுகளுக்கும், பிரிட்டிஷ் சர்க்காருக்கும் இடையேயும்,

(இ) பிரிவினை செய்யப்படலாம் என்றிருக்கிற மாகாணங்களின் விஷயத்தில், ஆஸ்திகள், கடன் பொறுப்புக்கள், போலிஸ், மற்ற நிர்வாகங்கள், ஹைகோர்ட்டுகள், மாகாண ஸ்தாபனங்கள் முதலிய

மாகாண நிர்வாகங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடக்கும்.

17. இந்தியாவின் வடமேற்கிலுள்ள மலைஜாதியினருடன் உள்ள ஒப்பந்தங்கள், பொருத்தமான அதிகார வாரிசு சபையால் பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டியிருக்கும்.

18. மேலே அறிவிக்கப்பட்டிருக்கும் தீர்மானங்கள் பிரிட்டிஷ் இந்தியாவை மட்டும்தான் கட்டுப்படுத்துமென்றும், *1946*, மே, 12-ம் தேதிய மந்திரி சபை யாதாஸ்தில், இந்திய சமஸ்தானங்கள் பற்றித் தாங்கள் குறிப்பிட்டிருக்கும் கொள்கை அப்படியேதான் இருக்கிற தென்றும் மன்னர் சர்க்கார் தெளிவுபடுத்த விரும்புகிறார்கள்.

19. அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராவதற்கு அதிகார வாரிசு சபைக்கு அவகாசம் இருக்கும்பொருட்டு, மேற்குறிப்பிட்ட நடைமுறைகள் எல்லாம் கூடிய விரைவில் பூர்த்தியாவது அவசியம். தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, திட்டத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காரிய சாத்தியமான அளவு சுதந்தரத்துடன், மாகாணங்கள் அல்லது மாகாணத்தின் பகுதிகள் காரியங்களை நடத்திச்செல்ல வேண்டும். தற்போதுள்ள அ. நி. சபையும், புதிய அ. நி. சபையும் (இது அமைக்கப்படுமானால்) அவ்வவைகளின் பிரதேசங்களுக்கான அரசியலமைப்பை வகுக்கத் தொடங்கும். நிச்சயமாக, தங்களுடைய சட்டங்களைத் தாங்களே வகுத்துக்கொள்ள அவை சுதந்தரம் பெற்றிருக்கும்.

20. எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் இந்தியாவில் அதிகார மாற்றம் ஏற்பட வேண்டுமென்பதே தங்கள் விருப்பம் என்று பிரதான அரசியல் கட்சிகள் பன்முறையும் வற்புறுத்தி வந்திருக்கின்றன. இந்த விருப்பத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பூரண அனுதாபம் உண்டு. அதிகார மாற்றத்துக்கான *1948*, ஜூன் மாதக் கெடுவை எதிர் நோக்கும் வகையில், அதற்கு முன்னதாகவே ஒரு சுதந்தர இந்திய சர்க்காரையோ அல்லது சர்க்கார்களையோ அமைக்கவும் அவர்கள் தயாராயிருக்கிறார்கள். எனவே, இந்த விருப்பத்தை நிறைவேற்ற, மிக விரைவானதும், நிச்சயமாகக் காரிய சாத்தியமானதுமான வழியாக, இந்த அறிவிப்பின் பலனாக ஏற்படும் முடிவுகளை ஒட்டி ஏற்படும் ஒன்று அல்லது இரண்டு வாரிசு சபைகளுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்கும் அடிப்படையில் இந்த வருஷத்திலேயே அதிகாரத்தைமாற்றுவதற்கான சட்டத்தைத் தற்போதைய பார்லிமென்ட் கூட்டத்திலேயே கொண்டுவரப் பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். இந்திய அரசியல் நிர்ணய சபைகள், இந்தியாவில் தாங்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் பிரதேசம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள் இருப்பதா, வேண்டாமா என்பதை உரிய காலத்தில் முடிவு செய்யும் உரிமைக்குக் குந்தகம் விளையாத விதத்தில் இது இருக்கும்.

21. மேற்கண்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் எழும் விஷயங்கள் அல்லது மற்றப் பிரச்னைகள் பற்றிய அறிவிப்புக்களை அவசியமான சமயங்களில், அவ்வப்போது, மே. த. கவர்னர் ஜெனரல் மேலும் வெளியிட்டு வருவார்.

அனுபந்தம்

1941-ல் எடுக்கப்பட்ட ஜன சங்கியைப்படி பஞ்சாப்பிலும், வங்காளத்திலும் உள்ள முஸ்லிம் பெரும்பான்மை ஜில்லாக்கள்.

1. பஞ்சாப்

லாகூர்ப் பிரிவு: குஜரன்வாலா, குர்தாஸ்பூர், லாகூர், ஷேகுபுரா, ஸயால்கட்.

ராவல்பிண்டி பிரிவு:— அட்டாக், குஜ்ரத், ஜீலம், மியன்வாலி, ராவல்பிண்டி, ஜாபூர்.

மூல்டான் பிரிவு:— டேரா காஜி கான், ஜாங் லயால்பூர், மாண்ட் கோமரி, மூல்டான், முஜபர்கார்.

2. வங்காளம்

சிட்டகாங் பிரிவு:— சிட்டகாங், நவகாளி, திப்பேரா.

டாக்கா பிரிவு:— பகேர்கஞ்ஜ், டாக்கா, பரித்பூர், மைமன்சிங்.

ராஜதானி பிரிவு:—ஜெஸ்ஸோர், மூர்ஷிதாபாத், காடியா.

ராஜ்ஷாஹி பிரிவு:— போக்ரா, தினஜ்பூர், மால்டா, பாப்னு, ராஜ்ஷாஹி, ரங்க்பூர்.

*

ஒரே விரோதி

மனிதனுடைய நல்வாழ்வுக்கும் சுதந்தரத்திற்கும் விரோதியாக இருப்பவை ஏகாதிபத்தியங்கள்.

— டி. டாக்வெல்லி

எது சுதந்தரம்?

உங்களுக்குத் தடைகள் விதிப்பதற்காக ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமைக்குத்தான் சுதந்தரம் என்று பெயர்.

—டப்ளின் ஒபினியன்

பழமொழிகள்

பணத்துக்காகக் கல்யாணம் செய்துகொள்ளாதே; பணத்தை இலகுவாகக் கடன் வாங்கிக்கொள்ள முடியும். —ஸ்காட்லாந்துப் பழமொழி

வாழ்க்கையின் ரகசியம் என்ன வென்றால் நீ விரும்புவதைச் செய்வதல்ல; நீ செய்வதை விரும்புவதுதான்.

—ஹென்றி டேவிட்டாப் சேகரித்த பழமொழி

எவனாவது உன்னை ஒருமுறைக் காட்டிக் கொடுத்தால் அது அவன் குற்றம்; அவன் இருமுறை காட்டிக் கொடுத்தால் அது உன் குற்றம்.

—ருமேனியப் பழமொழி

கல்யாணம் செய்துகொண்டவன் வருத்தப்படலாம்; கல்யாணம் செய்துகொள்ளாதவன் வருத்தப் படுவான்.

—செக்கோஸ்லோவியப் பழமொழி

அறியாதவனாகவும், தான் அறியாதவன் என்பதை அறியாதவனாகவும் உள்ளவன் முட்டாள்; அவனை ஒதுக்கிவிடு.

அறிந்தவனாகவும், தான் அறிந்தவன் என்பதை அறியாதவனாகவும் உள்ளவன் தூங்குகிறான்; அவனை எழுப்பு.

அறியாதவனாகவும் தான் அறியாதவன் என்பதை அறிந்தவனாகவும் உள்ளவனை அறைய வேண்டும். அறை.

ஆனால், அறிந்தவனாகவும், தான் அறிந்தவன் என்பதை அறிந்தவனாகவும் உள்ளவன் அறிஞன்; அவனை அறிந்துகொள்.

—ஒரு கீழ்நாட்டுப்பழமொழி



இந்தியாவின் புதுக்கோலம்

மவுண்ட்பாட்டன் - ஆட்லி தீர்ப்பின் விளைவாக நமது நாடு துண்டாக வெட்டுப்படுவதை மேலே இருக்கும் படம் காட்டுகிறது.

1. "சுதந்திரம் பெற்ற" 584 சமஸ்தானங்கள் நாட்டின் நிலப் பகுதியில் கால்வாசியை விழுங்கி 9 கோடி மக்களை எதேச்சாதிகார ஆட்சியின் கீழ் வதைத்து, ஏகாதிபத்தியங்களுக்குப் பொருளாதார, ராணுவ தளங்களாக அமைந்துவிடுகின்றன.

2. வங்காளமும், பஞ்சாப்பும் இரு துண்டுகளாக வெட்டப்படுகின்றன. எல்லை நிர்ணயப் பிரச்னையில் ஹிந்து - முஸ்லிம் - சீக்கியர் சண்டைக்கு விதை போட்டாகி விட்டது.

3. எல்லைப்புற மாகாணம், பலுஜிஸ்தான் மாகாணங்களில் வோட் எடுத்து பிரிவினையை முடிவு கட்டுவது என்ற பெயரால் பயங்கரமான வகுப்புவாதக் கலகத்துக்கு திட்டமிடப்பட் டிருக்கிறது.

4. சில்ஹெட் ஜில்லாவில் (இன்று அஸ்ஸாம் மாகாணத்திலுள்ளது) சர்வஜன வோட் எடுப்பது என்று சாக்கிட்டு அஸ்ஸாம், வங்காள மாகாணங்களிலுள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சண்டை மூட்டி விடப்படுகிறது.

5. வடமேற்கு எல்லைப்புற மலை ஜாதியினருக்கு—இந்திய சமஸ்தானதிபதிகளுக்குப் "பூர்ண சுதந்தர அரசுரிமை" வழங்கியமாதிரி—"சுதந்தரம்" வழங்கிக் கைபர் கணவாயில் ஏகாதிபத்தியம் குந்தியிருக்கத் திட்டமிட்டிருக்கிறது.

இந்தத் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படக் காரணம்? மத அடிப்படையில் பிரிவினை கேட்கும லீக்கின் போக்கும், தேசிய இனங்களிடையே அரசுரிமை வேட்கை வளுத்து வருகையில் பூர்ண சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதில் காங்கிரஸ் சரியான கொள்கையை வகுத்துக் காட்டாது விட்டதும் சேர்ந்து, லீக் - காங்கிரஸ் விரோதங்களை வளர்த்து, ஏகாதிபத்தியத்திடம் சமரசத்துக்குப் போகும்படி செய்து மவுண்ட்பாட்டன் தீர்ப்புக்கு அடிகோலிவிட்டன.



நாம் விரும்பும் இந்தியா

சுய நிர்ணய உரிமையை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு தேசிய இனமும் அரசுரிமை பெற்று ஒரே குடும்பமாகக் கூடி வாழ உகந்த இந்தியாவின் அமைப்புத்தான் மேலே படத்தில் காட்டப்பட்டுள்ளது: இந்தியாவில் உள்ள, கலாசாரம், பாஷை ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்ட, தேசிய இனங்கள் மொத்தம் பதினேழு. சுய நிர்ணய உரிமையுடன் இந்தத் தேசிய இனங்கள் வாழச் சுதந்தரம் அடைந்தால் இந்தியாவைத் துண்டு துண்டுகளாக வெட்ட வேண்டிய அவசியமில்லை. ஐக்கிய, சுதந்தர, ஜனநாயக நாடாக இந்தியா புது மலர்ச்சி பெறும். அப்போது சகோதரச் சண்டைகளும் இரா; ஏகாதிபத்தியம் வந்து தலையிடவோ, தலை காட்டவோ வேண்டிய சந்தர்ப்பமும் இராது.

1. இலக்கமிட்ட பிரதேசத்தில் வங்காளிகள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பிரதேசத்தை வங்காளத்துடன் சேர்க்க வேண்டுமா, அஸ்ஸாமுடன் சேர்க்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

2. இலக்கமிட்ட பிரதேசத்தில் ஆந்திரர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். அவர்களும் தங்கள் பிரதேசத்தை ஆந்திர தேசத்தில் சேர்க்க வேண்டுமா, ஒரிஸ்ஸாவில் சேர்க்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

மவுண்ட்பாட்டன் கைங்கரியம்

பி. ஸி. ஜோஷி

இந்தியாவை விட்டுப் பிரிட்டிஷார் வெளியேறப் போவதாக 1947-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதி பிரதமர் அட்லி சொன்னவுடன் ஏகாதிபத்தியக் கிழமாகிய சர்ச்சில் கோபாவேசத்துடன் சீறி விழுந்தார். ஆனால், இப்போது இந்தியாவை விட்டு வெளியேறும் புதுப் பிரிட்டிஷ் திட்டம் வெளியிடப்பட்டதும், சர்ச்சிலுக்குக் குஷியாகிவிட்டது.

பிப்ரவரி 20-ம் தேதி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் 'தாக்குப் பிடிக்க'முடியாதஒரு சந்தர்ப்பம். ஏனென்றால், அப்போது காங்கிரஸ் தலைமை கொடுத்துவந்த நிர்ப்பந்தத்துடன், காங்கிரஸில் சேராதிருக்கும் தொழிலாளர் வர்க்கமும், விவசாயிகளும், சமஸ்தானப் பிரஜைகளும் ஒன்றுபட்டுக் காங்கிரஸுக்கு ஆதரவளித்துப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழித்து, சுதந்தரம் அடைய வேண்டுமென்று போராடின.

சுதந்தர இயக்கம் இந்தியா முழுவதற்கும் பரிபூரண சுதந்தரத்தைக் கோரி நின்றது. எதற்காக? இந்தியாவின் மூலப் பொருள்களை அபிவிருத்தி செய்யவும், உலகில் இந்தியா ஒரு பெரிய ஜனநாயக நாடாக விளங்கி, தன் பணியை ஆற்றவும்தான் சுதந்தரம் கோரினர். ஆகவே, இந்தச் சுதந்தர இயக்கத்தின் மீது தொடுத்த தாக்குதலாக ஜூன் மாதம் 3-ம் தேதி அறிக்கை வெளிவந்தது.

1948, ஜூனில் சுதந்தரம் கிடைத்துவிடும் என்று நம் நாட்டவர்கள் பலர் உறுதியோடு நம்பிக்கொண்டிருந்தபோதுகூட, நம் கட்சி, ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கையில் அதிகாரத்தை மாற்றியளிப்பதன் மூலம் பிரிட்டிஷார் இந்தியாவில் உள் நாட்டுப் போரை அதிகமாக்கத்தான் ஏற்பாடு செய்கிறார்கள் என்று அழுத்தமாக எச்சரித்தது. பிப்ரவரி 20-ம் தேதி அறிக்கைக்குப் பின் எல்லைப்புற மாகாணத்திலும் வங்காளத்திலும் கலகங்கள் ஏற்படத் தொடங்கின.

உள் நாட்டுக்கலகமாக மாறும் அளவுக்குக் காங்கிரஸ்-லீக் வித்தியாசங்களைப் பெரிதாக்கிவிட்டு, இந்தியாவைப் பிரிவினை செய்யும்

இது பீப்பிள்ஸ் ஏஜில் வெளியான தலையங்கம். எழுதியவர் அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசி; இந்தியாவில் உள்ள தலை சிறந்த அரசியல் ஞானிகளில் ஒருவர். உள்ள நிலையைப் பரிசிலனை செய்து திர்க்கதரிசனமாக எதிர்கால அரசியல் விமோசனத்துக்கு வழிகாட்டும் கட்டுரைகளை எழுதுவதில் இன்று, ஜோஷிககு இணை ஜோஷியேதான.

பொறுப்பை இந்தியர்களின் தலையிலேயே சுமத்தியிருக்கிறது ஏகாதிபத்தியக் கொள்கை. மவுண்ட்பாட்டன் பிரபு அறிவித்த திட்டத்தின் நடைமுறையே, எல்லை நிர்ணயம் செய்யும் விஷயத்தில் தகராறு ஏற்படும் முறையில் நய வஞ்சகமாக அமைந்துள்ளது. உடனடியாகப் பிரிவினை செய்வதற்கு, 1941-ம் வருஷம் எடுக்கப்பட்ட ஜன சங்கியைக் கணக்கு ஆதாரமாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ஆனால், முடிவான எல்லை நிர்ணயத்துக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றிப் பிரஸ்தாபமே கிடையாது. கடைசியில், இந்த விஷயமாகக் கிளம்புகின்ற அபிப்பிராய வேற்றுமைகளெல்லாம் பிரிட்டிஷ் வைஸ்ராயின் அபிப்பிராயத்தைக் கலந்துகொண்டபின்தான் தீர்த்து வைக்கப்படும்.

எல்லைப்புற மாகாணத்தில் மவுண்ட்பாட்டன் பிரபுவின் ஆதரவிலேயே ஓட்டெடுக்கும் காரியம் நடைபெறப் போகிறது. அப்போது அங்கே பட்டாணியனைப் பட்டாணியனே எதிர்த்து நிற்கும் நிலைமை ஏற்படப் போகிறது.

வங்காளத்தில் போஸ்—ஹஷீம் ஒற்றுமை தகர்த்தெறியப்பட்டு விட்டது. கல்கத்தாவுக்காகப் போராட்டமும் ஏற்படப்போகிறது. முடிவில் வைஸ்ராய்தான் தலையிட்டு 'நடுநிலைமை வகிக்கும்' பிரிட்டிஷ் கண்காணிப்பின் கீழ் உள்ள 'சுதந்தர நகரமாக'க் கல்கத்தாவை மாற்றி அதன் தலைவிதியை நிர்ணயிப்பார்.

பஞ்சாப்பில் இந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களும் பல பகுதிகளில் சேர்ந்து சேர்ந்து வாழ்கிறார்கள். அங்கே, ஜென்கின்ஸ் ஆட்சியில், ஜனத்தொகைக் கணக்கெடுக்கும் பிரச்னையைத் தீர்க்கும்போது, சிறுபான்மையினரைச் சுட்டுப் பொசுக்க வென்று ஆயுதம் தாங்கிய கூட்டங்கள் மிக மிகத் தாராளமாக நடமாடுகின்றன.

ஏகாதிபத்தியத்தின் நோக்கம்: பிரிட்டிஷ் திட்டம் நிர்த்தாரணம் செய்யும் பிரிவினைக்குச் சமாதானம் என்று அர்த்தமல்ல; உடனடியாகச் சகோதரச் சண்டையை அதிகப்படுத்துவது என்றுதான் அர்த்தம். இந்த உள்நாட்டுப் போராட்டத்தின் பின்னணியில் இருந்து, லீக் வற்புறுத்தும் பிரிவினைக் கோரிக்கையையும், சுய நிர்ணய உரிமை வழங்கும் விஷயத்தில் காங்கிரஸ் முற்போக்கடையாமல் இழைத்த தவற்றையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, பிரிட்டிஷ் இந்தியாவை இரண்டு பகுதிகளாகத் துண்டாடி, கீழ்க்கண்ட காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டும் என்பது தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நோக்கம்:

1. சர்வதேசிய ரீதியில் ஏகாதிபத்தியத்தின் நோக்கமாவது: இந்தியாவின் பிற பகுதியிலிருந்து எல்லைப்புற மாகாண முஸ்லிம் பெரும்பான்மையினரைப் பிரிப்பார்கள். அவர்களை ஆங்கில ஏகாதிபத்தியமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் சேர்ந்து முஸ்லிம் பிற்போக்காளர்களின் தலைமையில் கட்டி வளர்த்து வரும் முஸ்லிம் கோஷ்டியினருடன் சேர்ப்பார்கள். அதன் மூலம் கெய்ரோவிலிருந்து லாகூர்வரை சோவியத் யூனியனுக்கு விரோதமாக ஒரு தளத்தைச் சிருஷ்டிப்பார்கள்.

2. பொருளாதார ரீதியில் என்ன நோக்கம்? பிரிவினையின் மூலம் இந்தியாவைப் பலஹீனப் படுத்துவார்கள். வட மேற்குப் பகுதியில் வளர்ச்சியுறாமல் கிடக்கும் மூலப் பொருள்களையெல்லாம், பலஹீன மடைந்துள்ள முஸ்லிம் முதலாளிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு கைப்பற்றிக்கொள்ளுவார்கள்.

புதிய பிரிட்டிஷ் திட்டத்தின்படி இந்தியாவை முஸ்லிம் இந்தியா, இந்து இந்தியா என்று பிரிப்பதோடு பிரிவினை சமாச்சாரம் முடிந்துவிடவில்லை. பழைய மந்திரி சபைத் தூது கோஷ்டி திட்டத்தின்படி சமஸ்தான மன்னர்களின் 'சுதந்தர'மும் பழையபடியும் நிலை நாட்டப்படும். அவர்களுக்கு அரசியல் நிர்ணய சபைகளில் சேரவோ, அதன் மூலம் உள்ளே இருந்துகொண்டே பிரிட்டிஷ்காரர்களுக்கு ஐந்தாம் படையாக வேலை செய்துவரவோ, அல்லது சுதந்தரமாக இருக்கவோ உரிமை உண்டு. சுதந்தரமாக இருப்பது என்றால் வெளிப்படையாகப் பிரிட்டிஷ் தளங்களாக இருந்து வருவது என்றுதான் அர்த்தம். இந்தியாவில் ஏகாதிபத்தியம் அமுல் நடத்தும் எதேச்சாதிகாரக் கொள்கையை ஆதரிக்கும் 'பம்பாய் டைம்ஸ்' பத்திரிகை பத்து அல்லது பன்னிரண்டு இந்தியச் சமஷ்டிகளை ஏற்படுத்த வேண்டும் என்று யோசனை கூறுகிறது.

காங்கிரஸ் பெரும்பான்மையாக இருக்கும் பெரும் பிரதேசங்களில் ஜனநாயக சுதந்தர இயக்கம் பலமாக இருக்கிறது; அது பிரிட்டிஷ் ஆட்சிக்குச் சவால் விடுகிறது. இந்தப் பிரதேசங்களில் பிரிட்டனுடைய பொருளாதார, ராணுவக் கண்காணிப்புகளை ஒப்புக்கொள்ளும்படி காங்கிரஸ் தலைமையை நிர்ப்பந்தப்படுத்த முடியாமல் போய்விட்டால், பிரிட்டிஷ் திட்டம் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு இந்தியாவைப் பல பகுதிகளாகத் துண்டாடவே காத்திருக்கிறது.

மவுண்ட்பாட்டன் தம் தலைவராகிய சர்ச்சிலின் ஆசீர்வாதத்துடன் கொண்டுவந்த திட்டம் உண்மையில் இந்தியாவை விட்டு வெளியேறும் திட்டமல்ல; அதற்குப் பதிலாக அது, எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமாகப் பல பொருளாதார ராணுவக் கட்டுப்பாடுகளைத் தன் கையில் வைத்துக்கொண்டு, இந்தியா பரிபூரண சுதந்தரம் பெற்று உடனடியாக முன்னேறி வளர்ச்சிபெறவிடாமல் தடுக்கும் திட்டமாகத்தான் இருக்கிறது.

மாற்றவும் முடியும்

மோசமான இந்தப் பிரிட்டிஷ் திட்டத்தில் அடங்கியிருப்பது பிரிட்டனுடைய பலம் அல்ல; இந்தியாவில் பிரிட்டனுக்கு ஏற்பட்டுள்ள பலஹீனமே உள்ளே பதுங்கியுள்ளது. ஆகவே, இந்தியாவை நேரடியான முறையில் பரிபாலனம் செய்வது இனி நடவாத காரியம் என்ற பலஹீனத்தை உணர்ந்துகொண்டது ஏகாதிபத்தியம். 1948, ஜூனில் அதிகாரத்தை மாற்றுவதாக வாக்களித்ததே இந்தப் பலஹீனத்தை வெளிப்படையாக ஒப்புக்கொண்டதுதான். இந்த வாக்குத்தத்தத்தை மவுண்ட்பாட்டன் திட்டம் மேலும் மேலும் உறுதிப்படுத்தினாலும், சுற்றிலும் நிலவியுள்ள நிலையை மேலும் மேலும் படுமோசமாக்கினாலும், இத்திட்டம் டொமினியன் அரசாங்

பேபி கமலாவின் அழகுபடுத்திக்கொள்ளும் முறை

லக்ஸ் டாய்லட் சோப்...

கட்டழகி கமலாவின் அப்பழுக்கற்ற இனிதான வதனமே அவரது கவர்ச்சிக்கு முக்கிய காரணம். நீடித்து நிற்கும் சரும எழிலின் ரகசியம் தவறாமல் ஒரு அழகுபடுத்திக்கொள்ளும் முறையை கையாள்வதுதான் என்பது அவருக்குத் தெரியும். ஆகையால், சரும பாதுகாப்பில் தனி சிரத்தை யெடுத்துக்கொள்கிறார். லக்ஸ் டாய்லட் சோப்பின் தாராளமாயுண்டாகும் நறுமணங்கொண்ட நுரை அவர் சருமத்தை குளுமையாகவும், மிருதுவாகவும், சுத்தமாகவும் வைத்துக்கொள்கிறது. நீங்களும் ஏன் கமலாவைப்போல் இந்த வெண்மையான குற்றமற்ற சோப்பைக் கொண்டு உங்கள் வதன எழிலை காப்பாற்றக்கூடாது?

எ.வி.எம் பிரொடக்ஷன்ஸாரின் "நாம் இருவர்" என்ற புதுப் படத்தில் பேபி கமலாவை பார்க்கலாம். இந்த சமுகப் படத்தில் அவரது சிறந்த நடிப்பு அவருக்கு தனிப் பெருமையளிக்கும்.



லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களுக்கு அழகுதரும் சோப்

LTS. 162-50-40 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

பொன் விழாவின் உதயம்

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

வியாதியினல் அவதிப்படும் மனித சமூகத்துக்கு சேவை புரிவதில் ஐம்பதாவது வருஷம் ஆரம்பமாகின்றது. என்றும் போல் இன்றும் ஜீவாம்ருதம் வியாதிக்குப் பின் குணம் பெறுவோர், பலஹீனர் அனைவருக்கும் உகந்த அருமையான டானிக்காக விளங்குகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
மதராஸ் 17



இந்தியன் பாங்க்
லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுண்ட் ரோட்,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	... ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	53,00,000
ரிஸர்வ் நிதி	... ரூ.	60,72,602

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்,
செக்ரெடரி.

IBN/101

கங்களை ஏற்படுத்தியாக வேண்டும்.

பண்டித நேரு மிகவும் மனக் கஷ்டத்துடன் மவுண்ட்பாட்டன் திட்டத்தை ஒப்புக்கொள்ளும்படி இந்தியாவைக் கூவியழைத்திருக்கிறார். இது விஷயமாக முடிவு கட்ட வேண்டியது அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி. அந்தக் கமிட்டி கீழ்க் கண்ட விதமாக முடிவு செய்தால், அந்த முடிவை ஒவ்வோர் இந்தியனும் பாராட்டுவான். இந்தியர்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள் இந்தியர்களே ஒழிய பிரிட்டிஷ் வைஸ்ராய் அல்ல என்று நினைத்துப் பூரிப்படைவான்.

1. இந்திய யூனியனின் அரசியல் நிர்ணய சபையில் பாஷாவாரியாகப் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு மாகாணமும் பரிபூரண தேசிய சுய நிர்ணய உரிமையை அடைய வேண்டும்.

2. நிலப் பிரபுத்துவத்தை ஒழித்து, தொழில்களைத் தேசியமயமாக்கி, வளர்ச்சியுறாமல் கிடக்கும் பிற்போக்குப் பிரதேசங்களுக்கு உதவி யளித்து, இவைகளின் அடிப்படையில் ஜனநாயக முறைப்படி இந்தியாவின் பொருளாதார நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும்.

சமஸ்தான மக்கள், உடனடியாகப் பொறுப்பாட்சி பெறுவதற்காகப் பாடுபடுபவர்கள். அவர்கள் இயக்கத்துக்குப் பரிபூரண ஆதர வளிப்பதாகவும் அவர்களுடைய சொந்த அரசியல் நிர்ணய சபைகளுக்கு ஆதர வளிப்பதாகவும், அரசியல் நிர்ணய சபைக்கு அவர்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்புமாறு அவர்களுடைய மன்னர்களை நிர்ப்பந்திப்பதற்கு உதவி யளிப்பதாகவும் வாக்களிக்க வேண்டும்.

இவ்விதமாக நாம் காட்டும் மார்க்கத்தைக் கண்டு பிரிட்டிஷாரின் கைப்பாவைகளான சமஸ்தான மன்னர்கள் கூப்பாடு போடுவார்கள். அதே நேரத்தில் நிலப் பிரபுத்துவத்தின் கீழ் அடிமைகளாக இருந்த கோடிக் கணக்கான மக்கள் புத்துயிர் பெறுவார்கள். இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு ஓர் உண்மையான அடிப்படை கிடைக்கும். காங்கிரஸ் லீக் உடன்பாடும், இரு அரசியல் நிர்ணய சபைகளுக்கிடையில் கூட்டுறவும் ஏற்படும்; அப்போது பிற்போக்குப் பிரிவினையாளர்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ளுவதற்காக ஓட்டமெடுத்துவிடுவார்கள். மேலே குறிப்பிட்ட வழியானது, மவுண்ட்பாட்டன் திட்டம் நம் தேசத்தையும் மக்களையும் துண்டு தூளாக்குவதற்கு முன்பு அந்தத் திட்டத்தையே நொறுக்கி யெறிந்துவிடும்.

முஸ்லிம் லீக் கவுன்சில் விரைவில் கூடப்போகிறது. அது செய்யும் தீர்மானங்களும் முக்கியத்துவம் உடையவை. மவுண்ட்பாட்டன் திட்டம் வந்தபின் சாதாரண முஸ்லிமுக்கு ஏமாற்ற உணர்ச்சிதான் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய மன எக்களிப்புப் பிறக்கவில்லை. 'கடைசியில் எங்களுக்குக் கிடைத்தது தான் என்ன?' என்றுதான் அவன் கேட்கிறான்.

"கொடுத்ததை வாங்கிக் கொண்டு மேலும் முன்னேறிச் சண்டைபோடு" என்ற கொள்கையை லீக் கவுன்சில் நிர்த்தாரணம் செய்தால், அது உள்நாட்டுச் சண்டைக்குத்தான் வழி காட்டும். உள்நாட்டுச் சண்டை

முஸ்லிம்களுக்கும் மற்ற இந்தியர்களுக்கும் ஒன்று போலவே நாசம் விளைவிப்பதாகும். இந்தக் கலை எதிர்த்துப் போராடுவது நம் உள்நாட்டுப் பிரச்னைகளில் பிரிட்டிஷாரைத் தலையிடும்படி வலிய அழைப்பதாகும்.

அது, லீக் பெரும்பான்மையாக இருக்கும் பிரதேசங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் போய்விடுவதற்கு வழி செய்யும். ஏனென்றால், இந்துக்களை எதிர்த்துப் போராடும் அக் கொள்கை பிரிட்டனுக்குச் சாதகமாக லீக்கில் இருப்பவர்களுக்குப் பலமளித்து, ஏகாதிபத்திய எதிரிகளின் பலத்தைக் குறைத்திருக்கிறது. இந்தக் கொள்கை ஒரு சில முஸ்லிம் முதலாளித்துவப் பிற்போக்காளர்கள், மற்றப் பெரும்பான்மை முஸ்லிம்களை அடக்கி யாளுவதையே ஆதரிக்கிறது.

இந்தச் சந்தர்ப்பமானது லீக்கிலுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் நிமிர்ந்து நின்று ஸ்பஷ்டமான பாஷையில் பேச வேண்டுமென நிர்ப்பந்திக்கிறது. அத்துடன், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் எந்தவித சிநேக உறவும் கொள்ளப்போவதில்லை என்பதை நிச்சயம் செய்துகொள்ளுவதற்கு எதைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்த வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். லீக்கும் ஜனநாயக அரசாங்கத்துக்காகவும், நிலப் பிரபுத்துவத்தை ஒழிப்பதற்காகவும், ஜனநாயகப் பொருளாதார முறைக்காகவும் பாடுபடுகிறதே ஒழிய, வகுப்புவாத அரசாங்கத்தைப் பெறப் பாடுபடவில்லை யென்பதையும் பிரகடனப்படுத்த வேண்டும்.

துவேஷத்தைப் பரப்புகிறவர்களுக்கு வெற்றி கிடைக்குமென்றால் அது எல்லோருக்கும் ரௌரவாதி நரகம் கிடைத்தது போலத்தான். எல்லோரையும் விட எல்லைப்புறத்திலும், பஞ்சாபிலும், வங்காளத்திலும, உள்ள முஸ்லிம்களுக்கும், பிற பகுதிகளில் சிறுபான்மையினராக இருந்துகொண்டு பய பீதியில் தன்னம்பிக்கையற்று நடுநடுங்கிக்கொண் டிருக்கும் முஸ்லிம்களுக்கும் அது ஒரு கொடிய நரகமாகும். அதனால் இந்து முஸ்லிம்களின் சுதந்தரமும், நல் வாழ்வும் தாழ்வடைவதுடன், முன்னேறிச் செல்ல வேண்டிய மார்க்கமும் காடு முரடாக, கஷ்டம் நிறைந்ததாக ஆகிவிடும்.

வரக்கூடிய சிக்கல் நிறைந்த மாதங்களில் கம்யூனிஸ்ட் கட்சி செய்யப்போகும் காரியம் இது தான்: எந்த விதத்திலும், புதிய ஆபத்தான ஏகாதிபத்தியத் தாக்குதல்களை முறியடிக்கும்; ஜனநாயக அடிப்படையில் இந்தியர்களின் வித்தியாசங்களைத் தீர்த்து வைக்க உதவி புரியும்; இந்தியா முழுவதற்கும் பரிபூரண சுதந்தரம் கிடைக்கப் பாடுபடுவதில் வெற்றி நிச்சயம் என்பதை ஊர்ஜிதப்படுத்துவதற்கு வேண்டிய எல்லாப் பிரயத்தனங்களையும் செய்துவரும்.

✲

கெட்டதைக் கொல்லு

மனித உள்ளங்கள் ஒன்றை ஒன்று எதிர்த்து நிற்கக் கூடாது. ஆனால், எல்லாம் ஒன்றுசேர்ந்து கெட்டதை எதிர்த்து நிற்க வேண்டும்.

—கார்லைல்

எப்படி இருந்தோம்!

●

பி. சிதம்பரம் பிள்ளை

வடநாட்டு நான்கு சாதிப் பாகுபாடு தமிழ் நாட்டில் வந்த போது தமிழர்கள் முஸ்லிம்களை "அஞ்சாவது ஜாதி" "அஞ்சுவன்னம்" என்று அழைத்து, அவர்களையும் இந்துக்களாகவே கருதி—அன்னியர்களாகக் கருதாமல்—நடத்திவந்தார்கள். இப்பொழுது தக்கலை யென்ற இடத்தில் உள்ள "அஞ்சுவன்னத் தெரு"* இதைக் குறிப்பிடுவதாகும். இது போலவே மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் நடந்துவந்ததாகச் சிலாஸாஸனங்கள் கூறுகின்றன.

தமிழ் நாட்டில் சுமார் ஆயிரத்து எண்ணூறு வருஷங்களுக்கு முற்பட்டே கிறிஸ்தவ மதம் பரவியிருந்ததாகச் சொல்லப்படுகிறது. அவர்களைத் தமிழர்கள் "மணிக்கிராமக்காரர்கள்" என்று அழைத்தார்கள். அவர்களும் இந்துக் கோயில்கள் எத்தனையோ கட்டினார்கள். திருக்குற்றாலத்தில் இவர்கள் சுமார் ஆயிரம் வருஷத்திற்குமுன் கோயிலில் பூஜை வகைக்குத் தானம் செய்ததாகக் கல்வெட்டில் இருக்கின்றது.

மகமதியர்களும் அதுபோலவே நடந்து வந்தார்கள். இப்பொழுது தமிழர்களுக்குள்ளே வழங்கும் "பிள்ளை"ப் பட்டம் டெல்லி முஸ்லிம் சக்ரவர்த்திகளால் தமக்குத் தமிழர்களைக் குறித்து ஏற்பட்ட நம்பிக்கையை உணர்த்தும்பொருட்டு அளிக்கப்பட்ட, பட்டப் பெயராகும். மலையாளத்தில் அரசு செலுத்தி வந்த ஸாமோதிரியும் (Zamorin) இதையொட்டியே முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் "மாப்பிள்ளை" யென்று அழைத்தும், கருதியும் வந்தார். தமிழர்கள், இப்பொழுது வழங்கிவரும் "அரிஜன்" என்ற ஒரு பிரத்தியேக வகுப்பை ஏற்படுத்த விரும்பவில்லை. "அடியான்" என்பது ஒரு வகுப்பைக் குறிப்பிட்டதில்லை. வெள்ளாளர்களும் மற்றப் பள்ளு, பறை முதலானவர்களைப் போலவே, அதே முறையைக் கிருஷி வேலைக்கு அடிமைப்படுத்துவதிலும் கைப்பற்றி வந்தார்கள்.

"அடியான்" என்றால் "பறையன்" என்ற நிலைக்குப் பின்னால் வந்துவிட்டது. பண்டைத் தமிழர்கள் யாரையும் இழிவாகக் கருதினதில்லை; மிகவும் உயர்வாகவே கருதினார்கள்.

"துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இன்னான்கு அல்லது குடியும் இல்லை"

என்று இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே ஒரு பெரும் புலவர் பாடியிருக்கிறார்.

1800 வருஷங்களுக்கு முன்பே தமிழ்நாட்டில் கிறிஸ்தவர்கள் இருந்ததாக ஒரு தகவலைக் கொடுக்கிறார் கட்டுரையாசிரியர். தவிரவும், பல முக்கியமான விவரங்களுடன், தமிழ்நாட்டில் சாதி மத பேதமற்ற சமத்துவ நிலை நிலவி வந்ததையும் குறிப்பிடுகிறார். செல்வியில் வெளிவந்ததின் சில பகுதிகள்.

* தென்காசியிலும் 'அஞ்சுவன்னம் பெரியதெரு' என்ற ஒரு தெரு உண்டு.

— ஆசிரியர், சக்தி

ஏரோப்பிளேனும் வண்டிக்காரனும்

போ. குருசாமி

ஒரு நாட்டுக்குரிய பண்பாட்டின் தன்மையை விளக்கவல்ல கருவிகள் பல. கவிஞர்களின் உள்ளத்தில் முகிழ்த்து மலர்கின்ற பாடல்கள் பண்பாட்டின் சிறந்த நிலைக்களன்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. சிறந்த மொழிக் கல்வியும், உலக அநுபவமும், கவிதைக் கண்களும் பெற்ற கவிஞர் வாக்குகளை விட ஒரு நாட்டின் பண்பாட்டை விளக்கும் வல்லமையில் மற்றொரு சார்பினருடைய மொழிகள் சிறந்திருக்கின்றன.

சிறந்த பாடல்களை இயற்றும் கவிவாணரைக் குறை சொல்வதாக நினைக்க வேண்டியதில்லை. கல்வி, கேள்வி, காட்சி இவை கொண்டு தேடிய அறிவோடு கூடத் தம் சொந்த இயற்கையறிவும் புலவர்களுக்கு உறுதுணையாக ஆகிறது. எனவே, அவர்களுடைய மொழிகளில் பாடியவருடைய தனிப்பட்ட அறிவு, கொள்கை, மனப் பாங்கு என்ற இவைகள் காணப்படுதல் இயற்கையே. நாட்டுப் பண்பாட்டுக்கு முரண்பட்ட சில கருத்துக்களும் இத்தகைய வாக்குகளில் இருத்தல் கூடுமல்லவா? சிறந்த கவிகள் தம் நாட்டுக்கே யுரிய பண்பாட்டை விளக்குவதில் கண்ணுங் கருத்துமாய் இருப்பார்கள் என்பது உண்மையே. ஆனால், தம் நாட்டுப் பண்பில் எவ்வளவு ஆழ்ந்த பற்றும், தீவிரமும் காட்டுவார்களோ, அவ்வளவு பற்றும் தீவிரமும் தம்முடைய சொந்த அறிவில் விளைந்த கருத்துக்களிலும் காட்டுவார்கள் என்பதும் உண்மைதான். தம் நாடு முன்னேற வேண்டும், சிறப்படைய வேண்டும் என்ற ஆவல்தான் இந்தப் போக்குக்குக் காரணம்.

பள்ளிக்கூடத்தின் நிழலிலும் ஒதுங்காமல், எழுத்து வாசனையென்பதை மருந்துக்கும் அறியாமல் வாழ்கின்ற நாட்டுப்புறத்து மக்கள் நம் நாட்டில் அளவில்லாமல் இருக்கிறார்கள். கற்றுச் சிறப்படைந்துவிட்டதாகக் கருதும் பட்டின வாசிகளின் நாகரிகக் காற்றுக்கூட அவர்கள் மீது வீசியதில்லை. அப்படிப்பட்ட நாட்டுப்புற மக்கள் வெளியிடும் மொழிகள் நம் நாட்டுப் பண்பாட்டின் உயிர் நாடியினை நன்றாக விளக்கும் ஆற்றலுள்ளன. வெளி யுலகின் பேய்க் காற்று அவர்களுடைய அமைதியான உலகத்தில் இல்லை. மேலை நாட்டுப் போலி நாகரிக விஷக் காற்று அவர்களுடைய வெள்ளையுள்ளத்தை நீல மயமாக்கவில்லை. நம் நாட்டுப் பண்பாடு எப்படிப்பட்டது என்று அறிய வேண்டுமானால், அவர்களிடம்தான் போகவேண்டும்.

இன்றைய கல்வி முறை நம் நாட்டுக் குகந்ததன்று என்று தலைவர்கள் சொல்லி வருகிறார்கள். படித்தவர்க்கும் நமது ஆன்மப் பண்பாட்டுக்கும் உள்ள தூரத்தைப் பார்த்தால், 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்

ஒரு நாட்டுப் பாட்டின் உட்கருத்துக்கள் இங்கே விளக்கப்பெறுகின்றன. சாதாரண நாட்டுப்புறத்தான் பாட்டிலே பெரிய தத்துவ ஆசிரியர்களும் வியக்கும்படியான கருத்துக்கள் செறிந்து கிடக்கின்றன.

Coiffures OF INDIA

A typical ancient coiffure of Bengal.

வங்க தேசத்தின் புராதன முடி வகைகளில் ஒன்று

புராதன இந்தியக் கலை இப்பொழுது மறுபடியும் சிறிது சிறிதாக அதன் சுய உருவைப் பெறுகிறது. பழங்காலத் தாய்மார்களின் முடி அலங்காரம் இன்று வங்கத்திலே புத்துயிர் பெறுகின்றது.

ஆனால் இன்று, வாஸனை கலந்த *ஸ்வஸ்திக் காஸ்டர் ஆயில்* உபயோகிப்பதால் முடியலங்காரத்திற்கு அதிகமான அழகைக் கொடுக்கிறது. கேசத்தை நன்கு வளர்த்து, புதுமையும் பளபளப்பும் அளித்து மனோரம்மியமான வாஸனையும் தருகிறது.

மற்றும் இதர ஸ்வஸ்திக் தயாரிப்புகள் ;—காந்தி, மற்றும் பல டாய்லட் சோப்புகள், ஷேவிங் ஸ்டிக், வாஷிங் சோப், கோவாலின் பிராண்டு வனஸ்பதி முதலியன.

SWASTIK
PERFUMED CASTOR OIL

UNMATCHED FOR QUALITY

SWASTIK OIL MILLS LTD., BOMBAY.

SOM. 1A SHILPI

BE INDIAN — BUY INDIAN !

THE UNITED COMMERCIAL BANK LIMITED

யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2-கோடி

ரிசர்வு நிதி ரூ. 30-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

தென் கிளைகளின் தொகுதி :
சென்னை (மெயின்), சௌகார்பேட்டை,
பெங்களூர், கோயம்புத்தூர், மதுரை,
காரைக்குடி, புதுக்கோட்டை, மைசூர்

தென் கிளைகளின் மானேஜர் :
ஸ்ரீ. கே. ஆர். கே. ஐயங்கார்
310-11, லிங்கி செட்டி தெரு,
சென்னை

எல்லாவிதமான நாணயமாற்று அலுவல்களும் வியாபார விஷயங்களும் கையாளுவதற்குத் தகுதியுள்ளவர்கள்

எங்கள்
3 வருட
காஷ் சர்டிபிகேட்டுகளில்
முதலீடு செய்யுங்கள்

A S.P. U.C. 6

கள்' என்ற வாக்கு நினைவுக்கு வருகிறது.

இவ்வகையான கல்வியைக் கல்லாமல் நல்லவர்களாக வாழுகின்ற நாட்டுப்புற மக்களிடம் போகலாம்.

எங்கெங்கே பார்த்தாலும் பசிய வயல்கள்; அங்கங்கே நீரிறைக்கும் ஏற்றங்கள்; உழவுத் தொழிலைப் பள்ளிக்கூடத்தில் படிக்காமலே தெரிந்துகொண்டிருக்கிற மக்கள்; அவர்களிடம் முறையாகப் பாடம் கேளாமலே அந்தத் தொழிலில் தேர்ச்சியடையும் சிறு பையன்கள்; ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் பாடுபடும் மகளிர்; வாட்டமில்லாத உடம்புடன் நாளெல்லாம் டீ காப்பி இல்லாமலே உழைக்கும் மக்கள். உழைப்பினிடையே காற்றில் மிதந்துவரும் ஏற்றப் பாட்டு, நடவுப் பாட்டு.

இப்படிப்பட்ட காட்சிகளை விட்டு ஊருக்குள்ளே போனல் அங்கேயும் உழைப்பின் மன்னர்களுக்கேற்ற ஓலை அரண்மனைகள். கன்றும் பசுவும், காளையும் கடாவும் கட்டிய கொட்டில்கள்; சேவல் கோழி இவை திரியும் முற்றம்...இவ்வாருன ஓர் அமைதியுலகந்தான் பொதுவாகத் தமிழ் நாட்டுக் கிராமம்.

பெரிய பட்டணங்களிலே தேவாலயங்கள் இருக்கின்றன. மின்சார விளக்குகள், மக்கள் வந்து இருந்துபோகக் கோயிலாரமைத்த பூங்காவனம். அங்கே பாடும் ரேடியோ—இவையெல்லாம் பட்டணக் கோயில்களில் சாதாரணம். ஆனல், தமிழ் நாட்டுக் கிராமக் கோயில்களைச் சென்று பாருங்கள். கட்டிட உருவில் உள்ள கோயில்களே அநேக இடங்களில் கிடையா. மரத்தடியிலே ஒரு கல்—இந்த அளவிலேகூடக் கிராமக் கோயில்கள் உண்டு.

இங்ஙனம் அமைந்த அசல் நாட்டுப்புறத்தை மனத்தால் கற்பனை செய்துகொள்வதுகூடப் பலருக்கு முடியாது. ஓட்டலிலிருந்து காப்பி வரவழைப்பதற்கு டெலிபோன் இல்லையே என்று வருந்தும் இன்றைய பட்டணநாகரிகத்தார் மேலே கூறிய அமைதியுலகத்தை 'அநாகரிகம் தலைவிரித்தாடும் நரகம்' என்றுகூட நினைப்பார்கள். 'நாடு, பண்பாடு என்றவையெல்லாம் கிராமத்தாருக்கு எவ்வாறு விளங்கும்?' என்று இவர்கள் கேட்பார்கள்.

உண்மைதான். கிராம மக்கள் 'நம் நாடு' என்றும் 'உயரிய பண்பாடு' என்றும மார்தட்டிப் பேசிக் கரந்தட்டும் ஒலி கேட்டுப் பெருமையடைய மேடைகளை நாடுவதில்லை. ஆனல், நம் நாட்டுக்கு என்று சிறப்பியல்பு ஒன்று உண்டென்ருல் அது அவர்களிடமே உள்ளது; அவர்களை யறியாமலே அவர்களுக்கு அது சிறப்பைத் தருகிறது. சிறந்த கவிஞர்களுக்கும் இல்லாத சிறப்பு நாட்டுப்புற மக்களுக்கு வலியக் கிடைக்கிறது.

இது அணுக்குண்டுக் காலம். அணுவின் ஆற்றலை உணர்ந்து பயன்படுத்தும் விஞ்ஞானிகளை முடிமன்னரும், முடிசூடா மன்னரும் பணியும் காலம் இது. உயிர்த் திரளின் ஓர் அணுவாக விளங்கும் மனிதன் இயற்கையை வென்று அதனைத் தன் திருவடியின்கீழ் அடைக்கலம் புகச் செய்து பெருமையடைந்து கொண்டிருக்கிற காலம் இந்தக் காலம். சூரியனும் சந்திரனும் எவ்வளவு தொலைவிலுள்ளன என்று கணக்கறியப் பாடுபட்ட

காலம் போய், சந்திர மண்டலத்தில் உயிர்வாழ முடியுமா என்ற கேள்விக்கு விடை கூறுவது இந்தக் காலம். நிலவுலகத்திலிருந்து வானுலகில் பறப்பதோடு மன நிறைவை அடைந்து விடுங் காலம் போய்விட்டது; மற்றக் கிரகங்களுக் கெல்லாம் பறந்து செல்லவேண்டு மென்று துடியாய்த் துடிக்கின்றது இந்தக் காலம். சென்னையி லிருக்கும் தந்தை சீமையில் படிக்கும் தம் மகனோடு நேரில் பேசும் காலம் பறந்து, செவ்வாய்க்கிரகத்தோடு தந்திப் போக்குவரத்து ஏற்படுத்தலாமே என்று எண்ணுவது இன்றைய மனம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் 'இந்த உலகத்தைக் கட்டியாண்டால் போதாது, அண்டசராசரம் யாவும் தன் அடியில் பணிந்து ஏவல் புரியவேண்டும்' என்று மனிதன் விரும்புகின்ற காலம் இது.

இன்றைய மனிதன் கொண்டுள்ள கருத்துக் கைகூடாததன்று. கானலை நீரென்று மதிக்கும் மானாக இன்றைய மனிதன் ஓடவில்லை. அவனுடைய திறத்தை உணர்கின்றான்; உணர்ந்து உழைக்கின்றான். உழைப்பின் முடிவில் வெற்றியே அடைகிறான். இந்த மனிதத் திறமைக்கு அண்ட சராசரங்கள் பணிந்தே தீர வேண்டும்.

இந்த முடிவை மேலை நாட்டு நாகரிகம்-விஞ்ஞானத்தின் விளைவு —மனித உள்ளத்திலே நிறுவி விட்டது. ஆனால்......

மனிதனுடைய பெருமையையே மேலை நாட்டு நாகரிகம் உணர்த்தியது. அவனுடைய சிறுமையை உணர்த்த அது தவறி விட்டது.

மனிதன் மற்ற உயிர்களைப் போலவே பிறக்கிறான்; வாழ்கிறான்; இறந்தும் போகிறான். தன் வாழ்க்கை நிலையற்றது என்ற உண்மை மனிதனுடைய மனத்தில் பெரும்பாலும் தோன்றுவ தில்லை.

'நிலையற்றது நம் வாழ்வு' என்ற பயங்கரமான நினைவு எப்போதுமே நமக்குத் தோன்றிக் கொண் டிருந்தால் உழைப்புக்கு ஊறு பயக்குமே, தடை ஏற்படுத்துமே என்று கேட்கலாம். இந்த எண்ணம் அஞ்சத் தக்கது என்ற ஒரு காரணத்தைக் கொண்டே ஒதுக்கிவிட முடியுமா? வாழ்வில் எத்தனையோ பயங்கரமான உண்மைகள் உண்டு. சாவு என்பது அவற்றுள் தலைமை தாங்குகிறது. என்ன தான் அணுக்குண்டைக் கண்டு பிடித்து, உலகை ஆண்டாலும் அடுத்தாற்போல அவனையும் சாவு தழுவிக்கொள்ளத்தானே செய்யும்! அணுக்குண்டல்ல, இன்னும் எண்ணத்தையே குண்டாக ஆக்கிவிட்டாலும்கூடக் கூற்றுவன் ஆட்சியைத் தகர்த்து விட முடியாதல்லவா?

எல்லையற்ற ஆற்றலை மனிதன் படைத்திருக்கிறான் என்பது உண்மை. ஆனால், அவனும் சில எல்லைகளுக்குள் அடங்கிக் கிடக்கிறான் என்பது அதைவிட உண்மையாகும்.

ஒரு மனிதனுக்குத் தூக்கம் வருகிறதென்று வைத்துக்கொள்வோம். 'எனக்கு ஒரே தூக்கமாக இருக்கிறது. எனக்குப் பதில் நீ கொஞ்ச நேரம் தூங்கி விடேன்' என்று யாரையாவது ஏவிவிட முடியுமா? அன்பின் வடிவாகவே விளங்குகின்ற மனைவியா யிருந்தாலும் கணவனுக்குப் பதிலாக அவள் சாப்

பிட்டுவிட முடியுமா? கணவன் பசியாறக் கணவனேதான் சாப்பிடவேண்டி யிருக்கிறது. இப்படியே ஒவ்வொரு கட்டத்திலும் மனிதனுடைய வாழ்க்கையில் எல்லையுண்டு. வாழ்க்கையின் கடைசிக் கட்டத்திலும் இந்த வரையறை இருக்கிறது. 'மனித இனத்துக்கே சிறந்த தொண்டினை ஆற்றிக்கொண் டிருக்கிற என்னையா சாகச் சொல்லுகிறாய்? பயனற்ற மனிதப் பிராணிகள் எத்தனையோ உண்டே! ஏன், எங்கள் வீட்டில் ஒரு கிழவன் இருக்கிறானே?' என்று பேசித் தனக்குப் பதில் வேறொருவனைச் சாவுக்குப் பலியிட முடியுமா? உலகையே மட்டு மல்லாமல், அண்ட பகிரண்டம் யாவும் தன் ஆட்சியின் கீழிருத்த வேண்டும் என்ற அதிகார வெறி பிடித்தவனாயினும் சரி, எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைத்து 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று தொண்டாற்றும் சான்றோனாயினும் சரி, சாவின் பின் கைகட்டி வாய் புதைத்துச் செல்ல வேண்டியதுதான்.

ஆன்மவியற் பேச்சுக்களெல்லாம் மேலை நாட்டு நாகரிகத்தில் இடம் பெறா. கீழை நாட்டில், சிறப்பாக நம் நாட்டில் மனிதனுடைய இம்மை வாழ்வைவிட மறுமை வாழ்வே இடம்பெற்றுள்ளது.

நாகரிகம் என்பது மூக்கூறுடையது. உலகியல் முன்னேற்றம், உளவியல் முன்னேற்றம், உயிரியல் முன்னேற்றம் என்ற மூன்று முன்னேற்றமும் பெற்ற நாடுதான் உயர்ந்ததாகக் கருதத் தக்கது.

மேலை நாடுகள் உலகியல் முன்னேற்றத்தின் எல்லையைக் கண்டு விட்டன. உள்ளப் பண்பாடு அவ்வளவாக அலரவில்லை. ஆன்மாவைப் பற்றிய பேச்சுக்கு அங்கே இடமில்லை என்றே சொல்லலாம்.

நம் நாடு உலகியலைப் பெரிதாக மதிக்கவில்லை. உள்ளப் பண்பாட்டையும், உயிர் உயர்வையுமே பெரிதாக மதித்தது; இன்றளவும் மதிக்கிறது.

எந்தப் பண்பாடு நமக்கு வேண்டும் என்பதன்று இங்கே நாம் பேச எடுத்த பொருள். நம் நாட்டுப் பண்பாடு எதை விளக்குவது என்பதே இப்போதைய கேள்வி.

மேலை நாட்டுப் பண்பாடு இத்தகையது என்று அறிந்து கொள்ள நமது நாட்டுப்புறத்தான் எங்கும் போய்ப் படிக்கவில்லை. நமக்கே உரியது ஆன்மவியற் பண்பாடு என்று அவனுக்கு எடுத்து ஓதியவரும் இலர். ஆனால், அவன் உள்ளம் இயற்கையாகவே ஒரு பண்பாட்டில் திளைத்திருக்கிறது. அவனுக்கும் அது தெரியாது.

கல்லாலாகிய கோயில் கிராமத்தில் இல்லாமல் இருககலாம். பெரிய பெரிய சமயப் பிரசங்கங்கள் அங்கே நிகழாமல் இருக்கலாம். ஆனால், அங்கே கேவலம் வண்டி யோட்டிப் பிழைக்கும் நாட்டுப்புறத்தான் ஒருவனுடைய கவலையற்ற மனத்தின் எதிரொலியாகக் கிளம்பும் பாட்டிலே நம் நாட்டின பண்பாடு வாழ்கிறது:

பத்து மைல் தூரத்திலே
  பறக்குதண்ணே ஏரோப்பிளேன்
செத்தாத்தான் பிழைக்க மாட்டான்
  சீமை வெள்ளைக்கார னண்ணே!

*

மயான போகம்

●

தமிழ்வாணன்

மழைகாலம். அன்று நல்ல மழை. காலையில் சரியான மழை. மாலையில் மழை இல்லை. சுகமான நேரம். பொழுது இறங்கி யிருந்தது. விளக்கை ஏற்றினேன். சற்று நேரம் சென்றது. ஒரு சின்னக் காட்சி. ஒரு கும்பல். ஈசல் கும்பல். கும்பல் 'ஜிவ்' வென்று விளக்கை நோக்கி வந்தது. ஈசல்கள் விளக்கை மொய்த்தன.

ஓர் ஈசல்...

அதைமட்டும் கவனித்தேன். அது விளக்கைச் சுற்றியது, சுற்றிக்கொண்டே இருந்தது. வேகமாகச் சுழன்றது... சுழன்றுகொண்டே இருந்தது. ஒளியை அது பழமாக நினைத்தது! அழகின் அவதாரம் என்று நினைத்தது! அதிலிருக்கும் இன்பம்...!

தீராச் சாவு...

ஓர் இறகு உதிர்ந்தது. அது சுற்றியது, கீழே விழுந்தது. இன்னும் சுழற்சி நிற்கவில்லை.

மறுபடியும் ஓர் இறகு...

மறுபடியும் ஒன்று...

நான்கும் உதிர்ந்தன.

அதன் உடல் தரையில் விழுந்தது. ஒரு முறை புரண்டது. நெளிந்தது. சமாளித்தது. ஓர் எண்ணம். மறுபடியும் உயரக் கிளம்ப நினைத்தது...முடியவில்லை.

மயக்கம் தீர்ந்தது.

வேதனை தணிந்தது.

ஊர்ந்தது...

வட்டமிட்டது...

நின்றது...

மற்றோர் ஈசல் பறந்து பறந்து வந்தது. அதன் அருகே வந்தது.

என் கற்பனை வாய் திறந்தது.
அது கேட்டது:
"ஏன் ஓய்ந்துவிட்டாய்?"
"ஓய்ந்துவிட்டேனா!"

அது செத்துக்கொண் டிருந்தது.

"பின் என்ன? என் கூட வாயேன். பறந்து பறந்து களிக்கலாம்"

"பறந்து களித்த பின்...!"
"பறந்து களித்த பின்..."
இழுத்தது. பதில் இல்லை.
"சரி, பறந்து வருகிறேன்; இறகு இல்லையே!"
இறகு ஏன் உதிர்ந்தது"
"ஏனா...?"
"சரி, என் கூட ஊர்ந்துவா!"
"உடலை அசைக்கக் கூட முடியவில்லையே!"
"ஏன்?"
"ஏனா...?"

அது செத்துக்கொண் டிருந்தது.

"சரி, தூங்கு. நான் போகிறேன்"

"தூங்கவா!"
"ஆமாம்!"
அது பறந்துவிட்டது.

இது செத்துக்கொண் டிருந்தது; செத்தது.

விளக்கின் கீழ் எண்ணற்ற இறகுக் குவியல்கள்! பிரேதக் குவியல்கள்! இந்த மயான காண்டம்தான் ஈசலுக்குச் சுகம்; ஈசலுக்கு வாழ்க்கை!

சகோதர ஈசல் இறகு இறகாக உதிர்ந்து, முடமாய்ப் பேர்யும்கூட, இந்த ஈசல் முடமாவதை நினைத்துப் பார்க்கவில்லை; பயப்படவில்லை; வாழத்தான் நினைத்தது. மயான கட்டத்திற்கு வந்தும் சுகபோகத்தை இழக்க இதற்கு இஷ்டமில்லை.

க்ஷயரோகமும் மூட நம்பிக்கைகளும்

●

இருவர்

1

காசியில் ஓர் இடம் இருக்கிறதாம். அந்த இடத்திலுள்ள கிணற்று நீர் க்ஷயரோக நிவாரணத்துக்குச் சிலாக்கியமாக இருக்கிறது என்று நம்பி, அங்கே போய்ப் பல க்ஷயரோக நோயாளிகள் தங்குகிறார்களாம். துரதிர்ஷ்ட வசமாக க்ஷயரோக சிகிச்சை அவ்வளவு சுலபமான காரிய மல்ல.

ஒரு காலத்தில் மலைக்காற்று க்ஷயரோகிகளுக்கு அவசியம் என்று சொல்லிவந்தார்கள். இது ஆதாரமில்லாத கூற்று. உண்மையில் வேண்டியது சுத்தமான காற்றுத்தான். சீதோஷ்ண நிலைமை மாறுதலால் க்ஷயரோகம் குணமாகிவிடும் என்று, நோயாளிகளை டாக்டர்கள் ஒரு குறிப்பிட்ட சீதோஷ்ணமுள்ள இடத்துக்குப் போகும்படி யோசனை கூறினால் அதுவும் அர்த்தமில்லாத விஷயந்தான். போதிய ஓய்வும், நல்ல ஆகாரமும், சுத்தமான காற்றும் இருந்தால் க்ஷயரோகத்தை இந்தியாவின் எந்தப் பகுதியிலும், கடற்கரையாயிருந்தாலும் சரி, மலை உச்சியாயிருந்தாலும் சரி, பெரிய நகரங்களிலுள்ள ஜன நெருக்கமான இடமாக இருந்தாலும் சரி—குணப்படுத்த முடியுமென்பது பல தடவைகளிலும் பிரத்தியட்சமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

க்ஷயரோகிக்கு வேண்டியது உலர்ந்த காற்று, ஈரக்காற்று என்ற வாதத்தையும் ஒதுக்கி விடலாம். உலகத்தில் எந்த விதமான சீதோஷ்ணமும், எந்த விதமான காற்றும் நிலவியிருக்கும் எந்தப் பகுதியிலும் க்ஷயரோகம் இல்லாமல் இல்லை. ஆகவே, க்ஷயரோகி எப்படிப்பட்ட இடத்திலிருந்தாலும் அவருடைய வீட்டுக்கு அருகாமையிலேயே அவருக்குச் சிகிச்சை செய்ய முடியும். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் சிகிச்சையின் தரமே ஒழிய, நோயாளி எந்த இடத்தில் சிகிச்சை பெறுகிறார் என்பதல்ல. தொலைதூரப் பிரதேசங்களுக்கு நோயாளியைக் கொண்டு செல்லுவதால் நோயாளிக்குச் சிரமும், பணச் செலவும்தான் ஆகுமே ஒழிய, வேறு லாபம் ஒன்றுமில்லை. நோயாளி தன் வீட்டுக்கு அருகாமையிலேயே இருந்தால், உற்றார் உறவினர்களின் சூழ்நிலையில் மனநிம்மதி கொள்ளவும், நல்ல உணவு உட்கொள்ளவும் வசதி ஏற்படும். அப்போது தகுந்த சிகிச்சை கொடுத்துவந்தால் நோயாளி சீக்கிரத்தில் குணமடைய முடியும்.

இந்தக் கட்டுரையின் முதல் பகுதி, இந்திய வைத்திய சர்விஸ் டைரக்டர் ஜெனரல் காரியாலயத்தில் க்ஷயரோக விஷயத்தைக் கவனிக்கும் பிரத்தியேக அதிகாரியான லெப்டினன்ட் கர்னல் ஆர். விச்வநாதன் புதுடில்லி அ. இ. ரேடியோவில் பேசிய தன் சாரம். இரண்டாவது பகுதி, டாக்டர் சுரேந்திரா பிரசாத் கார்க் என்பவர் எழுதிய கட்டுரை ஒன்றின் சாரம். எல்லோருக்கும், குறிப்பாக க்ஷயரோகிகளுக்கும், அவர்களுடைய உறவினர்களுக்கும் உள்ள வீண் பயத்தைப் போக்கும் சிறந்த கட்டுரை இது.

2

க்ஷயரோகம், கிருமிகளால்தான் உண்டாகிறது எனக் கருது கிறார்கள். சோறு, தண்ணீர், காற்று முதலியவைகளோடு இக் கிருமிகள் கலந்து ஒருவரின் உடலுக்குள் புகுந்து, க்ஷயரோகத்தை விளைவிக்கிறது எனக் கூறுகிறார்கள். கிருமிகளால் தான் நோய் உண்டாகிறது என்பது பொய். க்ஷயரோகம் பீடித்த பிறகுதான் அங்கே கிருமிகள் வருகின்றன. அதாவது க்ஷயரோகம் பீடிப்பதே கிருமிகள் வருவதற்குக் காரணமே ஒழிய, கிருமிகளால் க்ஷயரோகம் ஏற்படுவ தில்லை. செத்துப்போய்க் கிடக்கும் சவத்தைக் கழுகுகள் கொத்த வந்தால், கழுகுகள் கொத்த வருவதுதான் சாவுக்குக் காரணம் என்று சொல்லுவது எவ்வளவு அபத்தமோ, அவ்வளவு அபத்தம் கிருமிகளால் க்ஷயரோகம் ஏற்படுகிறது என்பது.

க்ஷயரோகம் தொத்து வியாதி என்பதைப் பல வைத்திய நிபுணர்கள் மறுக்கிறார்கள். என்னுடைய சொந்த அனுபவமும் அதுதான். மோசமான காற்று, மோசமான உணவு, மோசமான பழக்க வழக்கங்கள், மோசமான உடல் பராமரிப்பு, இவைகள் தான் உண்மையில் க்ஷயரோகத்திற்குக் காரணகர்த்தாக்கள். ஜீரணக் கருவிகள் நல்ல முறையில் ஒழுங்காகத் தம் வேலையைச் செய்துவந்தால் க்ஷயரோகம் வரக் காரணமே இல்லை.

அடுத்தபடி, க்ஷயரோகம் பரம்பரையாகச் சந்ததிகளுக்கு ஏற்படும் நோய் என்று சொல்லுகிறார்கள். க்ஷயரோகிக்குப் பிறக்கும் குழந்தைகளும் க்ஷயரோகிகளாக இருக்க வேண்டிய அவசிய மில்லை. இந்த நோயாளிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளை உடனே அப்புறப்படுத்தி மற்றவர்கள் பராமரிப்பில் வளர்த்து வந்தால் குழந்தைகளை க்ஷயரோகம் பீடிக்காது.

க்ஷயரோகம் இப்படிப்பட்ட பயங்கர நோயாக இருந்தாலும் மற்ற நோய்களைப் போல இந்த நோயையும் குணப்படுத்திவிடலாம். எந்தக் காரணத்தால் ஒரு குறிப்பிட்ட நபருக்கு க்ஷயரோகம் பீடித்திருக்கிறது என்னதைக் கண்டுபிடித்து, அந்தக் காரணத்தைத் தடுத்துவிட்டால், க்ஷயரோகத்தைத் தடுத்துவிட முடியும். அதைச் செய்யாமல் தற்சமயம் வைத்தியர்கள் கணக்கில்லாத இஞ்சக்ஷன்கள் செய்வதும், ஆகாராதிகளை எக்கச்சக்கமாக நோயாளியின் வயிற்றில் திணிப்பதும் தற்காலிகமாக நோயின் உக்கிரத்தைக் குறைத்து, சற்றுச் சௌகரியத்தையும, தேக புஷ்டியையும், எடைக் கூடுதலையும கொடுக்கலாமே ஒழிய, நிரந்தரமாக நோயைக் குணப்படுத்திவிட முடியாது. இதனால்தான், வைத்தியர்கள் க்ஷயரோகத்தைக் குணப்படுத்த முடியாத வியாதி என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். வீணாகப் பணத்தைச் செலவழிக்காமல், மலிவான முறையிலும், சிரமமில்லாத முறையிலும் இயற்கை வைத்திய சிகிச்சை முறையை அனுஷ்டித்து வந்தால், க்ஷயரோகத்தை நூற்றுக்கு நூறு குணப்படுத்திவிடலாம்.

*

இந்தியாவின் கதை

●

ஈவ்ஜெனி ஜுகாவ்

சோவியத் விமானம் கராச்சியில் வந்து இறங்கியது. இந்தியப் பிரதேசத்தை நாங்கள் பார்ப்பது இதுதான் முதல் தடவை. கராச்சி விமான நிலைய அதிகாரிகள், நாங்கள் ருஷ்யாவிலிருந்து எந்தத் தொத்து நோயையாவது இந்தியாவுக்குக் கொண்டுவந்திருப்போம் என்று பயந்தார்களோ என்னவோ, எங்களைப் பூரணமாகப் பரிசோதித்த பின்னரே விமானத்தை விட்டு வெளியே அனுப்பினார்கள்.

இந்தியாவில் வியாதிகளுக்குப் பஞ்சமே இல்லை. பத்திரிகைகளில் இவைபற்றிய செய்திகள் சர்வ சகஜமானவை. பரம கொடூரமான வறுமையும், மிக நெருக்கமான இடங்களில் நடத்தப்படும் குடும்ப வாழ்க்கையுமே இவற்றிற்குக் காரணம்.

ஒருவழியாக, விமான நிலையச் சடங்குகள் முடிந்தன. அடுத்தாற்போல, அரை ராணுவ யூனிபாரம் தரித்த, வெள்ளைத் தலைப்பாகை அணிந்திருந்த ஒரு தாடிக்காரப் போலிஸ்காரனை நாங்கள் பார்த்தோம். தோள் பட்டைகளில் 'கிரீடம்' பதித்திருந்தது. எங்கள் முகங்களை நினைவில் வைத்துக்கொள்ள முயலுபவன்போல, எங்களையே இவன் உற்று நோக்கினான். நாங்கள் இந்தியாவில் தங்கியிருந்த நாள் முழுதும் பிரிட்டிஷ் போலிஸ் படையில் வேலை பார்க்கும் இந்த இந்தியனை அடிக்கடி, பல்வேறு இடங்களில், சந்தித்தோம். டில்லியில் நடந்த ஆசிய உறவு மகாநாட்டில், ஹோட்டலில், விமான நிலையத்தில்—இன்னும் எத்தனையோ இடங்களில் இதே உருவம் கண்ணில் தென்பட்டது. சோவியத் தூது கோஷ்டியினரை இவன் எதற்காகக் கவனிக்கிறான் என்பது தெரியவேயில்லை. எங்களை நெருங்கவோ, அல்லது எங்களுடன் பேசவோ அவன் முயலவேயில்லை. தொத்து நோய் ஏதேனும் எங்களிடம் இருக்கலாமென்று எண்ணிக் கராச்சி விமான நிலையத்தில் எங்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் போதாவென்று அவன் நினைத்திருக்கலாம்!

நாங்கள் போய்ப் பார்த்த பெரிய நகரங்களிலெல்லாம்—கல்கத்தா, பம்பாய், டில்லி ஆகிய பட்டணங்களில்—ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. தெருக்களில் ராணுவத்தினர் பாராக் கொடுத்துக்கொண்டிருந்தனர். சில ஜில்லாக்களில் காலையிலிருந்து மாலை வரை போக்குவரத்துக்கள் நின்றுவிட்டன. ஹிந்து—முஸ்லிம் சமூகத்தினரில் ஒரு பகுதியினர் ஒருவருக்கொருவர் சச்சரவுகள் நடத்தியதே இதற்குக் காரணம். இந்தச் சச்சரவுகள் ஒருவரையொருவர் தாக்குவதிலும், தனிப்பட்ட நபர்களைப் படுகொலை செய்வதிலுமே முடிந்தன. ஹிந்

ஆசிய உறவு மகாநாட்டுக்கு வந்த ருஷ்யப் பிரதிநிதி ஒருவர் இந்தியாவைச் சுற்றிப் பார்த்து, இங்கு தாம் கண்ட காட்சிகளை இக் கட்டுரையில் வர்ணித்திருக்கிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழும், உள்நாட்டு முதலாளித்துவத்தின் கீழும் இந்தியா சீர் கெட்டுக் கிடப்பதையும், பிரிட்டிஷார் வெளியேறப் போவதாகச் சொல்லுவதில் அடங்கிய சில 'குட்டு'களையும் வெட்ட வெளிச்சமாக்குகிறார். பிராவ்டாவிலிருந்து.

துக்கள் பகுதியில் முஸ்லிம்களும், முஸ்லிம்கள் பகுதியில் ஹிந்துக்களும் கொல்லப்பட்டனர். சில சந்தேகப்பிராணிகளால் தூண்டிவிடப்பட்டு, திடீரென்று ஒரு சில மக்கள், தாங்கள் 'எதிரிக'ளெனக் கருதுபவர்களின் வீடுகளுக்குள் புகுந்து அகப்பட்டவரைக் கொல்லுவார்கள்; கண்ணில் பட்டதைக் கொளுத்துவார்கள். இந்த வெறியில் கேட்டிராத அக்கிரமங்களையெல்லாம் செய்வார்கள். இந்தக் கலகங்களைத் தூண்டியவர்களை யாரென்று போலிசாரால் கண்டுபிடிக்க முடிவதே இல்லை. இந்தியப் பத்திரிகைகளோ, இந்தக் கலகக்காரர்களின் கொடூரத்தையும், சகிப்பின்மையையும் குறை கூறுவதோடு திருப்தியடைந்து விடுகின்றன.

வங்காள ஜில்லா ஒன்றில் நாங்கள் ஒரு பெரிய தீயினால் ஏற்பட்ட சேதத்தைக் கண்டோம். புரட்சிக்கு முந்தி ருஷ்யா இருந்த நிலையை அது நினைவூட்டிற்று. இந்த மாதிரி கொலை, கொள்ளை முதலியவைகளின் மூலம் அரசியல் லட்சியத்தை அடையலாம் என்றிருந்த ருஷ்யக் கொள்கையின் விளைவுகளுக்கும் இதற்கும் நெருங்கிய ஒற்றுமை இருந்தது. மகாண சர்க்கார் ஒன்றின் பிரதம அதிகாரி ஒருவர், இந்தக் கலகங்களுக்கு இரையாகுபவர்கள், 'அதிர்ஷ்டவசமாகப் பெரும்பாலும் ஏழை மக்கள்தான்' என்று சோவியத் தூது கோஷ்டியினரிடம் தெரிவிததார். ஏழை ஏழையைக் கொல்லுகிறுன். ஆனல், இந்தக் கலகம் பணக்காரர்களைக் குறித்ததாக இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? "என் வீட்டில் நான் சேகரித்த வைத்திருக்கும் ஜமக்காளங்களின் கதி என்னவாகும்?" என்று 'நையாண்டி'யாக அந்த மாகாண அதிகாரி கேட்டார். இந்தச் சம்பாஷணையின் மூலம் ஆங்கிலோ-இந்திய அதிகாரிகள் கலகங்களை அடக்குவதில் சிரத்தை கொள்ளவில்லை என்று தெரிந்துகொண்டோம். ஆமாம்; இந்தியாவின் பல பாகங்களிலும் நடக்கும் இந்தக் காட்டுமிராண்டித்தனமான கசாப்பு வேலையை அவர்கள் அடக்க இஷ்டப்படவில்லை. அவர்களுக்கு என்ன? எது எப்படியிருந்தாலும், கொல்லப்படுகிறவர்களும், நாசமடைகிறவர்களும், குடிசையிலே அடையும தரித்திர நாராயணனுக இருக்கும் வரை — அற்புதமான ஜமக்காளங்களைச் சேகரித்து வைத்திருப்பவர்களாக இல்லாத வரை—அவர்களுக்குக் கவலை இல்லைதான்.

இந்தக் கலகங்களைத் தூண்டிவிடுகிறவர்கள் யார்? உடன் பிறந்தவனுடைய கழுத்தை நெரித்துக் கொல்ல ஆட்களை அமர்த்துபவர்கள் யார்? ஏழ்மையிலே நைந்து போன மக்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளும்படியும், அறியாமையிலும் பிற்போக்கிலும் ஆழ்ந்து கிடக்கும், துரதிருஷ்டம் பிடித்த ஜனங்களுடைய பரிதாபகரமான குடிசைகளைத் தீ வைத்துப் பொசுக்கும்படியும் தூண்டி விடுபவர்கள் யார்?

பழைய ருஷ்யாவில், 'சூறையாடும் கொள்கை'யைக் கண்டுபிடித்த அதே சக்திகள்தான் இவையும். இந்தியாவில் பிரிட்டிஷ் துருப்புக்கள் நிரந்தரமாகத் தங்குவது அவசியம் என்று நிரூபிக்க எண்ணுபவர்கள்தான் இவர்கள். தங்களுக்கு எதிராகத் திரண்டு நிற்கும் பாமர சமுதாயத்தின் கவ

மேஜையில் அவன் கை எட்டக்கூடிய இடத்தில்...

தொழிலாளி மிக கஷ்டப்பட்டு வேலை செய்கிறுன். அவன் அறிந்து கொள்கிருன். கணக்குப் போடுகிருன். எழுதுகிருன். உண்டுபண்ணுகிருன். பிறரை சம்மதிக்கச் செய்கிருன. ஒவ்வொரு மணியும் அவனது மூளைக்கு மிக கடினமான வேலையை கொடுக்கிறது. அப்போதப்போது அவன் தன் கண்ணுடியை எடுத்துவிட்டு சற்று சாய்ந்து கொண்டு ஒருகப் டீ அருந்தி ஓய்வெடுத்துக் கொள்வதில் ஆச்சர்யமில்லை. பெரிய தொழிற் சாலையின் போர்ட் அங்கத்தினர் கூடுமிடத்திலும் சரி, சொந்தக் காரன் தான் ஒருவனுக நடத்தும் வியாபார ஸ்தலத்திலும் சரி டீ நல்ல ஓய்வைக் கொடுத்து மனோவேகம் அளிக்கிறது. டீ ஒருநல்ல லாபகரமான நல்ல பழக்கம். சோர்வுரும் சமயம் டீ இளைப்பாற்றி நல்ல புத்துயிர் அளிக்கிறது. அதை நன்கு தயார் செய்து கொள்ளுங்கள்.

நல்ல டீ தயாரிக்கும் முறை



1. டீயை கெட்டிலிலே காய்ச்சாதே. டீபாட் உபயோகி.
2. டீபாட் ஈரமில்லாமலும் வெதவெதப்புடனும் இருந்தால்தான் உணர்ந்த டீ தழையைப் போட்டு கொதிஜலம் விட்டதும் அது நன்ருய் ஊரி நல்லமணத்தைத் தரும்.
3. ஒவ்வொரு கப் டீக்கும் ஒரு டீஸ்பூன் தழை போட்டு அதிகப்படியாக டீ பாட்டிற்கு ஒரு ஸ்பூனும் போடவும்.
4. புதிதாக கொதிக்கவைத்ததண்ணீரையே உபயோகிக்கவும். ஒருபொழுதும் முன்னுடியே கொதிக்கவைத்த ஜலத்தையோ, கொதிக்காத ஜலத்தையோ அல்லது ரொம்ப கொதிக்கவைத்த ஜலத்தையோ உபயோகிக்காதே. ஜலம் குமிழையைப்போல் கிளம்பும் பொழுதுதான் அது கொதிப்பதற்கு அடையாளம்.
5. ஐந்துநிமிஷத்திறகு குறையாமல் கிஷாயம் ஊரவேண்டும்.
6. டீபாட்டில் இருக்கும் பொழுதே சர்க்கரையும், பாலும் சேர்க்காதே. கப்புகளில் கஷாயத்தை ஊற்றவிட்டே அவைகளை சேர்க்கவும்.

எந்நேரமும் டீ நேரந்தான்

லிப்டன்ஸ்
என்றும்
முதல்தரமான
டீ
JAKOOJA BRAND
FINEST DUST TEA
LIPTON'S
FINEST DUST TEA
PACKED BY LIPTON
JAKOOJA
LTK 132 W.T.M.

னத்தை, தங்களுக்கேசாதகமான வேறு ஒரு வழியில் திருப்பிவிடுவதே இவர்கள் நோக்கம். மத வெறியிலும், அறியாமையிலும் மூழ்கி இருக்கும் ஜன சமூகத்தைச் சுரண்டுவதிலேயே நாட்டம் உள்ளவர்களே இதற்குக் காரணகர்த்தாக்கள். இதன் மூலம் தங்களுடைய பிற்போக்கான ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொள்ளுவது இவர்களுடைய உத்தேசம்.

இந்தியத் தொழிற்சாலைகளில் நாளுக்கு நாள் பெருகி வரும் தொழிலாளர்கள் ஜாதி மதபேதமின்றி, தங்களுக்குள் தற்காப்புப் படை அமைத்துக்கொண்டு கலகக்காரர்களுக்கு இடம் கொடாம விருப்பதும் ஒரு காரணத்துடன்தான்.

இந்தியா ஒரு பெரிய விவசாய நாடு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆட்சியில் விதைக்கப்பட்ட பிற்போக்குக் கொள்கைகள் இந்த நாட்டை இழுத்துப் பிணைத்திருக்கின்றன. விவசாயியின் கருவிகளிலிருந்து, அவர்களுடைய பண்டைப் பழக்க வழக்கங்கள் வரை எல்லாவற்றிலும், எங்கும், இந்தப் பிற்போக்கைக் காணலாம். ஆனாலும், இந்தியாவில் புதிய, முற்போக்கான சமூக சக்திகளும் இருக்கவே செய்கின்றன. இரண்டாவது மகாயுத்தத்தின்போது, பாட்டாளி வர்க்கம் அளவிலும், மதிப்பிலும் உயர்ந்தது. பழைய காலத்து ராட்டைகள் எவ்வளவோ பிரபலமாக இருந்தும், அவைகளினால் தொழிற்சாலைகள் தோன்றுவதைத் தடை செய்ய முடியவில்லை. இந்தியத் தொழிலாளிகள், சுரண்டும் வர்க்கத்தை முன்னைவிடத் தீவிரமாக எதிர்த்து, குடியேற்ற நாட்டு ஏழைகளுக்குச் சமானமான ஒரு வாழ்க்கை நிலையைப் பெற முயலுகிறார்கள்.

இந்தியத் தொழிலாளி வர்க்கம், அந்த நாட்டின் அரசியலிலே நாளுக்கு நாள் முக்கியமான அம்சமாகிக்கொண்டு வருகிறது. சில இந்திய வட்டாரங்களில் இது கவலையை விளைவிப்பதில் வியப்பொன்றுமில்லை. அலஹபாத் சர்வகலாசாலையில் 'நாசகரமான சமதர்மக் கொள்கை'களை எதிர்த்து வேறு சில 'நிர்மாண'க் கொள்கைகளைப் பற்றிப் பேச வென்று, ஓர் அமெரிக்கப் பேராசிரியரைக் கூப்பிட்டிருந்தார்களாம். இந்தப் பேராசிரியர் அசகாய சூரர்; இரண்டே பிரசங்கங்களில் மார்க்ஸின் கொள்கைகளைத் தகர்த்தெறிந்துவிட்டாராம். ஆனாலும், சோவியத் மக்களாகிய நாங்கள், சமதர்மக் கொள்கைகளை ஆதரித்த பிரம்மாண்டமான பல பொதுக் கூட்டங்களைக் கண்ணுற்றோம். இந்திய தேசிய காங்கிரசின் மூவர்ணக் கொடியுடன் கூடவே செங்கொடியும் பக்கத்தில் பறந்தது.

சோவியத் மக்களிடமும் ஸ்டாலினிடமும் இந்தியப் பொது மக்கள்—குறிப்பாக மாணவர்களும், தொழிலாளிகளும்—காட்டிய அன்பை மறக்கவே முடியாது. ஆக்ராவி லிருக்கும் கலைக் கோவிலின் அதிசயத்தைப் பார்க்க வென்று டில்லியிலிருந்து சோவியத் தூது கோஷ்டியில ஒரு பகுதியினர் சென்றார்கள். ஆக்ரா ஸ்டேஷனுக்கு இரண்டு ஸ்டேஷன்கள் முன்பே அவர்கள் வண்டியில் பல ஆக்ரா இளைஞர்கள் வந்து நிறைந்தார்கள். ஆக்ரா ஸ்டேஷனிலோ செங்கொடிகளுடன் பிரம்

மாண்டமான கூட்டம் காத்திருந்தது. அந்தக் கூட்டத்தைக் கண்டு பயந்த ஸ்டேஷன் மாஸ்டர் தூது கோஷ்டியினரை 'வெயிட்டிங்' அறையிலேயே தங்க வைத்திருந்து, கூட்டம் முற்றும் கலைந்த பின்னரே வெளியே அனுப்பினர்.

இந்திய இளைஞனுக்கு இவ்வளவு உற்சாகமும், வேகமும் இருப்பது ஆச்சரியமே; ஏனெனில், அவனுக்கு இரண்டு வித எதிர்ப்புக்கள் இருக்கின்றன. ஒரு புறத்தில் மதப் பழக்க வழக்கங்களினல் உண்டான மூட நம்பிக்கைகளையும், மறுபுறத்தில் ஜனநாயக வாதிகள் போல் வேஷம் போடும் நடுத்தர வகுப்பாரின் நோக்கங்களையும் எதிர்க்க வேண்டியவனு யிருக்கிருன் இவன். பிற்போக்கான கருத்துக்கள், மக்களின் மனச்சாட்சியை அழுத்துகின்றன. சுதந்தரமாக எண்ணக் கூடிய சக்தியையும், தானுக முன் வந்து வேலை செய்யும் ஒரு போக்கையும் இவை தடை செய்கின்றன.

சோவியத் ருஷ்யாவில் ஒரு வகுப்பு இன்னெரு வகுப்பை நசுக்குவதோ, இனத் துவேஷமோ, மத வெறியோ கிடையாதென்பதைக் கேட்டுப் பல இந்திய மக்கள் ஆச்சரியப்பட்டனர். நாங்கள் சந்தித்துப் பேசிய ஓர் இந்தியர், கலப்பு மணத்தினல் ருஷ்ய சமூகத்தில் தகராறுகள் ஏற்படாததைக் கண்டு வியந்தார். தத்துவ ஞானம் போன்ற வேதாந்த விவகாரங்களில் நாங்கள் கவனம் செலுத்தாமல் இருப்பதைக் கேட்டு ஓர் இந்திய அறிவாளி திகைத்துப் போனர்.

* • *

சென்னைக்கு நாங்கள் போன போது, அந்த நகரம் பிச்சைக்காரர்களுக்குப் பெயர் போனது என்று கேள்விப்பட்டோம். இந்திய நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும்கூட, சென்னையில் உள்ள பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகமாகவே இருக்கிறது. ஆண், பெண், குழந்தைகள் அடங்கிய பிச்சைக்காரக் கூட்டத்தைப் பார்க்காமல் ஒரு தெருவைக்கூடக் கடக்க முடியாது. நிர்வாணமான குழந்தைகள், கந்தல் உடுத்தியும் கம்பீரத் தோற்றத்துடனிருக்கும் கிழவர்கள், தென் இந்தியாவைச் சார்ந்த மலை ஜாதியினர், பயங்கரமான புண்களுடன் காணும் நொண்டிகள்—இன்னும் எத்தனையோ வகை பிச்சைக்காரர்கள் காணப்பட்டனர். இவர்கள் எல்லாருமாகச் சேர்ந்து, வீடில்லாத ஒரு பட்டினிப் பட்டாளத்தை அமைத்திருக்கிருர்கள்.

அதிகார பூர்வமாய்க் கணக்கெடுக்கப்பட்ட பிச்சைக்காரர்கள் மட்டும் இந்தியாவில் ஒன்றரைக் கோடிப்பேர் இருக்கிருர்கள் என்று நாங்கள் அறிந்தோம். பிரிட்டிஷ் அதிகாரிகளால் கணக்கெடப்படாதவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்பதை யாரும் நன்கு அறிந்துகொள்ளலாம். அத்துடன், 'தீண்டத்தகாதவர்கள்' என்ற பெயருடன் விளங்கும் கோடிக் கணக்கான மக்கள் இந்தக் கணக்கிலே சேரவில்லை.

இவர்கள் கிட்ட நெருங்கினலே அசுத்த மடைந்துவிடுவதாக 'மேல்' வகுப்பினர் நினைக்கிருர்கள். இத்தகைய சேரி ஒன்றை நாங்கள் பார்வையிட்டோம். மிக மிக மோசமான பொந்துகளிலே இவர்கள் வசிக்கிருர்கள். உட்கார, எழுதத் தேவையான சாமான்கள் எதுவும் இல்லை

யென்பதோ, சாதாரணத் தட்டு முட்டுச் சாமான்கள்கூட இங்கே கிடையா வென்பதோ ஆச்சரியமல்ல. ஆனால், சர்வ சாதாரணமான மனித உரிமைகள்கூட இவர்களுக்கு மறுக்கப்படுகின்றன என்பதுதான் பெரிய ஆச்சரியம். முக்கியமாக, திறமைக்கும், சக்திக்கும் ஏற்ப வேலை செய்யும் உரிமைகூட இவர்களுக்குத் தடை செய்யப்பட்டிருக்கிறது.

இந்திய சமூகத்திலே புரையோடிப் போயிருக்கும் புண் ஜாதிப் பிரிவினைதான். இதனால் லாபம் அடைவோரும் உண்டு. தொழிலாளர்களுள் சில பிரிவினருக்குக் கொடுக்கப்படும் மிகக் குறைவான சம்பளத்துக்கு ஜாதி பேதம் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. கீழ் வகுப்புக்களைச் சேர்ந்த தொழிலாளர்கள்—அவர்களுடைய திறமைக்கு மதிப்பில்லாமல் — குறைவான சம்பளம் பெறுகிறார்கள். தாங்களாகவே சிருஷ்டித்த வகுப்புத் தடைகளை உதவியாகக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட வகுப்பினர், தங்களுடைய தெய்விகத்தன்மையைக் காட்டி, கண்ணை மூடிக்கொண்டு தங்களுக்குப் பணியும்படி பொது மக்களைச் செய்திருக்கிறார்கள். பறைச் சேரிகளில் சகிக்க முடியாத வறுமை தாண்டவம் ஆடுகிறது. குடிசைகள் துருப் பிடித்த இரும்புக் கூரையுடன், உபயோக மில்லாத சாமான்களைக் கொண்டு கட்டப்பட்டிருக்கின்றன. பேராசை பிடித்த வீட்டுச் சொந்தக்காரனுக்கு இதற்கான வாடகைகள் போய்ச் சேருகின்றன. குப்பை மேட்டிலே தாங்களாகவே குடிசைகள் கட்டி வசிக்கும் தீண்டத்தகாதவர்கள் 'அதிருஷ்டசாலிகள்'. ஏனெனில், குப்பைத் தொட்டியிலே கிடக்கும் ஆகாரவகைகளைப் பொறுக்கித் தின்னும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கிறதல்லவா? முழு நிர்வாணமான குழந்தைகளும், உடலை மூட ஒன்றுமே யில்லாத அரை நிர்வாணமான ஆண், பெண்களையும் நாங்கள் கண்டோம். இவர்களுக்கு என்று சொந்தமாக ஒன்றுமே கிடையாது.

வடக்கே வெகு தூரத்தில், ஏதோ ஒரு தேசம் இருப்பதாகவும், அங்கே ஜாதிமத வித்தியாசமே கிடையாதென்றும், மனிதர்கள் எல்லோரும் சமம் என்றும் இவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். லெனினுடைய நாட்டைப்பற்றி இவர்கள அறிந்திருந்தார்கள். பம்பாய்த் தீண்டத்தகாதவர்களின் இருப்பிடங்களில் செங்கொடி பறப்பதை நாங்கள் கண்டோம். சோவியத் மக்களுடன் கைகுலுக்குவதே, அவர்களுக்கு எவ்வளவு ஆனந்தத்தையும், வியப்பையும் அளித்தது என்பதை, அவர்கள் கண்களில் துளித்த கண்ணீரே காட்டிற்று.

* * *

டில்லி, கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய நகரங்களின் அகன்ற வீதி முனைகளில் இந்தியாவின் அந்நிய எஜமானர்களின் திருவுருவச் சிலைகள் நிற்கின்றன. மகாராஜாக்களும், கவர்னர்களும், ஜெனரல்களும், வியாபாரிகளும் அங்கியும் யூனிபாரமும், குல்லாயும், தொப்பியும் தரித்துக் கொண்டு, உயிரற்ற தங்கள் கண்களால் தங்களைச் சுற்றியிருக்கும் உயிருள்ள உலகத்தைப் பார்த்துப் பார்த்து விழிக்கிறார்கள். நேப்பியர்களும், கர்ஸான்களும் இந்தத் தேசத்துக்கு 'நாக

ரிகம்' கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்த அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. நேற்று வரை இருந்த கணக்கற்ற தெய்வங்களும் இப்போது மறைந்து வருகின்றன.

நாகரிகமான ஒரு பம்பாய் ஹோட்டலின் வாசலில் "தென் ஆப்பிரிக்கர்களுக்கு இடம் கிடையாது" என்ற அறிவிப்புப் பலகை தொங்குகிறது. இந்த அறிவிப்பு, குடியேற்ற மக்களை நசுக்கும் மன்னன் ஸ்மட்ஸ் கிழவரை மட்டும் உத்தேசித்த தல்ல. நியூயார்க்கில் நடந்த ஐ. நா. அசெம்பிளியில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குப் பரிந்து பேசும் சிலரால் மிகவும் ஆதரிக்கப்பட்ட தென் ஆப்பிரிக்க வெள்ளையரின் வர்க்க நசுக்குதலின்பால், இந்திய மக்களுக்கு உள்ள தீராத வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும் இது அறிகுறி.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட எல்லாப் பிரஜைகளும், எவ்வித விதி விலக்குமின்றி, தங்களுக்குப் பணிய வேண்டுமென்று அதிகாரம் செய்த பழைய பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு அதிகாரிகளுக்கு அந்திமகாலம் நெருங்கி விட்டது. குடியேற்ற நாடுகளில், அதிலும் இந்தியாவில், அதிகாரம் செலுத்துவது கஷ்டமாகிவிட்டது. இந்தியாவில் தங்கள் பிடியை விடாமல் இருப்பதற்காக, கர்ஸான்களின் பரம்பரையிலே ஜனித்த சிலர், என்ன வெல்லாமோ சுற்று வழி கண்டு பிடிக்கிறார்கள். திட்டம், பேரம், ஒப்பந்தம், வாக்குறுதி முதலிய வழிகளின் மூலம் பிடிப்பை இறுக்கிக்கொள்ளுகிறார்கள். குடியேற்ற நாட்டு மக்களைப் பணிய வைப்பதற்காக ஏகாதிபத்தியத்தால் அதிகம் உபயோகப்படுத்தப்படும் விமானம், டாங்கி, பீரங்கி முதலியவைகளும் 'ரிசர்வ்' செய்து வைக்கப்பட்டிருக்கின்றன.

பெரிய இந்திய நகரங்களில் பிரிட்டிஷ் ராணுவத்தினரைப் பார்ப்பது அரிது. ஆனால், தெருக்களில் எல்லா வகைகளையும் சேர்ந்த போலிஸ் படையினர் காட்சி அளிக்கிறார்கள். மோட்டார் சைகிளும், நவீன ஆயுதங்களும் பெற்றிருக்கும் அதிகாரி முதல், சாதாரணத் துப்பாக்கி கூட நம்பிக் கொடுக்கப்படாத 'சுதேசி'ப் போலிஸ்காரன் வரை எல்லாரையும் பார்க்கலாம்.

இந்திய நகரங்களில் பிரிட்டிஷ் அதிகாரிகள் சிற்சிலர்தான் இருக்கிறார்கள். சிலரை ஹோட்டல்கள், தங்குமிடங்கள், கிளப்புகள் முதலிய இடங்களில் காணலாம். இங்கிலீஷ்காரர்களைவிடப் பணக்காரர்களான நிலச்சுவான்தார்கள்தான் ஹோட்டலில் அதிகமாகக் காணப்படுகிறார்கள். இந்த இளவரசர்களும் நடுத்தர வகுப்பினரும் மிகவும் சுதந்தரம் பெற்றவர்கள்போல் நடந்து கொள்ளுகின்றனர். இவர்கள் வீட்டுப் பெண்கள் அணிந்து கொண்டிருக்கும் மதிப்பிடற்கரிய நகைகளைக் கொண்டே இவர்களின் பண வீக்கத்தை நன்கு அறிந்துகொள்ளலாம்.

ஆனால், இவைகளையெல்லாம் பார்த்து விட்டு, இந்தியாவில் பிரிட்டிஷ் துருப்புக்கள் மிகக் கொஞ்சம்தான் இருக்கின்றன என்று தீர்மானித்துவிடக் கூடாது. அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளுவதாகும்.

பிரிட்டிஷ் துருப்புக்களின் எண்ணிக்கை எந்த விதத்திலும்

மிதமிஞ்சி போஷிப்பது கெடுதலே விளைவிக்கும்

இது மிகவும் மெல்லிய தன்மை வாய்ந்த, அங்க அமைப்புள்ள குழந்தைகள் விஷயத்தில் மிகவும் பொருத்தமாகும்.

அளவுக்கு மீறி உணவு அளிப்பதாலும், வேளை தப்பிய வேளையில் உணவு கொடுத்தாலும் ஈரலுக்கு அதிக வேலை உண்டாகி சொற்ப காலத்தில் ஈரல் பெருக்கம் ஏற்பட காரணம் ஆகிறது. இந் நிலைமையை அறியாமல் நீடிக்க விட்டாலும், சரியான சிகிச்சை செய்யாவிட்டாலும் அது அபாயகரமான நிலைமைக்குக் கொண்டுவிடும்.

ஆரம்ப அறிகுறிகளை கவனிக்கவும்



அடிக்கடி, ஜுரம் ஏற்படுதல், மலசிக்கல், அதிக மலப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், பொதுவாக சோர்ந்திருத்தல், அடிக்கடி சிணு சிணுத்தல்.

அபாயத்தை ஆரம்பத்திலேயே அகற்றுங்கள்

வியாதி குறிகள் கண்ட உடனே ஜம்பியின் லிவர் க்யூர் கொடுங்கள். அப்படிச் செய்வது உங்கள் கவலையை நீக்கி பணச்செலவைக் குறைத்து, வியாதியை முற்ற விடாமல் செய்து பின்னிட்டு ஏற்படக்கூடிய அபாயத்தை தவிர்க்கும்.

ஜம்மியின்

லிவர்க்யூர்

உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குலைக்கட்டிக்கு ஜம்மியின் லிவர் க்யூர் உபயோகியுங்கள். எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன

ஜம்பி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்

மைலாபூர் — மதராஸ்.

பிராஞ்சுகள்:— பம்பாய், கல்கத்தா, டில்லி.

திருச்சிராப்பள்ளி, பெங்களூர், கும்பகோணம்.

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

லோத்ரா பல்லாண்டுகளாக இந்திய ஸ்திரீகளுக்கு விசுவாசத்துடன் சேவை புரிந்து நம்பிக்கையுள்ள கர்ப்பாசய ரோகநிவாரணி என்று புகழையும் ஸ்தாபித்துக் கொண்டுள்ளது

லோத்ரா கவர்ச்சி மிக்க ஆரோக்கியத்தையும் சக்தியையும் அளிக்கிறது.

EASTERNS 378

கேஸரி குட்டீரம் லிமிடெட், மதராஸ்

ஒரிஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை



அயோடிசால்

மிகச் சிறந்த

ரத்த சுத்தி மருந்து

இது திரேகத்தில் உஷ்ணம் அதிகரித்து அதனுல் ஏற்படும் ரோகங்களை குணப்படுத்தி திரேகத்திற்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.

ரத்தத்தை சுத்திசெய்து ரத்த விருத்தியையும் உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி
மதுரை

An Event in the History of Fiction
A Milestone in Distinguished Publishing

SHORT STORY

(MONTHLY)

Editor; MANJERI S. ISVARAN

TO BE ISSUED FROM AUGUST

Subscription :

INLAND		FOREIGN	
YEARLY ...	Rs. 6	YEARLY ...	Sh. 9
HALF YEARLY	Rs. 3-8	SINGLE COPY	9 d.
SINGLE COPY	As. 8		

(Including Postage)

SHAKTI KARYALAYAM

MADRAS 14.

குறைந்ததல்ல. பெரிய இந்திய சமஸ்தானங்களுள் ஒன்ருகிய ஹைதராபாத்தைப் பார்த்தால் இதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இந்த இடத்தைப் பிரிட்டிஷார் தங்களுடைய மிக முக்கியமான ராணுவ ஸ்தலமாக ஆக்கியிருப்பது பகிரங்கரகசியம். இந்தச் சமஸ்தானத்தைப் பார்த்தால், பிரிட்டிஷார் 'வெளியேற'ப் போவதாகச் சொல்லுவது எவ்வளவு தூரத்துக்கு உண்மை என்பது தெரியவரும். இந்தச் சமஸ்தானத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்ட எந்தச் சாதாரண மனிதனும், பிரிட்டிஷார் தங்களது ராணுவத்தைக் குறைக்காமல், விஸ்தரிக்கவே செய்கிருர்கள் என்று வெகு சுலபமாகப் புரிந்துகொள்வான். டில்லியிலும் கல்கத்தாவிலும் மிகக் குறைந்த பிரிட்டிஷ் அதிகாரிகளே இருப்பதைக் கண்டு நாங்கள் ஆச்சரியப்பட்டோம். ஆனல், அனுபவமுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் அத்தனை பேரும் ஹைதராபாத் நிஜாமின் கீழ் இருப்பதைக் கண்ட பிறகே, பிரிட்டிஷார் இந்த வேலையில் எவ்வளவு கவனம் செலுத்தியிருக்கிருர்கள் என்பது தெரிந்தது. பிரிட்டிஷ் இந்தியாவில் இருக்கும் முக்கியமான பிரிட்டிஷ் துருப்புக்களை, இந்திய சமஸ்தானங்களுக்கு மாற்றிக்கொண்டிருப்பது, பிரிட்டிஷ் குடியேற்ற அதிகாரிகளுடைய சாமர்த்தியமான ஒரு சூழ்ச்சி என்பதைப் பிற்பாடு நாங்கள் தெரிந்துகொண்டோம். இந்தியா முழுவதும் இந்தச் சமஸ்தானங்கள் — கிட்டத்தட்ட 600 —பரவிக் கிடப்பது பிரிட்டிஷாருக்கு நன்மையாயிருக்கிறது. நிலப் பாத்தியதை போன்ற மிகப் பிற்போக்கான அம்சங்கள் இந்தச் சமஸ்தானங்களைப் பீடித்திருக்கின்றன. இந்த மகாராஜாக்கள் நேரடியாக வைஸ்ராயுடன் தொடர்பு கொண்டிருக்கிருர்கள். அதனல், பொது மக்களின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, தங்களுடைய ராணுவச் சூழ்ச்சியை நிறைவேற்றுவது பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு மிகவும் எளிதாக இருக்கிறது.

1948-ம் வருஷம் ஜூன் மாதத்துக்குள் சுதந்தரம் அளித்துவிடுவதாகப் பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்திருக்கிருர்கள். இந்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றுவார்களா, மாட்டார்களா என்பதை முன்கூட்டித் தீர்மானிக்க முடியாது. ஆனல், இந்திய விடுதலைக்கான எந்தத் திட்டத்தையும், சமஸ்தானங்கள் சிரம சாத்தியமானதாகச் செய்துவிடுகின்றன. எதிர்கால இந்திய தேசிய சர்க்கார், ஜனநாயக சக்திகளுக்குக் கட்டுப்பட்டு, சமஸ்தானங்களில் முற்போக்கான காரியங்களைச் செய்ய முனையும் என்பதில் சந்தேகமில்லை. பிரிட்டிஷ் ஆதிக்கம் நீடிக்க வேண்டுமென்றே பெரும்பான்மையான சமஸ்தானதிபதிகள் விரும்புகிருர்கள். ஏனெனில், சமுதாயத்திலும், அரசியலிலும் மிகப் பிற்போக்கான இந்தச் சமஸ்தானங்களின் 'புனிதத்தன்மை'யைப் பிரிட்டிஷ் சர்க்கார் இத்தனை நாளும் காப்பாற்றி வந்திருக்கிறது. பிரிட்டிஷ் ராணுவத் தளவாடங்களையும், பிரிட்டிஷ் மூலதனத்தையும் பிரிட்டிஷ் பிரதேசத்திலிருந்து சமஸ்தானங்களுக்கு மாற்றுவது போன்ற பல 'பிரத்தியேக' ஒப்பந்தங்கள் வேறு, பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் சமஸ்தானதிபதிகளுக்குமிடையே இருக்கின்றன. பிரிட்டிஷாரின் 'வெளியேற்ற'த்துக்கு

இவையெல்லாம் அத்தாட்சிகள்! 1948, கோடைக்குள் அதிகார பூர்வமான விடுதலையை இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் வழங்கினலும்கூட, சமஸ்தானங்கள் மட்டும் பிரிட்டிஷாரின் செல்வாக்குக்கும், ராணுவத் தளவாடங்களுக்கும் கேந்திர ஸ்தானங்களாக விளங்கும் என்று இந்தியாவி லுள்ள பல முற்போக்கு வட்டாரங்கள் கருதுகின்றன.

* * *

உலோக நிபுணரான ஓர் எஞ்ஜினீரைக் கல்கத்தாவில் நாங்கள் சந்தித்தோம். பிரிட்டனில் படித்து, தற்சமயம் டாடா மில்லில் வேலையாயிருக்கிறர் இவர்......

பம்பாயில் காலடி வைத்தவுடனேயே "டாடா" என்ற பெயரின் மகாத்மியத்தைச் சட்டென அறிந்துகொள்ளலாம். 'டாடா லை'னைச் சேர்ந்த வெள்ளி நிற விமானங்களை விமான நிலையத்தில் காணலாம். விமான நிலையத்திலிருந்து நகரத்துக்குப் போகும் பாதையில் நின்று பார்த்தால், தூரத்தில் ஒரே புகை மயமாகத் தெரியும். இது டாடா மில்களின் புகைக் கூண்டுகள் கக்கும் புகை. டாடா கிடங்குகள், டாடா ஹோட்டல் என்று அநேக "டாடா" முத்திரை பெற்ற இடங்கள் உண்டு. டாடா இந்தியாவிலே மிகப் பெரிய முதலாளி.

எங்களுடைய இந்தியத் தோழரான அந்த எஞ்ஜினீர், தம்முடைய யஜமானரான டாடாவின் ஸ்தாபன அமைப்புத் திறமையில் பெருமதிப்புக் கொண்டவர். ஆனல் அவர், பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவின் தொழில் வளர்ச்சியைத் தடை செய்வதைப் பலமாகக் குறை கூறினர். பிரிட்டிஷ் கம்பெனிகள், இந்தியத் தொழிற்சாலைகளுக்குக் கருவிகள் விலைக்குக் கொடுக்க மறுப்பதைப் பற்றிச் சொன்னர். "உங்கள் தேவைகளை நீங்கள் என் பிரிட்டனிடம் கேட்க வேண்டும்?" என்று நாங்கள் கேட்டதற்கு அவர் அளித்த பதில் முக்கியமானது. யுத்தத்தின் போது, இந்தியா பிரிட்டனுக்குப் பல தளவாடங்களைக் கொடுத்துதவியது. அதனல், இந்தியாவுக்குக் "கடன்பட்ட" பிரிட்டன், இன்றுவரை அதை அடைக்கவேயில்லை. அதற்குப் பதிலாக இந்தியா மேன்மேலும் பிரிட்டனையே சார்ந்து நிற்கும் விதத்தில் ஒரு பொருளாதாரப் பரிவர்த்தனையை ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது, இந்தியாவின் கணக்கில் பவுன் ஸ்டர்லிங்கைக் காட்டிப் பிரிட்டன் ஈடு செய்திருக்கிறது. லண்டனில் 'உறைந்து போன' இந்த ஸ்டர்லிங்கை, இந்தியாவால் தள்ளிவிட முடியவில்லை. கையில் பணம் இல்லாமல் போகவே, பிரிட்டனைத் தவிர்த்து வேறெங்கும் பொருள்கள் வாங்கும் நிலையில் இந்தியா இல்லை. இதன் மூலம், இந்தியா பிரிட்டன்பால் கொண்டுள்ள பொருளாதாரச் சார்பு இறுகுவதுடன், இந்தியாவில் பிரிட்டிஷ் சரக்குகளுக்கு இருக்கும் ஏகபோக உரிமையும் பலப்படுகிறது என்று அந்த எஞ்ஜினீர் தெரிவித்தார். தற்சமயம் நிலவும் பொருளாதார நிலைமைகளின் கீழ், இந்தியா பரிபூரண விடுதலை அடைவது சற்றுச் சிரமம்தான் என்றர் அவர். நாட்டின் விடுதலைக்கும், பாதுகாப்புக்கும் அஸ்திவாரமான தொழில் வளர்ச்சி இன்னும் தேவை. சென்ற வருஷம் பூர்வாங்கமான விடுதலை அடைந்தும் இன்னும் அமெரிக்கக்

காலனியாகவே இருக்கும் பிலிப்பைனைப்போல இந்தியாவும் ஆகிவிடலாம் என்றும் அவர் பயப்பட்டார்.

இந்தியாவில் இன்னும் பிரபலமடையாத சிலருடைய பேச்சுக்களைச் செய்திப் பத்திரிகைகளில் படித்தபோது, கல்கத்தாவிலுள்ள சில யந்திர நுட்பம் தெரிந்த தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளைச் சந்தித்து பேசியது தானாக நினைவுக்கு வந்தது. இந்தப் பிரபலமடையாத நபர்கள், இந்தியத் தொழில் வளர்ச்சியின் அவசியத்தைத் தெரிந்து கொள்ளாமல், ராட்டைக்கும், ஆதி காலத்து விவசாய முறைக்கும், பிற்போக்குக்கும் செல்லும்படி மக்களுக்கு உபதேசிக்கிறார்கள்.

* * *

பம்பாய் விமான நிலையம். சோவியத் தூதுகோஷ்டி ஊருக்குத் திரும்புகிற தருணம். சோவியத் பிரதிநிதிகளைச் சுற்றி அவர்களுடைய புது இந்திய நண்பர்கள் நிற்கிறார்கள். ஆண் பெண் தொழிலாளிகளும், அறிவாளிகளும் இவர்களில் இருக்கிறார்கள். சோவியத் நண்பர்களுக்கு விடை கொடுத்து அனுப்ப வென்று, இரவெல்லாம் நடந்து வந்திருக்கிறார்கள் பலர். இவர்களில் சிலருடைய கண்களில் நீர் துளிக்கிறது. ஆனால், இவர்கள் மகிழ்ச்சியுடன் புன்சிரிப்புச் சிரித்தவாறே மாஸ்கோவுக்கு—ஸ்டாலினுக்கு—தங்கள் நல்வாழ்த்தைத் தெரிவிக்கிறார்கள்.

பலத்த காற்று அடிக்கிறது; மேகங்கள் அடர்ந்து இருக்கின்றன. ஆனால், "யு.எஸ்.எஸ்.ஆர்" என்ற நான்கு எழுத்துக்கள் இறக்கைகளிலே பளபளக்க, 'ஜம்'மென்று கிளம்பும் விமானத்துக்கு இவையெல்லாம் லட்சியமில்லை.

பிரயாணிகள் சோவியத் விமானத்தில் ஏறுகிறார்கள். ஜியார்ஜியா, அஸர்பைஜான், ஆர்மீனியா, காஸக், உஸ்பெக், தாட்ஜிக், துருக்கிமேனியா, கிர்க், ருஷ்யா முதலிய பல சமூகத்தவர்கள் இவர்களில் இருக்கிறார்கள். பல்வேறு சமூகத்தவர்கள்; ஆனால், எல்லாரும் ருஷ்ய நாட்டைச் சேர்ந்த தோழர்கள்; சகோதரர்கள். இந்திய மண்ணிலே நின்றிருந்த பலருடைய கண்களில் ஒருவிதப் பொறாமை படிந்திருந்ததை நாங்கள் காண முடிந்தது. எங்களுடைய குலைக்க முடியாத நட்பையும், ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் கண்டே அவர்கள் பொறாமைப் பட்டார்கள்.

நண்பர்களே! உங்களுக்கு வாழ்த்துக்கள். பல்வேறு இனங்கள் அடங்கிய ருஷ்யக் குடும்பத்திலிருந்து, பல்வேறு இனங்கள் கொண்ட இந்திய நாட்டுக்கு வாழ்த்துக்களையும், நட்பையும் செய்தியாகக் கொண்டுவந்தோம்—இந்தச் சோவியத் விமானத்தின் மூலமாக. உங்களுக்கு அமைதியும், விடுதலையும், மகிழ்ச்சியும் கிட்ட வேண்டுமென நாங்கள் மனப் பூர்வமாக விரும்புகிறோம்.

✲

இடது சாரியும் இடது காலும்: மேடான இடத்திலிருந்து கீழே இறங்கும்போது நீங்கள் இடது காலை முதலில் எடுத்துவைத்து இறங்கினால் உங்களை ஒரு கம்யூனிஸ்ட் என்று குற்றம் சாட்டிவிடுவார்கள்.

—சார்லி சாப்ளின்

திருப்பூர்க் குமரன்

●

வ. வ. நடராஜன்

கோவை ஜில்லாவில் இயற்கை எழில் மிகுந்த சென்னிமலையில் செங்குந்த முதலியார் குலத்தில், முன்னர் பிரபல செல்வந்தரா யிருந்து பிறகு ஏழையான நாச்சிமுத்து முதலியாரின் மூன்றாவது புதல்வராக 1904-ம் ஆண்டில் குமாரசாமி பிறந்தார். வீரத் தியாகியை ஈன்றெடுத்த வீரத் தாயின் பெயர் கறுப்பாயம்மாள். குமரன் ஐந்தாவது வயதில் சென்னிமலை போர்ட் ஆரம்பப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். அவர் நற்குணங்களுடைய மாணவர்களையே நண்பராகப் பெற்றிருந்தார். வருடந்தோறும் பரீட்சையில் தேறி வந்து அறிவுச் சுடராக அக்காலத்திலேயே விளங்கினார். அன்னவரின் அருமைத் தந்தை நெய்தல் தொழில் செய்து அதன் வருவாயைக் கொண்டு குடும்பத்தை நடத்தலானார். ஆகவே குமரனின் சிறு பிராய வாழ்க்கைப் பள்ளிக்கூடம் வறுமை என்ற ஆசிரியரால் நடத்தப்பட்டது.

அறிவு, ஆற்றல் நிறைந்த நம் குபாரசாமி தம் குடும்ப நிலை கண்டு சகியாது ஐந்தாம் வகுப்புத் தேறியவுடன், தம் பத்தாவது வயதில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டார். இரண்டு ஆண்டுகள் சென்னி மலையில் நெய்யும் தொழில் கற்று முடித்துத் தம் சகோதரி தெய்வயானை அம்மாளின் இல்லமான தளவாய்ப்பேட்டைக்குச் சென்றார். 14-ம் வயதில் பள்ளிய பாளையத்திலுள்ள தம் மாமன் வீடு அடைந்து மூன்று வருட காலமிருந்து நெசவுத் தொழிலில் நன்கு தேர்ச்சி பெற்றார். பள்ளிய பாளையத்திலிருந்து தம் 17-ம் வயதில் சென்னிமலை வந்தார். 18-ம் வயதில் திருமணம் நிகழ்ந்தது. இளம் வயதிலேயே இல்லறவாசியாகிய குமாரசாமி திருச்செங்கோடு 'ஜின்னிங் பாக்டரி'யிலும் சென்னி மலையிலும் சில வருட காலம் கழித்தார். 1926-ல் திருப்பூருக்குக் குடும்பத்துடன் சென்று அங்கே பஞ்சு வர்த்தகத்தில் குமாஸ்தாவாக வாழ்க்கை நடத்தினார்.

திருப்பூர் சென்ற நாள் முதல் தேசாபிமானம் அதிகமாயிற்று. அவர் தம் பதினாறாவது வயதிலிருந்தே நாட்டுரிமைக் கிளர்ச்சியில் நாட்டங் கொண்டிருந்தார். இந்தியாவின் மறுமலர்ச்சி தோன்றிய 1920-ம் வருஷத்திலிருந்து தேசப் பற்று உடையவரானார். அந் நாள் முதல் அன்னிய ஆடையையும் விதேசிப் பொருள்களையும் மேனாட்டு நடை உடை பாவனைகளையும் அறவே விட்டொழித்தார். கதர் உடுத்தி சுதேசி விரதம் பூண்டு தேச பக்தரானாரென்று சொல்ல வேண்டுமோ? மகாத்மா காந்தி காட்டிய வழிகளனைத்தையும் பின்பற்றி இயன்ற அளவு நாட்டுத் தொண்டு செய்து வந்தார். சைமன் கமிஷன் பகிஷ்கார

தியாக புருஷன் குமரனின் மயிர்க்கூச்செறியச் செய்யும் சரித்திரம் இது. இப்படிப்பட்ட குமரன்களின் தியாகம்தான் இன்று நம்மவர்களை நாடாளும்படி அரியாசனத்திலேற்றியது. திருப்பூர்க் குமரன், திருச்சி சிங்காரவேலு போன்றவர்கள் எய்திய விர மரணம் சரித்திரத்தில் பாஸிஸம் இழைத்த கோரம்; நம் சுதந்தர ஆவேசத்தின் மூல ஊற்று, தினசரியிலிருந்து.

உயர்தரமான கை கடியாரங்களும் பவுண்டன் பேனாக்களும்

ஸ்விட்சர்லாந்தில் செய்யப்பட்டது

ஒவ்வொன்றுக்கும் ஐந்து வருடம் உத்தரவாதம்.





No. 141

1. பளபளப்பான குரோமியம் கேஸ் 4 ஜுவல்கள் ரூ. 40/-
2. உயர்தரம் 7 ,, ரூ. 45/-
3. பளபளப்பான குரோமியம் கேஸ் 15 ஜுவல்கள் ரூ. 70/-
4. ரோல்ட் கோல்ட் 10 வருடம் உத்தரவாதம் 4 ஜுவல்கள் ரூ. 57/-
5. ரோல்ட் கோல்ட் 7 ஜுவல்கள் ரூ. 60/-
6. ரோல்ட் கோல்ட் 15 ஜுவல்கள் ரூ. 85/-

No. 145

1. பளபளப்பான குரோமியம் கேஸ் 4 ஜுவல்கள் ரூ. 42/-
2. ,, 7 ஜுவல்கள் ரூ. 45/-
3. ,, 15 ஜுவல்கள் ரூ. 72/-
4. ரோல்ட் கோல்ட் 10 வருடம் உத்தரவாதம் 4 ஜுவல்கள் ரூ. 58/-
5. ,, ,, 7 ஜுவல்கள் ரூ. 60/-
6. ,, ,, 15 ஜுவல்கள் ரூ. 85/-

போஸ்டேஜும் பாக்கிங்கும் அணா 10/- பிரத்தியேகம். மேல்கண்டவைகளில் ஒரே சமயத்தில் இரண்டிற்கு ஆர்டர் அனுப்பினால் தபால் செலவு இனாம். பெண்கள் அணியும் கடிகாரங்களுக்கு மேல் கண்ட விலைகளில் 12½ சதவிகிதம் உயர்வு.

அமெரிக்காவில் செய்யப்பட்ட பவுண்டன் பேனாக்கள்

பல பல வர்ணங்களில் மனதிற்குப் பிடித்த ரகங்கள் தற்பொழுது கிடைக்கின்றன.
வழுவழுப்பாக எழுதுபவை



நெ. **1.**	தங்கம் பூசப்பட்ட நிப்புடன்	3	8	0
நெ. **2.**	உயர் ரகம் தங்கம் பூசப்பட்ட நிப்புடன்	4	8	0
நெ. **3.**	உயர் ரகம் **14** காரட் முழுத் தங்க நிப்புடன்	6	8	0
நெ. **4.**	மிக உயர்ந்தது **14** காரட் முழுத்தங்க நிப்புடன்	10	0	0

பார்கர் **51** தங்க மூடியுடன் ரூ. **63**/-
பார்கர் **51** வெள்ளி மூடியுடன் ரூ. **53**/-
பார்கர் மேஜர் ப்ளூடயமெண்ட் ரூ. **37**/-

எவர்ஷார்ப் தங்க மூடியுடன் ரூ. **45**/-
டை ஆயுள் காலம் வரை காரண்டி **24**/-
டை உத்தரவாத மில்லாதது ரூ **18**/-.
ஸ்வான் ரூ. **13**/- உயர் ரகம் ரூ. **19-8**

தபால் செலவு அணா 10/- பிரத்தியேகம். ஒரே சமயத்தில் இரண்டுக்கு ஆர்டர் செய்தால் தபால் செலவு இனாம். பார்கர், எவர்ஷார்ப், இரண்டு பேனாக்கள் தவிர மற்ற பேனாக்களில் ஒரே சமயத்தில் 6 பேனாக்களுக்கு மேல் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு ரூபாய்க்கு இரண்டணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

PARAGON WATCH COY.,

POST BOX No. 11419 :: CALCUTTA (Sk.)

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

★

★

சாரதி
கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

இயக்கத்திற்குத் திரைமறைவி லிருந்தே வேண்டிய உதவிகள் புரிந்தார். இந் நிலையில் முதலாவது சட்ட மறுப்பு இயக்கம் நாடெங்கும் நடந்தது. அப்பொழுது குமாரசாமியின் உள்ளம் சட்ட மறுப்பிலும் குடும்ப பாசத்திலுமாகக் கட்டுண்டு இரண்டையும் உதற முடியாமல் தத்தளித்து நின்றது. அன்றியும் குமரனின் பிதா நாச்சிமுத்து முதலியார் இறந்து சில மாதங்களே ஆயிருந்தன. ஆகலால் குடும்பத்தினின்றும் விலகிச் சத்தியாக்கிரக இயக்கத்தில் சேர முடியவில்லை. ஆனால், சத்தியாக்கிரகத்தில் சேராமலிருந்ததற்காக அவர் வருந்துவது உண்டு. அதற்குப் பிராயச்சித்தமாக உண்ணோநோன்பிருந்ததே அன்னாரின் தேச பக்தியையும், தியாக புத்தியையும் தெளிவாகப் புலப்படுத்தும்.

மற்றொரு சத்தியாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று அல்லும் பகலும் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்து வந்தார். நாட்கள் கடந்து மாதங்கள் பல சென்றன. இச் சமயத்தில் *1932*-ம் வருஷம் பிறந்ததும் தேசத்தில் புத்துணர்ச்சி தோன்றியது. காந்திஜி அஹிம்சா தர்மப் போரை ஆரம்பிக்கப் போகிறார் என்ற செய்தி கேட்டுக் களிப் புற்றார். குடும்பக் கவலையை அறவே மறந்து சத்தியாக்கிரகத்தில் சேர மன உறுதி பூண்டார். *10-1-32* ஞாயிற்றுக் கிழமை காலை பெற்ற தாயிடத்திலும் மனைவி யிடத்திலும் தம் கருத்தை வெளியிட்டார். அவ்விருவரும் மனமின்றிக் கண்ணீர் ததும்பச் சம்மதித்தனர். மாலையில் தம் நண்பர்களிடம் கூறினர். சிலர் சம்மதித்தனர். பலர் சம்மதிக்காது புத்திமதிகள் போதித்தனர். ஆனால், குமாரசாமி ஒரே உறுதியாகத் தம் நோக்கம் நிறைவேறக் கண்ணுங்கருத்துமாயிருந்தார். தம் முதலாளியும் உறவினருமான ஓ. கே. சென்னியப்ப முதலியார் தம்பதிகள் எவ்வளவோ நயமாகவும், பயமாகவும் கூறித் தடுக்க முயன்றனர். ஆனல் குமாரசாமி நள்ளிரவில் அவ்விருவர் பாதங்களையும் பற்றிச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து சத்தியாக்கிரகத்தில் சேருவதற்கு நல் ஆசி அளிக்க வேண்டுமென்று அழுது புலம்பினர். அது கண்டு சென்னியப்ப முதலியார் தம்பதிகள் குமரனின் பிடிவாதத்திற்காகச் சம்மத ஆசி யளித்தனர். பின் அம் முதலாளி வீட்டில் உணவுண்டு வீடு திரும்பினர். அனைவரும் சம்மதித்தது பற்றி அக மகிழ்ந்து அவ்விரவைக் கழித்தார்.

11-1-32 (பிரசோற்பத்தி ஹு மார்கழி மீ *27*) திங்கட்கிழமை தோன்றியது. அதிகாலையில் துயிலெழுந்து, காலைக் கடன்களைச் செய்து, புத்தாடை அணிந்து உணவருந்தினர். அப்போது தான் சூரியன் கீழ்த் திசையில் உதித்தான். முகமலர்ச்சியுடன் தம் இல்லத்தினின்றும் காலை எட்டு மணிக்குக் காங்கிரஸ் சத்தியாக்கிரகக்காரியாலயம் சென்றார். தம்மைத் தொண்டராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினர். குமாரசாமியின் உறுதியையும் வீரத்தையும் அறியாத சத்தியாக்கிரகப் படைச் சர்வாதிகாரிக்கு அவரைச் சேர்த்துக்கொள்ளச் சிறிதும் மனமில்லை. ஆனல் மற்றத் தொண்டர்களின் வேண்டுகோளின்படி, குமாரசாமியையும் சேர்த்துக்கொண்டார்.

மணி ஒன்பது அடித்தது. தொண்டர்படை, "சொந்தநாட்டிற் பிறர்க்கடிமைசெய்தேதுஞ்சிடோம். இனி அஞ்சிடோம்." என்ற பாடலைப் பாடிக்கொண்டு அஹிம்சா ஆயுதந் தாங்கி அன்னியத் துணி மறியலுக்குப் புறப்பட்டது. அந்தக் காட்சி வெகு நேர்த்தியாயிருந்தது. தேசிய கோஷங்களும் பாடல்களும் முழங்கக் கச்சேரி வீதி வழியாகத் தொண்டர் படை நின்று விண்ணைப் பிளக்கும்படி உரத்த குரலில் தேசியப் பாடல்களைப் பாடினர். அது கண்டு பொறுக்காமல் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் படையைக் குறுந்தடி கொண்டு அடித்துக் கலையுமாறு உத்தரவிட்டார். போலிசார் குறுந்தடி கொண்டு தொண்டர்களை அடித்தனர். தொண்டர் படை பலவாறுகச் சிதறியது. ஆனல் வீரத் தியாகி குமாரசாமி மட்டும் தாம் நின்ற இடத்தை விட்டு மறு அடி எடுத்து வைக்காமல் வீரமாக, "வந்தே மாதரம்" என்று சொல்லியபடி கையிலிருந்த தேசியக் கொடியைத் தாழ விடாது இறுகப் பற்றிக் கொண்டு அஹிம்சா நெறி தவருது வெகு துணிச்சலாகப் பண்டைத் தமிழர்களின் நெஞ்சத் திண்மையின் திலகம் போல் நின்ருர். ஐந்து நிமிஷம் சேர்ந்தாற் போலப் போலிசார் தடி கொண்டு தாக்கினர்கள்.

ஓர் அடி மண்டையில் பலமாக விழவே வீரன் குமாரசாமி 'வந்தே மாதரம்' என்ற கோஷத்தோடு தாம் பிறந்து வளர்ந்த தம் நாட்டின் மண்ணில் சோர்ந்து வீழ்ந்தார். அப்பொழுதே குற்றுயிரானர். குமரனின் வீழ்ச்சியையும் கம்பீரமான பார்வையையும் துணிச்சலையும் கண்டு வியக்காதார் இல்லை. குமரனின் உடலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று சிகிச்சைகள் செய்தனர். குற்றுயிராயிருந்த நிலையிலும் கையில் பிடித்திருந்த தேசியக் கொடியை விடவில்லை யென்றுல் அன்னருக்குத் தேசியக் கொடியின் மீதுள்ள நம்பிக்கையும் அன்பும் எத்துணை சிறந்தது என்பது விளங்கும். ஆஸ்பத்திரி சிகிச்சைகளில் ஒரு விதப் பயனுமின்றி அடிபட்ட 24 மணி நேரத்திற்குள் அதாவது 12-1-32-ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தமது ஆவியை அன்னையின் விடுதலைக்கு, இந்திய ஜன சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு, சமர்ப்பித்துவிட்டார்.

தியாகியின் பூத உடல் நம்மை விட்டுப் பிரிந்தாலும் புகழுடம்பு நம்மை விட்டுப் பிரியாது. இவ் வீரத் தியாகியின் நினைவு மங்காமல் என்றும் நிலைத்திருக்கத் தமிழர்கள் ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம்.

*

கொன்றுனும் நின்ருன் கொலையுண்டு நீ கிடந்தாய்.

—கம்பர்

இரண்டு சமாதானங்கள்!

இருபதாவது நூற்ருண்டைப் பற்றித் தாழ்வாகப் பேசாதீர்கள். ஏனென்ருல், அந்த நூற்ருண்டில் பாதியைக்கூட நாம் இன்னும் கடக்கவில்லை. தவிரவும், அந்த நூற்ருண்டின் கடந்த வருஷங்களில் இரண்டு உலக சமாதானங்களையும் பெற்றிருக்கிறேம்!

—டப்ளின் ஒப்பீனியன்

குஜராத்தி இலக்கியத்தின் மறுமலர்ச்சி

●

பி. எச். பி.

இந்தியாவின் இதரப் பாகங்களைப் போலவே குஜராத்தியிலும். இலக்கியம் காலத்துடன் ஒட்டி முன்னேறியிருக்கிறது. "வாழ்க்கையின் விமரிசனம் தான் கலை" என்று மாத்யூ ஆர்னல்டு கூறியதற்கேற்ப, குஜராத்தி இலக்கியம் இன்றைய குஜராத்தி வாழ்க்கையை ஒட்டியே அமைந்திருக்கிறது. இந்தப் போக்கு, இலக்கியத்தின் மற்றத் துறைகளை விட, சிறுகதைகளிலும், கவிதைகளிலும்தான் அதிகம் பிரதிபலிக்கிறது. நாவல், இலக்கிய விமரிசனம் முதலியனவும் வெகு வேகமாக முன்னேறியிருக்கின்றன. என்றாலும், புது உலகத்தைச் சமைக்க விரும்பும் முன்னேற்றச் சக்திகள் அனைத்தும், முந்திய இரு துறைகளிலேயே தங்கள் கவனம் முழுவதையும் செலுத்தியிருக்கின்றன.

வேதாந்தக் கவி அகோ உபதேசித்த மேல் உலக மனப்பான்மையும், தயாராமின் பக்திப் பாடல்களும் இப்போது போய் விட்டன. 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கவிஞர் நர்மத் இயற்றிய கவிதைகள், மக்களைத் தட்டியெழுப்பி, வாழ்க்கையிலே ஒரு புதிய நோக்கைக்கொள்ளும்படி செய்தது. வழக்கம் போல, இந்தத் தீவிரமான புதிய கருத்துக்களுக்கும் எதிர்ப்புக் கிளம்பியது. ஆனால், இதனால் பயன் ஏதும் ஏற்படவில்லை. ஏனெனில், அந்தக் காலத்தில் மக்கள் மேலை நாட்டுப் பழக்க வழக்கங்களை மேற்கொள்ளுவதில் தீவிரமாக இருந்தார்களாதலால், பழைய போக்கைப் பிடித்துக்கொண்டிருக்க விரும்பவில்லை. ஆங்கிலப் படிப்பு குஜராத் மக்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்து, பழையவைகள் அனைத்தையும் அடித்துத் தள்ளிவிட்டது. சமூகப் பழக்க வழக்கங்கள் பரிகசிக்கப்பட்டன; எங்கே பார்த்தாலும் மக்கள் மேலை நாட்டு வாழ்க்கை முறையை ஏற்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆங்கில இலக்கியத் தொடர்பினால், குஜராத்திக் கவிதைத் துறை செழிப்புற்றது. விதவா விவாகம், மறுமணம் போன்ற கருத்துக்கள் இடம் பெற்றன. வேர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, கீட்ஸ் போன்ற கவிஞர்கள், மக்கள் உள்ளத்தில் இடம்பெற்றிருந்த கவிதைத் துறைக்குப் புதுச் சகாப்தத்தை ஆரம்பித்துக் கொடுத்தார்கள்.

ஆனால், இந்தப் போக்கு விரைவிலேயே நின்றது. 'சீர்திருத்தங்கள்' தோல்வியடைந்து, மக்கள்—தாங்கள் முன் பின் அறிந்திராத ஒரு வேகத்தில்—பழைய பரம்பரைக்குத் திரும்பினார்கள். நம்முடைய பழைய நாகரிகத்தின் சின்னங்களையும், மேல் நாட்டு நாகரிகத்தின் சிற்சில பண்புகளையும் கலக்கும்

கடந்த முப்பது வருஷ காலத்தில குஜராத்தி இலக்கியம் மறுமலர்ச்சி பெற்று வளர்ந்து வருகிறது. கவிதை, கதை முதலிய துறைகளில் அந்த இலக்கியம் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறார் ஆசிரியர். ட்ரெண்டு பத்திரிகையிலிருந்து.

முயற்சி இப்போது தொடங்கிற்று. கல்லூரிகளும் கலாசாலைகளும் செய்த உதவியினால், நம் இளைஞர்கள் ஆங்கிலப் படிப்புப் பெற்றார்கள்; ஒரு புறம் ஆங்கில இலக்கியத்தைக் கரைத்துக் குடித்துவிட்டு, மறுபுறம் தங்களுடைய பண்டைக்கால இலக்கியங்களிலே பொதிந்துள்ள அற்புதங்களைச் சுவைப்பதில் ஈடுபட்டார்கள். அவைகளிலே இருந்த பல சிறந்த காவியத் துணுக்குகளைப் படித்து இன்புற்றதாலேயே இந்தப் போக்கு உண்டாயிற்று. இந்தக் காலத்தின் சிறந்த சிருஷ்டியான சரஸ்வதி சந்திரா, பண்டை ஆரிய நாகரிகத்தையும், நவீன மேலை நாகரிகத்தையும் இணைக்க முயன்றிருக்கிறது. இந்தக் காலத்துக் காவியங்களில் 'மதம்' தகுந்த இடம் பெற்றிருக்கிறது. நர்மத் கவியின் காலத்தை விக்ரக ஆராதனையை ஒழிப்பவர்கள் கால மென்றும் கவி கோவர்த்தனம் என்பவரின் காலத்தை விக்ரக ஆராதனையை ஆதரிப்பவர்கள் கால மென்றும் அழைக்கலாம். எனவே, குஜராத்தி இலக்கியத்தின் வளர்ச்சிக் காலத்தைக் கீழ்க் கண்டபடி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) 1808 முதல் 1872 வரை. (2) 1873 முதல் 1915 வரை. (3) 1915 முதல் இன்று வரை.

கடந்த முப்பது வருஷங்களில் குஜராத்தி இலக்கியம் அடைந்திருக்கும் முன்னேற்றத்தின் அறிகுறியைப் புரிந்துகொள்ள, இந்தப் பின்னணி அவசியம். காந்தியம், சமதர்மம், பொதுவுடைமை, வர்க்க உணர்ச்சி, நசுக்கப்பட்ட மக்கள்பால் அனுதாபம் ஆகிய புதுச் சக்திகள் அனைத்தும், இந்த முப்பது வருஷ இலக்கியத்தில் இடம் பெற்றிருக்கின்றன. மொழியும், ஒரு கம்பீரமும், தனிப் பண்பும் பெற்று, ஆனாலும் எளிமையுடன் காண்கிறது. கோவதனாமின் சிருஷ்டிகளில் சம்ஸ்கிருதம், ஆங்கிலம், ஆங்கிலப் புத்தகங்கள் ஆகியவற்றின் 'வாடை' அடிக்கும். இது அந்தச் சிருஷ்டிக்கே தீமையாக முடிந்தது.

குஜராத்தி இலக்கியத்தில் நாவல், நாடகம் ஆகிய துறைகளில் தலைசிறந்தவராக விளங்குபவர் கனியாலால் மானிக்லால் முன்ஷி. கவிஞர் நானாலால் தலபத்ராமினால் கவிதைப் பகுதி சிறப்புப் பெற்றிருக்கிறது. இன்றைய இளம் எழுத்தாளர்களைப் போல் அல்லாமல், இந்தக் கவிஞர் புதிய முறைகளையும், நவீனப் போக்குகளையும் ஒதுக்கி வைத்தே கவிகள் இயற்றுகிறார். இளம் எழுத்தாளர்கள், கால மாறுதலை நன்கு கண்டுகொண்டு, அதற்கேற்பத் தாங்களும் மாறியிருக்கிறார்கள். புதிய விஷயங்களில் அவர்கள் மிகவும் ஆழ்ந்து போயிருக்கிறார்கள். களைத்துப் போன உள்ளத்துக்கு இயற்கை வர்ணனை நன்மை பயக்காததுடன், தீமையும் செய்கிறது. கடவுளே கிடையாது போல் இருக்கிற இன்றைய நிலையில் மனிதன் பசியால் வாடி மடிகிறான். அதே சமயத்தில், பக்கத்திலுள்ள கோயிலில், தெய்வத்துக்கு எல்லா வகையான கேளிக்கைகளும் நடக்கின்றன. இதைக் கண்ட எழுத்தாளன் உள்ளம் உருகி எழுதுகிறான். மக்களின் உடலையும் ஆத்மாவையும் தட்டி எழுப்புகிறது அந்த எழுத்து. கவிதைக்கு அவசியமான நடை, கருத்து, சந்தம் முதலிய பல அம்சங்களைப் பலர்

பல விதங்களில் கையாளுவது நவீன குஜராத்திக் கவிதைகளின் தனிச் சிறப்பாகும். ஆனாலும், இந்த நவீன மாற்றம் பெரும் எதிர்ப்பைப் பெற்றிருக்கிறது. அதனால், மிகச் சிறந்த சிருஷ்டிகள்கூட அலட்சியம் செய்யப்படுகின்றன. இந்தச் சிறிய கட்டுரையில் குஜராத்திக் கவிகள் எல்லாரையும் பற்றி விரிவாக எழுதுவது இயலாது. கவிஞர் நர்மத் காட்டிய பாதையில் செல்லும் குஜராத்திக் கவிதைத் துறை சிறந்த முன்னேற்றம் பெற்றிருக்கிறது என்பதே போதுமானது.

தாங்கள் தற்சமயம் வாழும் காலத்தைப் பற்றிக் குஜராத்தி இலக்கிய கர்த்தாக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர் என்பதற்குக் குஜராத்திச் சிறு கதைகளே நல்ல அத்தாட்சி. சிறு கதைகளில், காதலோ, யுத்தமோ, அன்றிப் பழைய பொருள்களின் மேல் உடுப்புப் பிடிப்போ இருப்பது இப்போது கிடையாது. காலத்துக் கேற்ற நடையில், காலத்துக் கேற்ற கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள் நவீன எழுத்தாளர்கள். ஜாதி அமைப்பில் புரட்சி, சமூகத்தில் இருக்கும் சமத்துவமின்மையை எதிர்க்கும் உணர்ச்சி, பாமர மகனின் புரட்சி ஆகிய எல்லாம் நவீனச் சிறு கதைகளில் உரிய இடம் பெற்றிருக்கின்றன. 'ஒழுக்க'த்தைப் போதிப்பதோ, 'நீதி'யைப் புகட்டுவதோ இப்போது கிடையாது. உள்ளதை உள்ளபடி எழுதி, வாசகனே அதைத் தீர்மானித்துக்கொள்ளும்படி விட்டு விடுகிறார்கள். கலையின் உண்மையான நோக்கம் இப்போதுதான் புலப்பட்டிருக்கிறது. அரண்மனையில் மட்டுமின்றி குடிசையிலும் சிறந்த இலக்கியத்துக்கான கருத்துக்கள் இருக்கும் என்ற உண்மையை எழுத்தாளர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். வேசியும், குடிகாரனும் இலக்கியத்தில் பாத்திரங்களாக ஆக முடியாது என்ற கொள்கை போய்விட்டது. அதற்கு மாறாக, அவர்களுடைய உணர்ச்சிகளையும் எழுத்தில் காட்டப் பலர் முனைந்திருக்கிறார்கள். தூமகேது என்ற சிறந்த ஆசிரியர் சொல்கிறார்: "தான் வாழும் காலத்துடன் ஒட்டாமல், ஒதுங்கி நிற்கும் எந்த எழுத்தாளனும், சிறந்த சிருஷ்டி என்று எதையும் செய்ய முடியாது."

கடந்த முப்பது வருஷ காலத்தில் குஜராத்தி இலக்கியம் அடைந்திருக்கும் அபார முன்னேற்றத்தை இந்தக் கட்டுரை மேலோட்டமாகத்தான் ஆராய்ந்திருக்கிறது. எல்லாவற்றையும் மறைத்தோ, அல்லது எல்லாவற்றையும் பூரணமாகத் தெரிவித்தோ எழுதப்பட்டதல்ல இது. குஜராத்திக் கவிதைகளும், சிறு கதைகளும் கொண்டுள்ள போக்குகளைக் காட்டவே முயன்றிருக்கிறேன். குஜராத்தி இலக்கியம் வளமுடையது; ஜீவன் உடையது; கலையின் உண்மையான நோக்கத்துக்கு ஏற்பக் காலத்துடன் ஒட்டி நிற்பது.

✲

மேதாவியின் பைத்தியம்

சார்லஸ் டிக்கன்ஸ் என்ற பிரசித்தி பெற்ற ஆங்கில நாவலாசிரியர் வடக்கே தலைவைத்துத்தான் படுப்பாராம். வெளியிடங்களுக்குப் போனால் படுக்கையைத் தெற்கு வடக்காகப் போடுவதற்கு உதவியாய் ஒரு திசை காட்டிக் கருவியையும் வைத்திருப்பாராம்!

—கரோனட்

சர்க்கரையைப் பற்றி...

●

'ஜீனி'

1945-46 வருஷ உலக சர்க்கரை உற்பத்தி 2½ கோடி டன் தான். அதிகமாகத் தோன்றுகிறதோ? சண்டைக்கு முன்பு உற்பத்தியான சர்க்கரையில் இது ஐந்தில் ஒருபாகம்தான். ஜாவா, பார்மோசா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் யுத்தத்துக்கு முன்பு உலகத்திலேயே சர்க்கரை உற்பத்திசெய்யும் நாடுகளில் முன்னணியில் நின்று, உலக உற்பத்தியில் ஐந்தில் ஒரு பாகத்திற்குமேல் உற்பத்திசெய்தன. ஆனால், இன்று அந்த நாடுகள் ஜப்பானியப் படையெடுப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டதால், முன்னிருந்த நிலையை இன்னும் அடையவில்லை. புதிதாகப் பயிர் செய்யப்படும் கரும்புப் பயிர் பயன்தர இரண்டாண்டுகள் ஆகும்.

யுத்தத்துக்குமுன் இங்கிலாந்தில் தலைக்கு 104 பவுண்டு சர்க்கரை வீதம் கிடைத்தது. அமெரிக்காவில் 110 பவுண்டும் பிரான்சு, ஜெர்மினியில் 60 பவுண்டுக்குக் குறைவாகவும் போலண்டில் 37 பவுண்டும் சீனாவில் 31 பவுண்டும் கிடைத்தது. யுத்தகாலத்தில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் முறையே 68 பவுண்டும், 89 பவுண்டுக்குக் குறைவாகவும் கிடைத்தது.

சமாதான நாட்களில் சர்க்கரை உபயோகம் அதிகமாகிக் கொண்டே வந்தது. ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தை அளக்கும் அளவுகோலாக இருந்தது அந்நாட்டின் சர்க்கரை உபயோகத்தைக் காண்பிக்கும் அளவு. ஏனென்றால் மக்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தாற்போல்தான் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குகிறார்கள். அப்படியிருந்தும், பயிர் செய்து வாழ்ந்த மக்கள் பெரும் பணம் சேகரிக்கவில்லை. உலகம் முழுவதும் கட்டுப்பாடான ஒரே விலை, அதாவது அந்தர் கரும்பு, 12 ஷில்லிங்காக இருக்கவேண்டும் என்று கரும்பு உற்பத்தி செய்பவர்கள் விரும்பினார்கள். ஆனால், 1930-ம் வருஷம் அதன் விலை ஏகமாகக் குறைந்து 5 ஷில்லிங்காகிவிட்டது.

பிரிட்டனில் சென்ற மகசூலில் 38,86,000 டன் கரும்பு கிடைத்தது.

மேலை நாடுகளில் பீட்ரூட் என்னும் ஒருவகைக் கிழங்கிலிருந்து சர்க்கரை தயார்செய்கிறார்கள். இது அவ்வளவு லாபகரமானதல்ல. இது ஓர் ஏக்கரில் விளைந்த கரும்பிலிருந்து 5½ டன் சர்க்கரை எடுக்கலாம். ஆனால் ஓர் ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட பீட்ரூட்டிலிருந்து இரண்டு டன் சர்க்கரைதான் எடுக்க முடியும். மழை அதிகமான வருஷங்களில் பீட்டிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை அளவு மிகமிகக் குறைவாக இருக்கிறது. ஏனெனில் பீட்ரூட்டில் சர்க்கரை அதிகம் சேர சூரியவெளிச்சம் தேவை.

இன்று சர்க்கரை ஓர் இன்றியமையாத பொருளாக இருக்கிறது. இந்தச் சர்க்கரை வாய்க்கு ருசியாக இருப்பதோடு, மற்றும் என்னென்ன குறைகுணங்களைக் கொண்டிருக்கிறது என்பதை ஜான் புல்லில் வெளிவந்த இந்தக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இப்பொழு தெல்லாம் ஹோட்டல் காப்பியில் போடும் சாக்கரினுக்கும், சர்க்கரைக்கும் ஞ்நானப்பிராப்திகூடக் கிடையாது. கோல்—டாரிலிருந்து தயார்செய்யப்படும் சாக்ரின் நம்முடைய ருசி அறியும் நரம்புகளில், சர்க்கரையைப் போன்ற சுவையை உண்டுபண்ணுகிறது. இதனுல் உடம்புக்கு எவ்விதத் தீங்கும் நேராவிட்டாலும், சர்க்கரையில் இருக்கும் கொஞ்ச நஞ்ச சத்தும இதில் இல்லை.

நம்முடைய உமிழ்நீரே மாச் சத்துக்களைச் சர்க்கரையாக மாற்றிவிடுவதால் நம்முடைய ஆரோக்ய வாழ்வுக்குச் சர்க்கரை தேவையில்லை என்று சொல்லுகிருர்கள். மேற்கு இந்தியத் தீவுகளில் கரும்பைப் பயிர்செய்ய ஆரம்பிப்பதற்கு முன் பழங்கள், தேன் முதலியவற்றி லிருந்து தான் இனிப்பைப் பெற்ரேம்.

சர்க்கரையால் இவ்வளவுபயன் இருந்தும் தேவைக்கு மீறிக் கரும்பை உற்பத்திசெய்து விலையைக் குறைக்க மனமில்லாதவர்களாக இருக்கின்றனர் உற்பத்தியாளர்கள்.

✲

‘ திருச்சிக்காரர்கள் யோக்கியர்கள் ’

திருச்சினப்பள்ளி வாசியான டாக்டர் டி. டேனியல் என்பவர் அமெரிக்காவிலுள்ள மின்னெஸோட்டா சர்வகலாசாலைக்கு ஒரு புத்தகத்துக்கு ‘ஆர்டர்’ பண்ணியிருந்தாராம். அதன்படியே, 1941 டிசம்பரில் ஸ்ரீ டேனியலுக்குப் புத்தகம் அனுப்பப்பட்டதாம். ஆனல், அப்பொழுது பஸிபிக் மகாயுத்தம் நடந்ததால் மேற்படி சர்வகலாசாலைக்கு ஸ்ரீ. டேனியாவிடமிருந்து யாதொரு தகவலும் கிடைக்கவில்லை. இப்போது, 1947 மே மாதத்தில் அந்தச் சர்வகலாசாலைப் பொக்கிஷதாருக்கு ஸ்ரீ டேனியலிடமிருந்து மேற்படி புத்தகத்துக் குரிய பணமும் ‘யுத்தத்தினுல் இது வரையிலும் பணம் அனுப்ப முடியாது போய்விட்டது’ என்ற ஒரு குறிப்பும் வந்து சேர்ந்தனவாம். அந்தப் பொக்கிஷதார் திருச்சிக்காரர்கள் மிகவும் யோக்கியமானவர்களா யிருக்கவேண்டும் என்று கூறினராம்.

ஒரு காதல் கதை

நாங்கள் இருவரும் கொலம்பஸில் நடந்த ஒரு விருந்தில் சந்தித்தோம். மார்ஷல் என்னைத் தம்முடைய காரில் அழைத்துச் சென்று என் வீட்டில் கொண்டுவிடுவதாகச் சொன்னுர். நான் ஒத்துக்கொள்ளவே, இருவரும் காரில் புறப்பட்டோம். ஒருமணி நேரம் காரில் சுற்றியாகிவிட்டது. என் வீடு இருக்கும் இடத்துக்குக் கார் வரவேயில்லை. கொலம்பஸோ சிறிய ஊர்.

“ஆமாம், எத்தனை நாளாக நீங்கள் இந்தப் பக்கத்தில் இருக்கிறீர்கள் ?” என்று நான் மார்ஷலைக் கேட்டேன்.

“இரண்டு வருஷமாய்” என்று பதில் சொன்னுர்.

“உங்களுக்கு இந்த ஊர்த் தெருக்களை யெல்லாம் தெரியாதோ ?” என்று விடாமல் கேட்டேன்.

“ஏன், வெகு நன்ருகத் தெரியுமே! அவ்வளவு நன்ருகத் தெரிந்ததால் தான், இத்தனை நேரமாக உங்கள் வீட்டுப் பக்கம் கார் சென்றுவிடாமல் பார்த்துக்கொண் டிருக்கிறேன் !” என்ருர் அவர்.

—ஸ்ரீமதி மார்ஷல்

புத்தக விலை அதிகமா ?

வை. கோவிந்தன்

புத்தக வெளியீட்டாளர்கள் கொள்ளை யடிக்கிறார்கள், அநியாய விலை வைக்கிறார்கள் என்ற எண்ணம் பெரிதும் பரவி யிருந்தது. இப்பொழுது அந்த எண்ணம் சிறிதளவு மாறியிருக்கிறதென்றாலும் எண்ணம் பரவிக் கொண்டுதான் இருக்கிறது.

புத்தக வெளியீட்டாளர்கள், நாட்டில் அறிவு வளர வேண்டுமென்பதில் உள்ள சிரத்தையால் புத்தக விலையைக் குறைவாக வைத்துக் குறைவான லாபத்தைத்தான்—நஷ்டம் கூட—அடைகிறார்கள். 'இதென்னடா இது, வெளியீட்டாளர் கொள்ளையடிக்கிறார்கள் என்று நாம் சொல்லும் போது, வெளியீட்டாளர் சிறிதளவு லாபந்தான்—நஷ்டம் கூட—அடைகிறார்கள் என்று சொல்லுகிறானே இந்தக்கட்டுரையாளன்?' என நினைக்கிறீர்கள் அல்லவா? நீங்கள் மாத்திரம் நினைக்கவில்லை. 'மூன்று ரூபாய் விலையுடைய ஆயிரம் புத்தகங்களையும் ரூ. 3000-த்துக்கு விற்றுவிட்டு வெளியீட்டாளர், தமக்கு ரூ. 450 தானே 'ராயல்டி' தந்திருக்கிறார்கள்? வெளியீட்டாளருக்கு இந்த புத்தகத்தினால் ரூ. 2550 லாபம் கிடைக்கிறதே?' என நினைத்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களும் 1947-ம் வருஷத்தில் இருக்கிறார்களென்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

புத்தக உற்பத்திச் செலவைப் போல் அமெரிக்காவில் ஐந்து மடங்கு விலையும் ஐரோப்பாவில் நான்கு மடங்கு, ஐந்து மடங்கு விலையும் வைக்கிறார்கள். அவசியமாக வெளிவர வேண்டிய, ஆனால் உடனே விற்காத சில புத்தகங்களுக்குப் பத்துமடங்குகூட விலை வைப்பார்கள். அப்படி விலை வைத்தால்தான் அவர்களுக்கு வியாபாரம் கட்டுகிறது. வியாபாரத்தில் லாபம் கிடைத்தால் தான் தொடர்ந்து புத்தகங்களை வெளியிட்டு வரமுடியும்.

யுத்தத்திற்கு முன் தமிழ் நாட்டிலும் உற்பத்திச் செலவைப் போல நான்கு மடங்கு விலைதான் வைத்து விற்பனை செய்தார்கள். அந்தக் காலத்தில் இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் அச்சுக் கூலி மிக மிகக் குறைவு. இப்பொழுதோ அச்சுக் கூலி நான்கு மடங்கு ஏறி யிருக்கிறது. காகிதம் ஐந்து மடங்கு விலை ஏறியிருக்கிறது பைண்டிங் செலவு நான்கு மடங்கு ஏறி யிருக்கிறது. இன்றைத் தினம் இந்தியாவில் வெளிவரும் புத்தகங்களில் தமிழில் வெளி வரும் புத்தகங்கள் தாம் மிக்க அழகாக வெளி வருகின்றன வென்பதில் நாம் பெருமைப்படாதிருக்க முடியாது. அப்படி வெளியிடுவதற்கும் அதிகமாகச் செலவு ஏற்படுகிறது.

ஆசிரியருக்கு அந்தக் காலத்தில் ஒரு புத்தகத்திற்குக் கொடுக்கும் தொகை மூன்று ஸ்தானத்தைக் கூட எட்டுவதில்லை. இப்பொழுதோ செளகரியமாக

புத்தகங்களுக்கு அதிக விலை வைத்து வெளியிட்டு, தமிழ் நாட்டுப் பிரசுரகர்த்தர்கள் கொள்ளை யடிக்கிறார்கள் என்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இந்த அபிப்பிராயம் தவறானது என்று தமிழ் நாட்டில் பெரிய பிரசுரகர்த்தர்களில் ஒருவரான சக்தி அதிபர் விவரமாக இக் கட்டுரையில கூறுகிறார். தினசரியிலிருந்து.

உங்கள் உணவுக் கவலை தீர்ந்தது!

நன்றாக பரிசோதனை செய்து பார்த்ததில் நம்முடைய உணவு தேகாரோக்யத்திற்கு தேவையான சத்துப்பொருள்கள் குறைந்ததாகவே இருக்கின்றது.

சமீபத்தில் நடத்தப்பட்ட போஷிப்பு உணவு ஆராய்ச்சிகளில் நமது தேகாரோக்ய உணவுகளில் உடலை வளர்க்கும் புரோடீன், சத்து நிறைந்த விட்டமின், பலம்தரும் கொழுப்பு, கார்போ ஹைட்ரேட்ஸ் முதலியவைகளை நமது உணவோடு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியுள்ளார்கள். தற்காலத்து நிபுணர்கள் நமது உணவின் குறைபாடுகளை நிறைந்த போஷிப்புகளைச் சேர்த்து சரிசெய்து கொள்ளலாம் என்று கண்டுபிடித்துள்ளார்கள். அதாவது புரோடீன், விட்டமின் உலோக சத்துக்கள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட உணவுகளைக்கொண்டு சரிசெய்து கொள்ளலாம்.

மெக்லெக் கம்பெனியார் இப்படிப்பட்ட போஷிப்பு உணவுகளை குழந்தைகள், பெண்கள், ஆண்கள் முதலிய சகலருக்கும் தேகாரோக்யத்தை அளிக்கும் படியாக முதன்முதலாக செய்துள்ளார்கள். இவர்களின் போஷிப்பு உணவுகளை ஆராய்ந்தறிந்த நிபுணர்கள் நம்முடைய உணவுகளின் குறைபாடுகளுக்கு முற்றிலும் ஏற்றவை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

மெக்லெக் நியூட்ரிமெண்ட்ஸ்

உணவில் குறையாய் உள்ள உணவுச் சத்துக்களை அளிப்பவை.

தி மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ் அன் பார்மஸூடிகல்ஸ் லிட்.
99-A, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. மதராஸ்

<u>மெக்லெக் புரோடீன் ஃபூட்</u>: வயது வந்தவர்களுக்கு உடம்பை வளர்க்கும் சத்துள்ள புரோட்டீன் சாரம்கொண்டது.

<u>மெக்லெக்பில்ரேன் ஃபூட்</u> குழந்தையின் உணவில் புரோடீன் குறைபாடுகளை நீக்கி போஷிக்கும் சாரம் கொண்டது.

<u>மெக்லோவிட்ஸ்</u>: விட்டமின் சத்துக்கள் உலோக சத்துக்களின் சாரங்களைக்கொண்டு வயது வந்தவர்களுக்கு உணவு குறைகளை நீக்கி புஷ்டியை அளிப்பது.

<u>சிரப் கால்விடல்</u>; விட்டமின் சத்துக்களும் உலோகசத்தும் நிறைந்தது. குழந்தைகளுக்கு மிகச் சிறந்தது.

<u>பொலிஜென் அன் பெப்டோஜென்</u>: ரோக சம்பந்தமான சிகிச்சைபெறுபவர்களுக்கு ஏற்ற உணவு.

விவரங்கள் கொண்ட புத்தகம் வேண்டுவோருக்கு இனாமாக அனுப்பப்படும். எழுதுங்கள்.



ADARTS MNP. 43 D Tamil

பத்திரமானவை
உயர்ந்த வட்டி
வருமானவரி இல்லாதவை

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

இன்றைய
பிரபலமான முதலீடு

AC-259-TM

அவைகள் மிக பத்திரமானவை, முதலும வட்டியும் சர்க்காரால் உத்தரவாதமளிக்கப்பட்டவை. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சதவிகிதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மென்ட் பத்திரத்தின் மேல் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம் டாக்ஸ் செலுத்தவேண்டியதில்லை.

சிறு தொகைகளைச்சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம்.

ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸுகளிலாவது, கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜென்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

வாழ்க்கை நடத்தப் போதிய வருமானம் புத்தகம் எழுதுவதிலேயே ஆசிரியருக்குக் கிடைக்கிறது. 10 முதல் 20 சதவிகிதம் வரை 'ராயல்டி' கிடைக்கிறது.

எல்லா வகையுமாகச் சேர்ந்து இப்பொழுது புத்தக உற்பத்திச் செலவு யுத்த காலத்திற்கு முன்பு இருந்ததைப் போல் ஆறு மடங்கு அதிகமாக ஆகிறது. ஆதலால் உற்பத்திச் செலவைப் போல் நான்கு மடங்கு விலை வைத்தால் தமிழ் மக்களால் வாங்க முடியாதெனக் கருதி உற்பத்திச் செலவைப் போல் இரண்டு மடங்கு விலை வைக்கிறார்கள். இரண்டு ரூபாய் உற்பத்திச் செலவு ஆன புத்தகத்திற்கு நான்கு ரூபாய் விலை வைக்கிறார்கள். 1000 புத்தகம் அச்சாகின்றன என வைத்துக்கொள்வோம். இந்த ஆயிரம் புஸ்தகங்களில் ஆசிரியர் பிரதி, மதிப்புரை, இன்னும் மற்ற வகைகளில் 100 புஸ்தகங்களை விற்பனையில் சேர்த்துக்கொள்ளக் கூடாது. 900 புத்தகங்கள் ரூ.3600-க்கு விற்கிறது. அதில் சராசரி 25 சதவிகிதம் புத்தக விற்பனையாளருக்குக் கமிஷன் மூலம் ரூ. 900 கொடுக்க வேண்டும். 3 ரூபாய் விலையுள்ள 12 புத்தகங்களை வருடத்தில் வெளியிடும் நிலையத்திற்குக் குறைந்தது வருஷத்தில் ரூ. 4800 செலவு வரும். அதன்படி மாதத்தில் ரூ 400 செலவு வரும். புத்தக உற்பத்திச் செலவு ரூ. 2000, கமிஷன் ரூ 900, ஆபீஸ் செலவு ரூ. 400, மொத்தம் செலவு ரூ. 3300 வருகிறது. வருமானம் ரூ. 5600 செலவு நீக்கி ரூ. 300 ஆதாயம் கிடைக்கிறது. இந்த ஆதாயமும் அச்சிட்ட புத்தகங்கள் அனைத்தும் விற்றால்தான்.

வெளியீட்டாளருக்கு லாபம் கிடைக்கும். எப்பொழுது கிடைக்கும்? தமிழ் மக்கள் பதினாயிரக் கணக்கில், லட்சக் கணக்கில் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படித்தால் புத்தக விலையும் குறைய வழி உண்டு. வெளியீட்டாளருக்கும் லாபம் கிடைக்கும். நல்ல நல்ல அறிவுக் குகந்த புத்தகங்களைத் தகுதியானவர்களைக் கொண்டு எழுதச் செய்து வெளியிடுவார்கள். தமிழ் வளரும்; தமிழ் மக்களும் உலகத்தில் தலை தூக்கி நிற்க முடியும்.

✲

கடைசி ஆயுதம்!

திருநெல்வேலிக்கு அருகாமையில் உள்ள ஓர் ஊரில் ஒரு ஸ்பெஷல் பவளக்கொடி நாடகம் நடந்தது. நாடகத்தில், அர்ஜுனன் பவளக்கொடியின் உள்ளத்தைக் கவருவதற்கு எத்தனையோ தந்திரங்களை எல்லாம் செய்து பார்த்தான். பவளக்கொடி எதற்கும் மயங்குவதாகத் தோன்றவில்லை, ஆகவே, சபையைப் பார்த்து அர்ஜுனன் சொன்னதாவது:

"பவளக்கொடி எதற்கும் மயங்கமாட்டேன் என்கிறாளே! என்ன செய்யலாம்? ஆம், இனி நம் புன்னகையை உபயோகிக்க வேண்டியது தான்!"

கூட்டத்துக்குக் காரணம்

"என்னப்பா, இந்த வீட்டிலே ஒரே கூட்டமாயிருக்கிறது?"

"இங்கே ஒருத்தரு உண்ணுவிரதம் இருக்கார் சார்!"

"அதற்குக் கூட்டம் கூடுவானேன்?"

"அவருடைய அரிசி ரேஷன் கார்டை வாங்கிக்கிட்டுப் போவலாம்னு தான்!"

—வி. சுந்தரம்

மண் புழு

●

இ. ஆர். யர்ஹாம்

"உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்று அறைகூவுகின்றனர் அரசாங்கத்தினர். உற்பத்தியைப் பெருக்க நவீன இயந்திர சாதனங்கள் இல்லையே என்றாலும் கூட ஒருபக்கம் இயற்கை நமக்கு 'உழவர்'களைக் கொடுத்திருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க 'மண்புழுக்கள்' என்ற இந்த உழவர்களை நாம் பெருக்க வேண்டும். மண்புழுக்கள் அதிகமாக இருந்தால் நிலத்தைப் பண்படுத்திப் பயிர்களுக்கு வேண்டிய சத்துப் பொருள்களைச் சேகரித்துக் கொடுக்கப் பெரிதும் உதவியாக இருக்கும்.

மண்புழுக்கள் இல்லாவிட்டால் பயிர் நிலங்கள் சாரமற்றுப் போய்விடும்; செழிப்புள்ள நிலங்கள் ஒன்றும் விளையாத தரிசு நிலங்களாக ஆகிவிடும். மண்புழுக்களின் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்த சார்லஸ் டார்வின் கூட "உலக சரித்திரத்தில் முக்கியப் பங்கு எடுத்துக் கொண்ட பிராணி மண்புழு தான்" என்று அபிப்பிராயப்படுகிறார். தாமஸ் பாரெட் என்ற அமெரிக்க விஞ்ஞானி எழுதிய புத்தகம் ஒன்றில், "மண்புழு உழவனின் உயிர்த் தோழன்" என்று எழுதியுள்ளார். மண்புழுக்களை வீட்டில் வளர்க்கப்படும் பிராணியாக மாற்றிவிட வேண்டும் என்றும், அவைகள் பாடுபட்டு உழைக்கவும், தங்கள் இனத்தை விரைவில் பெருக்கவும் வேண்டிய சாதனங்களைக் கண்டுபிடிக்கவும் தாம் முயன்று வருவதாக அவர் எழுதியிருக்கிறார். நாம் உண்ணும் உணவுப் பொருள்கள் யாவும் பூமியில் முதல் ஓர் அடி ஆழத்துக்குள் தான் விளைகிறது. பூமி மட்டத்திலுள்ள மண்ணைப் பக்குவப் படுத்துவதுதான் மண்புழுவின் வேலை.

நல்ல செழிப்பான நிலங்கள் தங்களுடைய செழிப்புத் தன்மையை மெல்ல மெல்ல இழந்து வருகிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். வெள்ளத்தினாலும், புயற்காற்றினாலும் தரைமட்டத்திலுள்ள புழுதி மண் வீணாக விரயப்படுத்தப் பெறுகிறது. பூமி சாரமற்று தாவர வர்க்கங்களுக்கு வேண்டிய சத்து இல்லாமல் போய்விடுவதைத் தடுக்க, மண்புழுவைத் தவிர வேறு எத்தகைய எரு முதலிய செயற்கைப் பொருளாலும் முடியாது.

விவசாய முறையில் ஈடுபட்டு, அத்துறையில் ஆராய்ச்சி செய்து வந்த சர் ஆல்பர்ட்டு ஹோவார்டு கூறுவதாவது: "நம் நாட்டுப் பயிர் நிலங்கள் நல்ல மாசூலைத் தர வேண்டுமானால், நாம் கையாளும் பல முறைகளில், மண்புழுக்கள் செய்யும் வேலையையும் நாம் கவனிக்க வேண்டும். மண்புழுக்களின் சேவையை நாம் முழுவதும் பயன் படுத்திக்கொண்டால், இப்பொழுது நாம் பெறும் மாசூலைக் காட்டிலும் பலமடங்கு அதிகமாகவே கிடைக்கும் என்பது நான் என் அனுபவத்தில் கண்ட உண்மை." மண்புழுக்

கேவலம், மண் புழுக்கள் தான். ஆனால், உலகம் தோன்றிய நாளிலிருந்து அவை செய்து வரும் சேவைக்கு உவமை கூற முடியவில்லை. ஆசிரியர் இந்தப் பயனுள்ள கட்டுரையை மிகவும் தெளிவாக எழுதியிருக்கிறார். எவ்ரிபடீஸ் பத்திரிகையில் வெளியானது.

களின் உபயோகத்தை முற்றிலும் அறிந்த கில்பர்ட் வொயிட், "மண்புழுக்கள் பார்வைக்குச் சிறியனவாகவும், வெறுக்கத்தக்கனவாகவும் இருந்தாலும் அவை இல்லாமற் போனல், உலகமே சூன்யமாகிவிடும். தாவர வர்க்கங்களைப் பெருக்க மண்புழுக்கள் உறுதுணையாக இருக்கின்றன. மண்புழுக்கள் இல்லாவிட்டால் பூமி ஜில்லிட்டு, பாறையாகி, ஒன்றும் விளையாத தரிசாகிவிடும்," என்று சொல்லுகிறார்.

இலைகள், வைக்கோல், சிறு சுள்ளிகள் முதலியவற்றை மண்புழுக்கள் உட்கொண்டு, அவற்றை நன்ருக ஜீரணித்து வெளியே தள்ளிவிடுகின்றன. வெளித் தள்ளப்பட்ட கழிவுப் பொருள்தான் செடிகொடிகளுக்கு இன்றியமையாத, சத்துள்ள உணவாகிறது. சாகுபடிக்கேற்ற நிலங்களில் ஏக்கரா ஒன்றில் ஐந்து லட்சம் புழுக்களுக்கு மேல் உள்ளனவாம். இவை ஒரு வருட காலத்தில், நூறு டன்னுக்கு மேற்பட்ட எருவை வெளியேற்றுமாம்.

மண்புழுக்கள் குறிப்பிட்ட சீதோஷ்ண ஸ்திதியில்தான் வாழ முடியும். உஷ்ணப் பிரதேசங்களிலும், வறட்டுப் பூமியிலும் அவை உயிர் வாழமாட்டா.

மண்புழுக்கள் தங்களுடைய கழிவுப்பொருள்களால் தரைமட்டத்தை உயர்த்திவிடுகின்றன. இங்கிலாந்தில் பதினைந்து ஆண்டு காலத்தில் தரைமட்டம்,கால் அடி உயர்ந்துவிடுகிறது. இதற்குக் காரணம் மண்புழுக்கள் வெளியேற்றும் கழிவுப் பொருள்தான் என்று அபிப்பிராயப்படுகின்றனர். தரைமட்டத்துக்கு இரண்டு அடி கீழேயுள்ள ஒவ்வொரு மண்ணும் இருபத்தேழு வருஷ காலத்தில், ஒரு முறையாவது தரைமட்டத்துக்கு மேலே கொண்டுவரப் படுகிறது என்பதை மேற்கு ஆப்பிரிக்காவில் மிகச் செழிப்பான பிரதேசத்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மண்புழுக்கள் இரவு நேரங்களில்தான் தம் வேலையைச் செய்கின்றன. சிறு கற்கள், சிறகுகள், இலைகள் மற்றும் இதுபோன்ற குப்பைகளை மண்புழுக்கள் விழுங்குகின்றன. இவைகளுடைய வயிறு எதையும் தவிடு பொடியாக்கும் சக்தி வாய்ந்த ஓர் இயந்திரம். எல்லாம் ஜீரணமாக்கப்பட்டதும், அதற்குத் தேவையானவை போக, தேவையற்ற பொருள்கள் அதனுடைய ஜாடராக்கினியுடன் நன்ருகக் கலந்து அறைக்கப்பட்டு வெளியே வருகின்றன. வெளியேறும் கழிவுப் பொருள்கள் தான் தாவர வர்க்கத்திற்குப் போஷாக்குத் தரும் அமிழ்தம். மண்புழுக்கள் சதா பூமியைத் துளைத்துக்கொண் டிருப்பதால், பூமி மிருதுவாக்கப்படுகிறது. பயிர்களின் நுண்ணிய வேர்கள் நன்ருகப் பரவி, தாய்ப் பயிருக்கு உணவு தேடிக் கொடுக்கச் சாதகமாக இருக்கிறது.

"மனிதனல் கண்டு பிடிக்கப்பட்டவற்றுள் மிகப் பழம் பெருமைவாய்ந்து—மனிதனுக்கு உதவியாக இருப்பது—ஏர். ஆனல், மனிதன் தோன்றுவதற்கு முன்பே நிலத்தை ஒழுங்காக உழத் தொடங்கி இன்னும் உழுது வருவது மண்புழுதான். உலக சரித்திரத்தில் இந்தக் கட்டுப்பாடான ஜந்துக்களைப்போல் முக்கியப் பங்கு கொண்ட வேறு பிராணிகள் அதிகம் இருக்குமா என்பது சந்தேகமே" என்று டார்வின் கூறுகிறார்.

வெள்ளிக் கணை

●

"பிரயாணி"

அரை வயிற்றுச் சோற்றுக்கு இன்று தாளம் போடுகிறவனுக்கு ஐந்து வருஷம் கழித்து லட்டு கொடுத்துப் பிரயோஜனம் என்ன? ஆனல், இந்தக் கேலிக் கூத்தைச் சமீபத்தில் இந்திய சர்க்கார் செய்திருக்கிறது. 'வெள்ளிக் கணை' என்றபெயருடன் நாடெங்கும் 'சுற்றுப் பிரயாணம்' செய்து வரும் புதிய 'முதல் இந்திய ரயில் வண்டி' ஏழை இந்தியனது இன்றைய தேவையை ஒரு நாளும் பூர்த்தி செய்யாது.

இந்தியாவின் 40 கோடி மக்களுக்கு, 41000 மைல் இருப்புப் பாதைதான் இருக்கிறது. இந்தியாவில் இருக்கும் மொத்த ரயில் வண்டிகள் மூன்று லட்சத்துக்கும் குறைவு. பரப்பில் சென்னை மாகாணத்தையும்விடக் குறைவான பிரிட்டனிலோ—4½ கோடி மக்களுக்கு—20,000 மைல் இருப்புப் பாதையும், 12 லட்சம் வண்டிகளும் இருக்கின்றன. இதே அளவில் இந்தியாவில் வண்டிகளையும், இருப்புப் பாதைகளையும் பெருக்க வேண்டுமென்றே பாமர இந்தியன் விரும்புகிருன். மெத்தை தைத்த ஆசனங்களும், மின்சார விசிறிகளும் அவனுக்கு அவ்வளவு அவசியமில்லை. கால் நீட்டிப் படுக்கவும், சௌகரியமாக உட்காரவும் இடமிருந்தால் போதும். அதற்கு வண்டிகளை அதிகமாக உற்பத்தி செய்து, இருப்புப்பாதைகளையும் நிறையப் போடுவதுதான் சரியான வழி. 'வெள்ளிக்கணை' வண்டிகள் 1950-ம் வருஷத்தில்தான் தயாராகும். இவைகளைக் கட்ட வெளிநாட்டிலிருந்து தேவையான சாமான்கள் இறக்குமதியாக வேண்டும். அதற்குள், தேவைக்கு அதிகமாக இருக்கிருர்களென்று காரணம் கூறி, ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ரயில்வே தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கப் போகிருர்கள். இன்னும் 20 வருஷத்துக்கு, இந்தியாவில் ரயில் வண்டிகள் தயாரிக்கும் வேலையை இது நிச்சயமாகத் தடை செய்யும்.

இந்த நிலையில் 'வெள்ளிக் கணை'யை ஒவ்வோர் ஊருக்கும் கொண்டுபோய்க் காட்சியில் வைப்பதைவிட, வேறு கேலிக் கூத்து ஒன்று இருக்க முடியுமா?

சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு இந்த 'மகாராஜாக்கள் வண்டி' வந்திருந்தபோது எடுத்த படம் எதிர்ப் பக்கத்தில் காட்சியளிக்கிறது.

இன்று, இந்திய மக்கள் ரயில் பாதையும் ரயில் வண்டிகளும் போதாமல் கஷ்டப்படும் போது, இந்திய சர்க்கார் 'வெள்ளிக் கணை ரயிலை ஊருருக்குக் காட்டிக்கொண்டு வருவதைப் பற்றி ஒரு குறிப்பு.

✲

தெரியுமா ?

காகிதம், பட்டு, டீ, துப்பாக்கி மருந்து, மடக்கும் குடை முதலியவைகளை முதல் முதலில் கண்டுபிடித்த நாடு சீனுதான்.

இங்கிலாந்தில் எந்தப் பாகமும் ரயில்வே பாதையிலிருந்து 18 மைலுக்கு அப்பால் விலகி இல்லை.



சென்னை சென்ட்ரலில்
வெள்ளிக் கணை

படம் : எஸ். கந்தசாமி, சேலம்

சிரிப்பு



படம்: ஜே. எம். கல்யாணம், சென்னை

மலர்ச்சி

சமீபத்தில் [illegible]ரயில் நடந்த
தென்கிழக்கு ஆசிய மாணவர் மகாநாட்டுக்கு வந்திருந்த
பர்மியப் பிரதிநிதிகள்



பட்ம்: எம். டி. வின்செண்ட், சென்னை

இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போல,



படம் : டி. செல்லையா, சென்னை

வட்டமாய்ப் புருக்கள் கூடி
இரை உண்ணும்.........

—பாரதிதாசன்



வீரர் நேருவும் வீராங்கனை விஜயலட்சுமியும்

விஜயலட்சுமி பண்டிட்

●

பேர்ள் பக்

விஜயலட்சுமி பண்டிட் அழகிய தோற்றமுடையவர். அலை யாடும் வெள்ளி மயிர், அறி வொளிரும் கருநிறக் கண்கள், மெழு மெழுப்பான சருமம், ஆரிய வம்சத்தின் சௌந்தரிய அம்சங்கள், கடைசல் போட்ட மாதிரியுள்ள கை கால்கள், தங்க நிற ஜோடுகள், உடல் கட்டுக்கு அழகு செய்யும் புடவை—இது தான் அவருடைய மேனி வடிவம். அவருடைய குரல் மிருது பாவத்துடன் ஒலிக்கும். அந்தக் குரலில் தெளிந்த ஆங்கில பாஷையைப் பேசும்போது, அவ ருடைய வாசாலகத் திறமையைக் கேட்டுக் கொண்டே இருக்கத் தோன்றும்.

இவர் தமக்குக் கிடைத்துள்ள அழகையும் அறிவையும் கஷ்டப் படுகிறவர்களுக்கு அன்பு காட் டும்போது எப்படித் தயாளத் துடன் பயன் படுத்துகிறாரோ, அப்படியே போராட்டத்தின் போது எதிரிகளிடம் அவைகளை ஆயுதங்களாகவும் பயன் படுத்து கிறார். அவர், தாம் வாழும் இந் திய நாடும், அந் நாட்டின் இந்த சகாப்தமும் உருப் பெற்ற தோற்றமாகக் காட்சியளிக்கிறார். சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன் நேரு குடும்பத்தில் பிறந்த அவர், அக் குடும்பத்தில் இந்தியப் பண்பாட்டிலும் ஆங்கி லப் பண்பாட்டிலும் வளர்ந்து வந்திருக்கிறார். விஜயலட்சுமியின் அன்னை தம் குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்க்கச் செவிலித் தாய்களை அமர்த்திக்கொண்டார். ஆனால், விஜயலட்சுமியோ தம் குழந்தைகளுக்குத் தாமே பால் கொடுத்து வளர்த்தார். இதைப் பார்த்த அவருடைய தாயார் திடுக்கிட்டுப்போய் விட்டார். இவருடைய தகப்பனார் பண்டித மோதிலால் நேருவுக்கு ஆங்கிலப் பழக்க வழக்கங்களில் மிகவும் ஈடுபாடு. தம் குழந்தைகளை அந் தப் பழக்க வழக்கங்களைக் கற் பித்தே வளர்த்து வந்தார். இதற் காக வெள்ளைக்காரத் தாதியை யும்கூட நியமித்திருந்தார். இவர்க ளுடைய வாசஸ்தலமாகிய 'ஆனந்தபவனம்' இரண்டு பகுதி களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று இந்தியப் பகுதி; மற் றொன்று ஆங்கிலப்பகுதி. மோதி லாலின் மனைவியார் இந்தியப் பகுதியிலேயே வாசம் செய்து வந்தார். அவருக்குப் பதினான்கு வயதில் கல்யாணம் நடந்தது.

இந்தியாவில் ஒரு நம்பிக்கை உண்டு. அதாவது ஒருவர் உட் கார்ந்துகொண்டோ அல்லது தூங்கிக்கொண்டோ இருக்கும் போது, நல்லபாம்பு அவருக்கு மேலாகப் படம் விரித்தாடினால் அது ஒரு நற்சகுனமாகக் கருதப் படுகிறது. ஸ்ரீமதி பண்டிட் என் னிடம் சொன்னதாவது:

"ஒரு நாள் நான் புல் தரை யில் படுத்துப் படித்துக்கொண்

அமெரிக்காவின் தலை சிறந்த ஒரு மாது சிரோன்மணி இந்தியாவின் தலை சிறந்த ஒரு மாது சிரோன்மணியைப் பாராட்டி எழுதியுள்ள இக் கட்டுரை பிரமாதமா யிருக்கிறது. கட்டுரை எழுதியவர் கதா சிரியையாதலால், ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டின் வாழ்க்கையையே ஒரு கதை யைப் போல இவ்வளவு ருசிகரமாகச் சித்தரித்துள்ளார். யுனைட்டெட் நேஷன்ஸ் வோர்ல்டில் வெளிவந்ததின் சாரம்.

டிருந்தேன். எங்கள் அப்பாவும் சற்றுதூரந்தள்ளி ஓர் ஈஸிச்சேரில் உட்கார்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர் என்னைப் பார்த்து, மிகவும் மெல்லிய குரலில், 'ஆடாமல் அசையாமல் அப்படியே இரு' என்று சொன்னார். என்ன ஆபத்தோ என்று நினைத்து நான் அப்படியே செய்தேன். ஒரு நிமிஷம் கழித்து என்பக்கமாக ஒரு பெரிய நல்ல பாம்பு புல்லுக்கு உள்ளாக நெளிந்து செல்லுவதைப் பார்த்தேன். பாம்பு எனக்கு மேலாகப் படம் எடுத்து ஆடிக்கொண்டிருந்ததாக எங்கள் அப்பா சொன்னார். உடனே நான் பயந்துபோனேன். பாம்பை எந்த விஷயத்துக்கும் ஓர் அடையாளமாகவோ சகுனமாகவோ நான் நம்பவில்லை; பாம்பை நான் வெறுக்கிறேன். ஆனால், எங்கள் தாயார் அன்று முதல் எனக்கு ஏதோ அரும்பெரும் பாக்கியம் கிட்டப் போவதாக உறுதியோடு நம்பி விட்டார்.''

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டின் வீடாகிய ஆனந்த பவனத்தின் ஆங்கிலப் பகுதியில் எல்லாம் ஆங்கில மயமாகத்தான் இருக்கும். வேலைக்காரர்கள் ஆங்கிலேயர்கள்; பட்லரும், கார் டிரைவரும்கூட ஆங்கிலேயர்கள்தான். நாலு வயதிலேயே நன்றாக ஆங்கிலம் பேசத் தொடங்கிவிட்டார் விஜயலட்சுமி. ஆங்கிலத்தைக் கற்கத் தொடங்கியதோ ஐந்தாவது வயதில்தான். ஒன்பது வயது ஆகுமட்டும் அவர் தாய்ப் பாஷையைப் படிக்காமல்தான் இருந்தார். "ஆங்கில பாணியில் நாங்கள் உச்சரிக்காவிட்டால் எங்கள் அப்பா அப்படியே இடிந்துபோய் விடுவார்'' என்று கூறுகிறார் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்.

ஸ்ரீமதி பண்டிட்டுக்கு அப்போது 'நான்' என்றும் அவர் தங்கைக்கு 'பெட்டி' என்றும் பெயர். இவர்கள் சிறு வயதில் ஆங்கில மாமிச உண்டிகளையும், மற்ற ஆங்கில பதார்த்த வகைகளையும் வாரத்தில் ஆறு நாள் சாப்பிடுவார்கள். அணிவதோ பாரிஸ் நகரத்து உடைகள்: ஏழாவது நாளில் இந்தியப் பகுதிக்குப் போய் இந்திய உடையணிந்து, இந்திய உணவுகளைச் சாப்பிட அவர்கள் அனுமதிக்கப் படுவார்கள்.

இவருடைய பன்னிரண்டாவது வயதில், இவருடைய சம்மதத்தை அறியாமலேயே இவருடைய கல்யாணத்துக்கு வைதீக இந்து முறைப்படி நிச்சயதாம்பூலம் செய்யப்பட்டது. எவ்வளவுதான் மேல் நாட்டு அனுஷ்டானங்களை மோதிலால் நேரு கைக்கொண்டிருந்தாலும், ஸ்ரீமதி பண்டிட்டைக் கேளாமல்தான் அவரை நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்குத் திருமணம் முடிக்க நிச்சயித்தார். ஆனால் ஸ்ரீமதி பண்டிட் இந்தத் திருமண ஏற்பாட்டை மறுத்துவிட்டார். அன்று முதல் இவர் எதிலும் சுதந்தரமாகவே இருந்து வருகிறார்.

இப்போதும் ஸ்ரீமதி பண்டிட் வீட்டில் ஆங்கிலப் பகுதியும் இந்தியப் பகுதியும் இருந்து வருகின்றன. பல பணக்கார இந்தியக் குடும்பங்களில் இருப்பதைப் போல் ஆங்கிலச் சமையலும் இந்தியச் சமையலும் இவர் வீட்டில் உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்ற விடுமுறை நாட்களிலும் இந்திய உணவையும், மற்ற நாட்களில் ஆங்கில உணவையும் சாப்பிடுகிறார்கள். இந்தப் பிரிவினை ஏற்பாடு அப்படி இயற்

கைக்கு முரண்பட்ட முறையிலும் இல்லை. இந்தியாவின் சரித்திரமே இப்படித்தான் இருக்கிறது.

ஸ்ரீமதி பண்டிட்டின் மூதாதையர்களில் சிலர், மத்திய ஐரோப்பாவிலிருந்து இந்தியாவின்மீது படையெடுத்தவர்களோடு சேர்ந்து வந்தவர்கள்தான். இவருடைய பாட்டி காஷ்மீரத்தைச் சேர்ந்தவர். அவர் வெள்ளை வெளேர் என்ற மேனியும், நீலநிறக் கண்களும், செம்பட்டை நிறமான கூந்தலும் உடையவர். இந்திய மக்கள் பல திறப்பட்ட இனங்களின் சேர்க்கையினரே. ஆனால் முக்கியமான இருபகுதியினர் அங்கே உண்டு. ஒரு பகுதியினர் மத்திய ஐரோப்பாவிலிருந்து வந்த வெண்ணிறமான ஆரியர்கள்; மற்றொரு பகுதியினர் கறுப்பாக இருக்கும் திராவிடர்கள். திராவிடர்கள் மிகமிக உயர்ந்த பண்பாடும் அறிவு ஞானமும் உள்ளவர்கள். இவர்கள்தான் இந்தியாவின் பூர்வ குடிகள். தற்கால இந்தியர்கள், வெள்ளையர் கறுப்பர் ஆகியோரின் கலப்பில் தோன்றியவர்களாவர். இதற்குத் திருஷ்டாந்தங்களாக அவர்களுடைய மூர்த்தண்யம் நிறைந்த கீழ் நாட்டுப் பண்பையும், மேலை நாட்டு குணபாவங்களையும் உடற்கட்டையும் கூறலாம்.

ஆனந்தபவனத்தில் ஆண்களும் பெண்களும் தனித்தனியாகவே ஒதுங்கி இருக்கிறார்கள். 'நான்' (ஸ்ரீமதி பண்டிட்) சிறுபிராயத்தில் தம் தாயாருடன் உறவினர்களைப் பார்க்கப் போகும்போது திரையிட்டு மூடிய வாகனங்களில்தான் போவாள். இவர் முப்பது வயது ஆகுமட்டும், காந்தியின் சுதந்தர இயக்கத்தில் அங்கத்தினராகு மட்டும், அலஹபாத் நகருக்குள் வெளியே வந்ததே கிடையாது. காந்தி இயக்கத்தில் சேர்ந்தபின் அந்நியத் துணி பகிஷ்காரம் செய்வதற்கு ஊருக்குள் வந்திருக்கிறார். இவர்கள் வீடு மற்ற இந்தியப் பணக்காரர்கள் வீடுகளைப் போல் ஐரோப்பியர்கள் வசிக்கும் பகுதியிலேயே இருக்கிறது.

காந்தி அரசியல் இயக்கம் தொடங்கியதும் மோதிலால் நேரு பெரும்பாலும் மாறி விட்டார். பிரிட்டிஷாரைப் பாராட்டுவதை அத்துடன் நிறுத்தி விட்டார். இந்தியர்கள் எவ்வளவுதான் படித்தாலும், முன்னேற்றமடைந்தாலும் வெள்ளையர்கள் சம அந்தஸ்துடன் இந்தியர்களை நடத்துவதில்லை என்பதை உணர்ந்த மோதிலால் நேரு இங்கிலாந்திடமிருந்து இந்தியா பரிபூரண சுதந்தரம் பெற்றாலொழிய விமோசனம் ஏற்படப் போவதில்லை என்று தீர்மானித்தார். அன்று முதல் அக்குடும்பம் காந்தி இயக்கத்தில் ஈடுபட்டுவிட்டது. குடும்பச் சொத்துக்களும் இயக்கத்துக்கு அர்ப்பணம் செய்யப்பட்டன. குடும்பத்தில் ஒவ்வொருவராகச் சுதந்திர இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். மோதிலாலின் மனைவிகூட சிறைவாசம் செய்ய நேர்ந்தது. ஆனாலும் இங்கிலாந்தின் மீது ஒரே கசப்புணர்ச்சியுடன் அவர்கள் இல்லை. இங்கிலாந்திடமும் அவர்களுக்குப் பிரியம் உண்டு.

பண்டிதமோதிலால் நேருவுடனும், அவருடைய காலத்துக்குப் பிறகும் ஜவாஹரும், ஸ்ரீமதிபண்டிட்டும் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுப் பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தனர். இதற்கிடையில் வாழ்க்கையில் சாதா

ரணமாக ஏற்படும் சில கஷ்டங்களும் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டுக்கு ஏற்படாமல் இல்லை. இப்படிப்பட்ட அழகுள்ள ஒரு சிறு பெண், காதல் விவகாரங்களில் அகப்படாமல் தப்புவதும் முடியாது. மோதிலால் நேருவுக்கு முஸ்லிம் இளைஞர் ஒருவர் தொழில் முறையில் உதவியாக வேலைபார்த்து வந்தார். இவருக்கும் விஜயலட்சுமி பண்டிட்டுக்கும் ஏற்பட்ட தொடர்பை குடும்பத்தினர் தலையிட்டுப் பிரித்து வைக்கும்படியான நிலையும் ஏற்பட்டது. கடைசியில் விஜயலட்சுமி தம் நாயகனை வரித்துக் கொண்டபோது தன் னிச்சையின்படியே சுதந்தரமாக வரித்துக் கொண்டார். இவருடைய ஜாதியினராகிய ரஞ்சித் எஸ். பண்டிட் என்ற இளைஞருக்கும் இவருக்கும் இவர்களுடைய மதச் சடங்கின்படியே விவாகம் நடந்தேறியது.

விவாகத்தின் போது விஜயலட்சுமிக்கு ஸ்ரீதனமாக 101 ஜோடி புடவைகளும், 101 ஜாக்கட்டுகளும், 101 ஜோடி செருப்புகளும், 101 ரவிக்கைகளும், 40 அல்லது 50 தாவாணிகளும் கொடுக்கப்பட்டன. அத்துடன் முத்துக்கள், வைரங்கள் பதித்த ஆபரணங்களும், வீட்டுச் சாமான்களும், சமையலறைக்கு வேண்டிய பண்டபாத்திரக்களும் ஏராளமாகக் கொடுத்தார்கள். எல்லாம் வெள்ளிப் பாத்திரங்களே. அப்போதெல்லாம் கல்யாணப் புடவையின் நிறம் சிவப்பாகவே இருந்துவந்தது. சிவப்பு என்பது முக்கியமான விஷயம். ஏனென்றால் கல்யாணத்துக்கென்று ஏற்பட்ட நிறம் அது. இதற்குப் பிறகு கூட விஜயலட்சுமி பண்டிட் முழுக்க முழுக்க இந்திய பாணியில் நடந்து கொள்ளாததைக் கண்ட இவருடைய தாயார், "இதோபார்! அடக்க ஒடுக்கமாக இரு. இந்தியப் பெண் மாதிரி நடந்து கொள்" என்று கண்டிப்பாராம். "இது அப்போது மிகவும் கஷ்டமாக இருக்கும்" என்கிறார் ஸ்ரீமதி பண்டிட்.

பழைய முறைப்படியே திருமணம் நடைபெற்றது. குடும்பத் தலைவர்களின் சம்மத மெல்லாம் பெற்று கல்யாண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கல்யாணத்தன்று ஏழு கன்னிப் பெண்கள் சேர்ந்து விஜயலட்சுமிக்குப்பால், வாசனைத் தைலங்கள் முதலியவற்றால் மஞ்சனமாட்டி, கூந்தலை வாரிவிட்டு, அவற்றில் பொன், வெள்ளி முதலியவற்றாலான மலர்கள் போன்ற ஜடை பில்லைகளைப் பூட்டி, மருதாணியால் கை கால் நகங்களுக்கும் உள்ளங் கைகளுக்கும் சிவப்பிட்டு அலங்கரித்தனர். அதரங்களுக்குத் தாம்பூலச் சிவப்பு.

எல்லா இந்துக் கல்யாணங்களைப்போல் இந்தக் கல்யாணமும் மணமகள் இல்லத்திலேயே நடைபெற்றது. அக்னி ஹோமம் வளர்த்து அதன் முன்னிலையில் கன்னிகாதானம் செய்துகொடுத்தார் மோதிலால் நேரு. தந்தையும் மகளும் ஒரு புறமும் மணமகன் எதிர்ப் புறமுமாக உட்கார்ந்துகொண்டனர். அக்னி சாட்சியாக இருவரும் வேதகால அனுஷ்டான முறைப்படி குடும்ப நலனுக்காகவும், சமூக, தேச நலன்களுக்காகவும் காதல் ஒருமித்து வாழ்ந்து ஒருவருக் கொருவர் பாதுகாப்பாக வாழ்க்கை நடத்துவதாக வாக்களித்துக் கொண்டனர். தீக் குழியைச் சுற்றி இருவரும்

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான் வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற் றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப் பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகா ணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

உங்களுக்கு சுளுக்கு பிடித்தால்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

சொற்ப
செலவில்
சீக்கிர
நிவாரணம்

மகத்தான
கியாதி வாய்ந்த
சிறிய டப்பி

விரைவில் நிச்சயமான நிவாரணம்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பர்மசியுடிகல்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி நெ. 67 மதராஸ்,

DJK20

மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி: "HARANTALKY"

181, கீழ வாசல்
மதுரை

போன் நெ. 219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள் :

மோஹன் ராம் கம்பெனியாரின் சேலைகள், வேஷ்டிகள்

✲

M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸிலிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ்
சின்டஸ் வகையரா

✲

சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவ நாகரிக டிசைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

✲

மொத்த & சில்லரை ஆர்டர்களுக்கு எழுதவும்

ஏழு அடி எடுத்து வைத்தனர். அப்புறம் மணமகனுர் ஏழு பச்சை வாதாங் கொட்டைகளை மணமகளுக்குக் கொடுக்க அவள் தன் முந்தானையை ஏந்தி அவைகளைப் பெற்றுக் கொண்டாள். வாதாங் கொட்டைகள் குழந்தைகளுக்கு அடையாள மாகக் கொடுக்கப் படுவனவாகும்.

இந்தக் கல்யாணத்தில் ஒரு சிறு தகராறு ஏற்பட்டது. அதாவது காந்தி, தாம் தான் கன்னிகா தானம் செய்து கொடுக்க வேண்டும் என்ருர். ஆனல் மோதிலால் நேரு இதற்கு இசையவில்லை.

அப்புறம் மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்த்து உட்கார்ந்து கொண்டனர். இருவருடைய முகத்தையும் சேர்த்து ஒரு துணியால் மூடினர். பிறகு, பெற்ருேர்களும் மற்ற உறவினர்களும் எழுந்து நிற்கவே, புரோகிதர்கள் இருவரையும் ஆசீர்வாதித்தார்கள். சீதைக்கு ராமன் போல, மணமகளுக்கு மணமகன் வாய்க்கப் பெற வேண்டும் என வாழ்த்தினர். சடங்குகள் யாவும் முடிந்ததும் கணவன் வீட்டுக்குத் தம்பதிகள் சென்றனர்.

மணமகளுக்கு விஜயலட்சமி யென்ற பெயரைச் சூட்டியது அவள் கணவன்தான். மணமகன் வீட்டில் முறைப்படி வரவேற்பு நடந்தது. மாமியார் ஒரே கலத்தில் இருந்து எடுத்து தம்பதிகள் இருவருக்கும் மாறி மாறி உணவளித்தார். அதாவது கணவனுடைய குடும்பத்தில் மணமகள். புனர் ஜன்மம் எய்தியிருக்கிருள் என்று அர்த்தம்.

ரஞ்சித் எஸ். பண்டிட் கல்வியிற் சிறந்த ஒரு பண்டிதர். மனைவியிடமும், தம் மூன்று புதல்விகளிடமும் அவருக்கு மட்டற்ற அன்பு. அன்பும் மரியாதையும் அவருடைய உடன் பிறப்புக்கள். தம் குடும்பத்தில் தம் இளம் மனைவியை சமத்துவமாகவும் சுதந்திரமாகவும் நடத்தினுர். தோட்டம் போடுவதிலும், விளையாட்டுக்களிலும் அவருக்குப் பிரியம் அதிகம். அல்மோராவில் ஒரு பெரிய பழத் தோட்டத்தை அவர் விலைக்கு வாங்கினுர். நைனி சிறையில் தம் மைத்துனர் ஜவாஹருடன் இருந்தபோது அங்கே தோட்டம் போடத் தொடங்கி விட்டார். சிறை வாழ்வில் அநேக ஆண்டுகளைக் கழித்துக் கடைசியில் அந்தச் சிறைவாழ்வினலேயே பலஹீனமடைந்தார். தம் குமாரிகளுக்கு இருபது வயது நிரம்பு முன்பே சிறையிலிருந்து வந்த இவர் காலமாய்விட்டார்.

விஜயலட்சுமி பண்டிட் வைதீகமோ, புராதன நம்பிக்கைகளோ உடையவர் அல்லர். பிராமணீயத்தின் வளர்ச்சியால் தான் இந்தியாவில் பெண்கள் அடிமைப்பட நேர்ந்தது என்று கண்டிக்கிருர் ஸ்ரீமதி பண்டிட்.

“பிராமணீயம் வளர்ந்தது; நாம் சுதந்தரத்தையும் இழந்து விட்டோம். புரோகிதர்களுக்கு அதிகாரம் கிடைக்கவே அவர்கள் நமக்கு விலங்கிட்டு விட்டனர். சாதிப்பாகுபாடுகள் ஏற்படுத்திப் பெண்களுக்குப் பால்ய விவாகத்தையும் வற்புறுத்தி, பெண்களை வீட்டுக்குள் அடைத்துப் போட்டுவிட்டார்கள். பெண்கள் சின்னஞ் சிறு வயதில் தமக்கு ஏற்ற கணவன்மார்களை வரித்துக் கொள்ளுவது சிரமம்; ஆகவே பெற்ருேர்கள் இந்தக் காரியத்தைச் செய்துவந்தார்கள். அதனல் தன்னிஷ்டம் போலக் கல்யாணம்

செய்துகொள்ளும் உரிமையையும் பெண் இழந்து விட்டாள். புராணக் கதைகளைப் பார்த்தால், இந்தியப் பெண்கள் இருபது வயது ஆனபிறகே கல்யாணம் செய்து கொண்டதாகத் தெரிகிறது. பெண்கள் தம் இச்சைப்படி தமக்குப் பிடித்தவர்களைக் கல்யாணம் செய்து கொண்டதுடன், விதவைகள் கூடக் கல்யாணம் செய்து கொண்டதாகவும் அக் கதைகளிலிருந்து அறிகிறோம்'' என்று கூறுகிறார் ஸ்ரீமதி பண்டிட்.

நவ நாகரிக வாழ்க்கையை நடத்தி வந்தாலும் இந்தக் குடும்பத்தினர் தம் கைகளாலேயே உணவருந்துகின்றனர். வலது கையை நன்றாகக் கழுவிச் சாப்பிடுவதைவிட வேறு சுத்தமான வழி ஒன்று உண்டா? ஆனால் ஸ்ரீமதி சியாங்கைஷேக், ஸ்ரீமதி பண்டிதர் தம் விரல்களால் உணவருந்துவதைப் பார்த்துவிட்டு, "நீங்கள் விரல்களினாலா சாப்பாடை எடுத்துச் சாப்பிடுகிறீர்கள்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாராம். "விரல்களைவிட, உங்களைப்போல மரக்குச்சிகளால் எடுத்துச் சாப்பிடுவது அவ்வளவு சுத்தமாகவா இருக்கிறது?'' என்று கேட்டாராம் ஸ்ரீமதி பண்டிட்.

ஸ்ரீமதி பண்டிட் ஓர் அரசியல்வாதி. ஜாதி மத வேற்றுமையை இவரிடம் காணமுடியாது. இவர் குடும்பத்திலேயே நேருவுக்குப் பணிவிடை செய்யும் ஹரிஜன் ஒருவர் உண்டு. சமையல்காரர்களும் தீண்டாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட வகுப்பினரே. ஸ்ரீமதி பண்டிட் சொல்லுவதாவது:

"உண்மையிலேயே, என் குழந்தைப் பிராயத்தில் இந்தியாவில் தீண்டாதவர்கள் என்பவர்கள் வெள்ளையர்களாகத்தான் இருந்தார்கள். முழு மனதோடு என் பாட்டி ஒரு வெள்ளைக்கார ஆணுடனோ, ஒரு வெள்ளைக்காரப் பெண்ணுடனோ கை குலுக்க மாட்டாள். முஸ்லிம் நண்பர்களும் இப்படி வைதீகம் உள்ளவர்கள் தான். ஆனால் இப்போது எல்லாம் மாறிவிட்டது. சமீபத்தில் ஹைதராபாத் சர்வ கலாசாலையில் பட்டம் பெற்றுவந்த இரண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள் பிராமண ஆடவர்களைக் கல்யாணம் செய்து கொண்டார்கள். இதை இந்துக்களும் அங்கீகரித்திருக்கிறார்கள்.''

சுதந்தரப் போராட்டத்தில் ஸ்ரீமதி பண்டிட் பல முறை சிறை சென்றிருக்கிறார். அப்போதெல்லாம் தம் குழந்தைகளை உறவினர்களின் பராமரிப்பிலும் நண்பர்களின் பராமரிப்பிலும்விட்டுச் செல்ல நேர்ந்தது. ஐக்கிய மாகாணத்தின் கல்வி மந்திரியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார் ஸ்ரீமதி பண்டிட். இந்தியாவில் முதல் முதலாக இவ்வளவு பெரிய பதவியை வகித்தவர் இவர்தான்.

அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து பிரசங்கங்கள் செய்து வந்தபோது இவருடைய பெயர் மேல் நாட்டில் பிரபல்யம் அடைந்தது. 1945-ல் சான் பிரான்ஸிஸ்கோ மகா நாட்டுக் குத்தனிப்பட்ட முறையிலேயே போய் இந்தியாவின் சுதந்தர நாதத்தை முழக்கினார். மகா நாட்டின் காரியதரிசிக்கு இவர் 1945-ம் வருஷம் மே 2-ம் தேதியன்று கொடுத்த யாதாஸ்தில் பின் வருமாறு கூறியிருந்தார்:

"நான் என் நாட்டின் சார்பாகப் பேசுகிறேன். ஏனென்

ரல், பிரிட்டிஷாரின் அடக்கு முறையால் என் நாட்டின் குரல் வெளிக் கிளம்பாமல் அடக்கி ஒடுக்கப்பட்டது. ஆனாலும் இந்தியாவைப்போல, அந்நிய ராணுவ வெறியர்களின் காலடியில் மிதிபட்டு நசுங்கிக் கிடக்கும் நாடுகளின் சார்பிலும் நான் பேசுகிறேன்.........ஆசியாவில் அடிமைப்படுத்தப்பட்ட அறுபது கோடி மக்களுக்கும் நீதி வழங்கினலொழிய உலகம் உண்மையான சமாதானத்தை அடையப் போவதில்லை.''

1946-ல் தேசிய சர்க்கார் ஏற்படுத்தப்பட்டது. இவருடைய சகோதரர் அதன் தலைமைப் பதவியை ஏற்றிருக்கிருர். நியூயார்க்கில் கூடிய ஐக்கிய நாடுகள் கூட்டத்துக்கு வந்த இந்தியத் தூது கோஷ்டிக்குத் தலைமை தாங்கினர் ஸ்ரீமதி பண்டிட். அப்போது உத்தியோக ரீதியில் அடிமை நாட்டு மக்களின் சுதந்தரத்தை வற்புறுத்திப் பேசினர். தென்னுப்பிரிக்க இந்தியர்களை வெள்ளை அரசாங்கம் கேவலமாக நடத்துவதைக் கண்டித்து ஆவேசமாகப் பேசினர். பிலிப்பைன் பிரதிநிதிகளும் ருஷ்யப் பிரதிநிதிகளும் இவருக்கு ஆதரவளித்தனர்; துரதிஷ்டவசமாகச் சீனவும், அமெரிக்காவும் இவருக்கு எதிர்க்கட்சியில் நின்றன.

ஸ்ரீமதி பண்டிட் நவ இந்தியாவின் உருவம். மக்களின் சுதந்திரத்தை வற்புறுத்திப் பேசுவதில் அவர் கொஞ்சமும் பயப்படுவதில்லை. மக்களின் சுகாதாரம், கல்வி முதலியவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று அவர் கூறுகிருர். இவை உலகம் முழுவதுக்குமே உள்ள பொறுப்புக்கள் என்பதை எல்லோரும் உணரப் போகிருர்கள். ஆகவே, இவருடைய வாழ்க்கை நம் தலைமுறையில் இன்னும் சீரும் சிறப்பும் அடையப் போகிறது.

✲

தேவ இரக்கம் ஸ்டோர்

அமெரிக்காவில் வாலர் என்ற இடத்தில் ஓர் அதிசயமான கடை இருக்கிறது. அந்தக் கடைக்குத் 'தேவ இரக்கம் ஸ்டோர்' என்று பெயர். சொந்தக்காரரின் பெயர் ஏ. டி. பர்விஸ். அந்தக் கடையில் அவரைத் தவிர்த்து வேறு குமஸ்தாக்கள்கூடக் கிடையாது. கடைக்குச் சாமான் வாங்க வருகிறவர்கள் தங்களுக்குப் பிரியப்பட்ட சாமானை எடுத்து, காகிதத்தில் பொட்டலம் கட்டிக்கொண்டு, அந்தச் சாமானில் போட் டிருக்கும் விலையைப் பார்த்துவிட்டுப் பணத்தைக் கொடுத்ததும், அதை வாங்கிக் கொண்டு, கடைக்காரர் எவ்வளவு பாக்கி வேண்டும் என்று கேட்பாராம். வந்தவர் சொல்லும் தொகையை உடனே கடைக்காரர் கொடுத்துவிடுவார். இந்தக் கடை 23 வருஷங்களாக நடந்து வருகிறது. மிகவும் ஏழைகள் வசிக்கும் இடத்தில்தான் கடை யிருக்கிறது. ஒரு நாள் கடைக்காரருடைய கனவில் கடவுள் பிரத்தியக்ஷமாகி, வாலர் என்ற ஊருக்கு போய் கடை வைக்கும்படியாகக் கட்டளை யிட்டதால், அப்படியே தாம் செய்ததாகக் கடைக்காரர் கூறுகிருர். உலகத்திலேயே இந்தத் 'தேவ இரக்கம் ஸ்டோர்' ஒன்றில்தான், வாங்கும் ஜனங்கள் சாமான்களின் விலையையும், கடைக்காரரின் லாபத்தையும் நிர்ணயிக்கிருர்கள்.

—டபிள்யூ. ஈ. கோல்டன்.

காதலிக்கு—

கு. அழகிரிசாமி

வந்து விழுந்தேன் இந்த வையத்துப் பாழ்கிணற்றில்!
உந்தி எனைத் தள்ளியவன் ஒருவனிங்கு உண்டென்றால்,
சந்து சதைவேறாக்கிச் சாறாய்ப் பிழிவதற்கும்
சிந்தை துணிந்தேனடி! செய்ந்நன்றி இன்றிதுதான்!

ஒன்றி, உடல் ஒட்டி, ஊன்விட் டுயிர் வாங்கி
அன்றன்று சேர்த்த அரைத்துளியாம் ரத்தமதை
நன்றென்றுறிஞ்சுகின்ற நாலாயிரம் அட்டை;
கொன்றபழி ஏற்காமல் கொல்லாமல் கொல்லுகின்ற

ஊறல்தரும் பேன் பூச்சி; உதறிவிட்டுத் தாவிவிட்டால்
கோரப்பல் நஞ்சுகக்கிக் கொத்தவரும் பாம்பினங்கள்—
ஆரையடி நோவோம் நாம்? அவனிதனைப் பாழ்கிணறாய்ச்
சீரைக் குலைத்தவரோ செகத்திலுள்ள கோடிமக்கள்!

வையம் புலாலாகி மானிடரும் நாயானால்
உய்யும் வழி கற்பிக்கும் உபதேசம் யார்கேட்பார்?
மெய்யை, அறத்தை, விடியும்மட்டும் போதித்தோம்;
ஐயோ! இதைக் கேட்க அப்பாவி யாருமில்லை!

புத்தன், மகா வீரன், போதனைசெய் ஏசு, அல்லா—
அத்தனை மாகான்கள் வந்து அன்று சொன்ன சொற்களுக்குப்
பத்துவிதத் தாத்பரியம் பண்ணப் படித்தவையம்
செத்தவனின் வாய்க்கரிசி திருடப்படித்ததடி!

அன்பென்றும், நீதி என்றும், அனைத்துயிரும் ஏகம் என்றும்
வம்புபண்ணி வாழ்ந்த வளமையெல்லாம் போதுமடி!
செம்பைப் பிடுங்கி, திருவோட்டைத் தான்பிடுங்கி
கும்பிக்குத் தீவைக்கும் கொடுமையிலோ வேதாந்தம்!

வாழ்வின் விரக்தியில்லை; மனச் சோர்வின் பேத்தல் இல்லை;
ஊழ்வினையும் இல்லை; இது உலகிழைத்த துன்பமடி!
பாழ்பட்டுப் போனார் முன் பண்டைநாள் நம்பெரியோர்!
ஏழ்மை நரகதனில் ஏமாறிப் போய்வீழ்ந்தார்!

முன்னையவர் ஏமாந்து மூட்டிவிட்ட நெஞ்சுத்தீ
என்னைப் பொசுக்குமுன்பு, ஈன்றெடுத்ததால் எந்தன்
அன்னை அடிவயிற்றில் அவியாத தீவைத்தாள்.
என்னை, எனைப்பெற்ற இனத்தை, உலகையெலாம்,

மூண்ட பழங்காலத்தி முடிவுகட்டப் பற்றுதற்கு
வேண்டியநாள் வந்துவிட வெகுநாட்கள் இல்லையடி.
பூண்டோடு வஞ்சனையைப் பொசுக்காத மானிடங்கள்
மாண்டு மடிவதல்லால் மற்றேதும் மார்க்கமுண்டோ ?

* * *

கண்ணே! பசிவாட்ட, கடும்பாலை வாழ்வெரிக்க,
புண்ணில் நெருப்பெரிய, போகா உயிர்தாங்கி
மண்தின்று வாழும் வாழ்க்கையினேன் சொர்ப்பனத்தில்
புண்தடவ வந்து நிற்கும் பொன்னுருப் புகலிடமே!

கற்றைக்குழலாய்! நாம் காதல் ஒருமித்து
பற்றுகொடி போலொன்ருய்ப் பற்றிப் பிணைந்தன்று
குற்ருலச்சாரல் என்றும் குமரிமுனைத்தென்றல் என்றும்,
வற்ருப் பொருநை நதி மாகரையின் சோலை என்றும்,

சுற்றித் திரிந்தலைந்து சுகபோகத் தேட்டத்தில்
வெற்றிடத்தை, பாழ்வெளியை, விஞ்சை நகராக்கிவந்தோம்;
நெற்றிப்பிறை உமிழும் நிலவழகை மாந்தியங்கு
மற்ற உலகையெலாம் மறந்துன்னைக் கொஞ்சி நின்றேன்.

நினைவில் நிற்கும் இக்காதல் நினைவெல்லாம் இந்நாளில்,
சுனை நடுவில் நீர்வேட்கை; சோற்றுக் கடைத்தெருவில்
தினையளவுச் சாதமின்றிச் செத்துவிழும் நிஷ்டூரம்
எனப்பலவாய் மாறிவிட்ட இந்நாளில், எல்லாமும்

ஆசையற்றுப் போயினவே! அநியாயப் பாழுலகில்
பேசுகின்ற பேச்சையெல்லாம் வேசிவலை யாக்கிவிட்ட
காசில் மனம் பதிந்த காரியத்தார் சூழ் நிலையில்
பாசமிழந் தென்னுயிரை, பாசக் கயிறதனுல்

மாய்த்து மனத்துயரை மாற்ற எண்ணும்போதில் வந்து
காத்து, கயிறுதனைக் கையினின்றும் உன் நினைவு
ஏய்த்துப் பிடுங்கிப்பின் என்கழுத்தில் மற்றதையே
தாய்த்துக்கயிருய், தாலியாய்ப் போட்டேகும்!

முன்பின் முரணுய் முடிந்திட்ட இவ்வுலகில்
அன்பின்றித் துன்பம்! உன் அன்பிருந்தும்துன்பமடி!
என்செய்வேன், நாளெல்லாம் ஏற்றபிச்சைச் சோற்றினிலே
மண்ணள்ளிப்போட்டு மறைந்துநின்று கொன்றுவந்தால்?

என்னைநான் கொன்று இனிமாய்ந்து சாவேனே?
தன்னைவந்து கொல்லுகின்ருர் தமைமாய்க்க மாட்டாதான்
என்னப் பெருங்கோழை என்று உயிர்வாழ்வேனே?
இன்னும் சுதிகெட்டுத்தான் இந்த உயிர் வாழ்ந்திடுமோ?

*

வஸந்தம் வந்தது

சுரபி

அன்று வழக்கத்துக்கு முன்னதாகவே வசநதகுமாரியின் நித்திரை தெளிந்துவிட்டது. பூந்தோட்டத்தில் புகுந்து மொட்டுக்களை விழிக்கவைத்துக்கொண்டு வந்த இளந்தென்றல் அவள் கண் மலர்களை மலர வைத்துவிட்டுச் சென்றது; அந்தத் தென்றலில் மிதந்து வந்த குயிலோசை அவளைத் தட்டி எழுப்பிவிட்டுச் சென்றது.

வசந்தகுமாரி கண்திறந்து பார்த்தபோது கதிரவன் தங்கத் தூரிகொண்டு வானமெங்கும் வண்ண வண்ணமான சித்திரங்களை அழித்தழித்து எழுதிக்கொண்டிருந்தான். கண்ணுக்கெட்டிய தூரத்துக்குக் கட்டடங்களும் மரங்களும் ஸ்வர்ணக் கடலிலே மூழ்கி யெழுந்தவைபோல் காட்சியளித்து நின்றன. ஜீவராசிகளுக்கெல்லாம் புத்துயிரூட்டும் புதுமை அலைகள் எங்கும் எழுந்து மோதிக்கொண்டிருந்தன.

வசந்த குமாரியின் உள்ளத்திலே என்று மில்லாததொரு இன்ப உணர்ச்சி பொங்கிப் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. தோட்டத்தில் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஆண் குருவி யொன்று தேன்மயமான தொரு பாஷையிலே காதற்கீத மெழுப்புவதையும், மற்றொரு மூலையிலிருக்கும் பேடையின் குரலிலிருந்து அமுதகீதமாக அது பிரதிபலிப்பதையும் கேட்டபோது அவளுக்கு உடலெங்கும் அமுத தாரைகள் பாய்ந்தோடுவதுபோ லிருந்தது.

சொர்க்கலோக மென்பது ஒருகால் நிரந்தரமாக இப்படியே இருக்குமோ என்று அவளுக்குத் தோன்றிற்று. அடுத்த நிமிஷம் சுரீரென்று அம்பு பாய்வதுபோல் ஒரு எண்ணம் அவள் மனத்திலே பாய்ந்தது; தடாரென்று சொர்க்க லோகத்திலிருந்து வீழ்ந்ததுபோல் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது; பெரியதொரு குறை அவள் உள்ளத்திலே ஏக்கக் கனலை எழுப்பிவிட்டது.

ஆமாம், அவளுக் கென்ன தான் குறை இருக்கக்கூடும்? அவளோ கலையுலகத்தின் முடிசூடா ராணி; சினிமா வானிலே ஒப்புயர்வின்றி ஜொலிக்கும் உன்னத நக்ஷத்திரம். ஐந்தாறு வருஷத்திலே அவள் சம்பாதித்துள்ள பணம் ஒரு இருபது தலைமுறைக்குக் காணும். மேற்கொண்டு சம்பாதிப்பதற்கு இன்னும் குறைந்தது பத்து வருஷங்களாவது இருக்கின்றன. அவள் கேட்ட தொகையைக் கொடுத்துக் கையெழுத்துக்காகக் கெஞ்சுவதற்கு எத்தனையோ பட முதலாளிகள் காத்துக்கொண் டிருக்கிறார்கள். கடல் போலே 'வஸந்த விஹார்' இருக்கிறது. அவள் உதடசைந்தால் ஊரே அசையும். அவள் மனத்திலே நினைப்பதை நிறைவேற்ற ஒரு பரிவாரமே காத்து நிற்கிறது. ஆனால் இவ்வளவும் இருந்து என்ன பயன்? இந்த சுகபோகங்களையெல்லாம் பகிர்ந்துகொள்ள ஒரு துணை இல்லையே?

ஆட்களை ஏவி ஏவி அலுத்துப் போன அவளுக்குத் தன்னை ஏவ

> வஸந்த குமாரி யானாலும் வாழ்வின வஸந்தத்தை எண்ணி ஏங்கத்தான் வேண்டியிருக்கிறது. அப்படி ஏங்க வைக்கும் அந்த வஸந்தம் அத்தனை நாளாய் எங்கே ஒளிந்துகொண்டு கிடக்கிறது?

ஒருவரில்லையே என்ற ஏக்கமேற்பட்டது. தான் சொல்லுவதற்கெல்லாம் ததாஸ்து போட்டுத் தலையாட்டும் பிரகிருதிகளைக் கண்டு கண்டு சலிப்படைந்து கிடந்த அவளுக்கு, தன் வார்த்தைக்கு எதிர்வார்த்தை சொல்லக் கூடிய ஒரு ஆள் இல்லையே என்ற தாபம் ஏற்பட்டது. எந்த நேரத்திலும் வீட்டின் எந்த பாகத்திலும் தன் குரலையே கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன அவள் காதுகள் புதிதாய் ஒரு குரலைக் கேட்டனுபவிக்கத் துடித்தன. சுருங்கச் சொன்னல், பிரமாண்டமான காமிராக்கள் கண் கொட்டாமல் பார்த்து நிற்க, ராக்ஷஸ விளக்குகள் வாய்திறந்து சிரித்து நிற்க, வாயிலிருந்துவரும் ஒவ்வொரு சப்தத்தையும் அப்படியே பிடித்துக் கொண்டு விடுவோம் என்று ஒலிக் கருவிகள் மிரட்டி நிற்க, நூற்றுக் கணக்கான ஜீவன்கள் வைத்த கண் வாங்காமல் பிரமித்து நிற்க, தான் தினந்தினம் நடத்தும் நாடகத்தை உண்மையில் — வாழ்க்கையில — அனுபவிக்க வேண்டுமென்ற ஆவல் அவள் உள்ளத்திலே நாளுக்கு நாள்வளர்ந்துகொண்டேவந்தது.

வஸந்தகுமாரி தலையை ஒரு புறம் திருப்பிப் பார்த்தாள். விசாலமான அந்த மஞ்சத்தில் முக்கால் பாகம் யாருக்காகவோ காத்துக்கொண் டிருப்பதுபோல் காலியாய்க் கிடந்தது. தினந்தினம் பதினயிரக் கணக்கானவர்கள் மனத்திலே பொருமையை எழுப்பிவந்த அந்த உருவத்தின் இருதயத்திலிருந்து ஏக்கத்தைச் சுமந்துகொண்டு ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. மறுகணம் தன் மனக்குறை உண்மையானது தானு என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டது.

தன் கடைக்கண் நோக்கத்துக்காக எத்தனைப் பேர் காத்துக் கொண்டு கிடக்கிருர்கள்? புகழேணியின் உச்சிப்படியிலே நிற்கும் நடிகர்களென்ன! அவர்களையே ஆட்டிப்படைக்கும் டைரெக்டர்களென்ன! அவ்வளவு பேருக்கும் படியளக்கும் லக்ஷாதிப் பிரபுக்களான பட முதலாளிகளென்ன! ஓவியர்களென்ன! இலக்கிய கர்த்தாக்களென்ன! சங்கீத விற்பன்னர்களென்ன! விஞ்ஞானத் துறையிலே மூழ்கி யெழுந்த நிபுணர்களென்ன! இத்தனைப் பேர்களிலே யார்மீது அவள் மனம் வைத்தால் பலிக்காது?

ஆனல் அந்த மனம் அவ்வளவு பேரில் ஒருவரையுமல்லவா நாடமாட்டேனென்கிறது? சரியாய்ச் சொன்னல், பொம்மைக் கடையிலே நின்று திகைக்கும் குழந்தையைப்போல் அவள் திகைத்துக்கிடந்தாள். பொம்மை வேண்டுமென்ற ஆவல் என்னவோ பிடித்துத் தள்ளுகிறது. ஆனல், 'இந்தாம்மா, எதுவேணும் சொல்லு' என்று கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்ல நாவெழவில்லை. என்னத்தைப் பொறுக்கி எடுப்பதென்றே தோன்றவில்லையே? உண்மையில், உள்ளது ஒன்றுமே பிடிக்கவில்லை யென்றல்லவா நினைக்க வேண்டியிருக்கிறது.

"இது வேணுமாம்மா? அதோ அந்தப் பொம்மையை எடுத்துக் கொள்றையாம்மா?" என்று கேட்க அந்தக் குழந்தைக்காவது ஒரு அப்பா இருக்கிருர். தனக்கு? ஐயோ, பேசாமல் தானகப் பார்த்துத் தன்னிஷ்டம்போல் ஒருவனைக் கொண்டுவந்து கட்டி வைக்க ஒரு தாயோ தகப்பனே இருந்தால் எவ்வளவு நன்ருயிருக்

கும்! காதல் சுதந்தரம், கல்யாண சுதந்தரம் என்றெல்லாம் என்னவோ கதைக்கிறார்கள். இதிலெல்லாம் என்ன கிடக்கிறது? நமக்குப் பதிலாக யோசித்துத் தீர்மானம் செய்ய ஒரு பொறுப்பான ஆசாமி இருந்தால் எவ்வளவு சுலபமாகப் போய்விடும்? எவ்வளவு பாரங் கழிந்து போய்விடும்? ஆனால் தன் பாரத்தைத் தாங்கிக் கொள்ள—பகிர்ந்து கொள்ளத் தான்—யாரிருக்கிறார்கள்? அப்பாவா? அப்படி ஒருவர் இருந்ததாகவே தனக்கு ஞாபகமில்லை. அம்மாவா? எலும்புக் கூட்டுக்குக் கந்தை சுற்றியதுபோல், மங்கலானதொரு உருவம் மூளையில் எங்கோ ஒரு மூலையில் பதிந்து கிடக்கிறது. ஆனால் அந்த உருவத்தின் உறவு எவ்வளவு நாளிருந்தது? உண்மையில், வலையில் வந்து விழுந்தவர்களையெல்லாம் உறிஞ்சிவிட்டு வீசி எறியும் யாரோ ஒரு கிராதகியையல்லவா தான் புத்தி தெரிந்த நாளாய் அம்மாவென்று அழைத்துக்கொண்டிருந்தாள். விதி எப்படித் தன்னை அங்கே கொண்டுபோய்த் தள்ளியது என்பதுகூட ஞாபகமில்லை. எப்படியிருந்தாலென்ன? அங்கிருந்து மீண்டாயிற்றல்லவா? அடேயப்பா அங்கிருந்து தப்பி வந்ததை நினைத்துப் பார்த்தாலே ஏதோ ஸ்டன்ட் படம் பார்ப்பதுபோலிருக்கிறது. தப்பிவந்து, எப்படி எப்படியோ கஷ்டப்பட்டு, இவ்வளவு தூரத்துக்கு ஆளாகி, பேரும் புகழும் ஐஸ்வரியமும் சம்பாதித்து என்ன பயன்? எவ்வளவு பெரிதாயிருந்தாலென்ன—மொட்டு மொட்டுத்தானே? மலர்ந்தால் அன்றோ மணக்கும் வாழ்வு? உம், இந்த அரும்பை மலர வைக்கும் வண்டு எங்கிருந்து வரப்போகிறதோ. இந்த வாழ்விலே வஸந்தருது வரத்தான் போகிறதோ, அல்லது...''

கதிரவன் ஜன்னல் வழியே தன் ஒளிக்கரங்களை நீட்டினான். சுரீரென்று வெய்யில் பட்டு எழுந்து உட்கார்ந்தது அந்த வசந்த மலர். அப்புறம் வாலாயமான அலுவல்கள் நடந்தேறின.

''அம்மா, வென்னீர் தயாராயிருக்கு.''

''இதோ வந்துவிட்டேன்.''

''அம்மா, காப்பி கொண்டுவந்து வச்சிருக்கிறேன்.''

''சரி, அப்படி வைத்துவிட்டுப் போ.''

''இதோ, இன்னைக்கு வந்த தபால், அம்மா.''

''எல்லாவற்றையும் பிரித்து வை.''

''அம்மா, இன்னைக்கு யாராவது சாப்பாட்டுக்கு வர்றாங்களா?''

''ஊஹூம்.''

''ஏம்மா, இன்னைக்கு எங்கேயாவது போறீங்களா?''

''இப்போதைக்கு எங்கும் போகப் போகிறதில்லை.''

''யாரோ தேடிக்கிட்டு வந்திருக்காங்கம்மா.''

''சரி, வரச்சொல்லு.''

''குட்மார்னிங் மிஸ் வசந்த்!''

''வாருங்கோ, உட்காருங்கோ. ஏது இவ்வளவு காலையிலே...?''

''ஒன்றுமில்லை. சும்மா, பார்த்துவிட்டுப் போகலாமென்றுதான் வந்தேன்.''

''இந்தப் புஷ்பச் செண்டு ரொம்ப அழகாயிருக்கிறதே!''

''அழகாய்த்தானிருக்கிறது; ஆனாலும் தங்கள் வதனத்துக் கீடாகுமா?''

அருமையான பற்கள் !

உங்கள் பற்கள் வருஷக்கணக்காக வசீகரத்தன்மையுடன் இருக்குமா?

பற்கள் விலை மதிக்கமுடியாத நகைகளைப் போன்றவை. அவை உங்கள் புன்முறுவலை அழகுபடுத்தவோ, கெடுக்கவோ செய்யலாம். ஈறு உபாதிகள் பற்களுக்கு திங்கு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். தவறாமல் எஸ். ஆர்.-டூத் பேஸ்டி★னால் சுத்தம் செய்தால் பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியமான ஈறுகளில் உறுதியாகவும் விளங்கும்.

★பல் வைத்தியர்களால் ஈறு வியாதிகளுக்கு கையாளப்படும் ஸோடியம் ரிஸினேலியேட் என்னும் விசேஷ மருந்து சேர்ந்தது.

GSR. 25-50 TM

D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

டிடிடியின்

பூச்சிகளைத் தவிர
மற்ற யாவற்றிற்கும் தீங்கற்ற
தன்மை

நியோஸிடில் உள்ளது

10% டி. டி. டி பௌடர்

இது கெய்கி தயாரிப்பு

DJK 6019 TAM.

★ உலகில் மிகப் பிரசித்திபெற்ற DDT சரக்கு

★ இந்தியாவுக்கென விசேஷத் தயாரிப்பு

★ ஒருதரம்பட்டால் பூச்சிகள் யாவும் செத்துவிடும்

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ்
அடினன் அண்ட் கோ., லிட்.,
மௌண்ட் ரோட், மதராஸ்

DDT Geigy DDT

மைசூர் சமஸ்தானம், கூர்க் ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் முகமத் ரஹீம் கலீல்,
99-B, ஹைஸ்மான்கான் ரோட்,
பெங்களூர் ஸிடி.

கெய்கி இன்லெக்டிஸைட்ஸ் லிட்., நெவில் ஹவுஸ் நிக்கல் ரோட், பெலார்ட் எஸ்டேட், பம்பாய்

"ஹஹ்ஹஹ்ஹ! நடிகர்களுக்குச் சொல்லிக் கொடுத்து சொல்லிக் கொடுத்து நீங்களே நடிகராய் விட்டீர்கள் என்று தோன்றுகிறது. உங்களேயுமறியாமல் வார்த்தைகள் உதிர்கின்றனவே?"

"என்ன மிஸ் வஸந்த், இன்னமும் என்னை டைரெக்டர் என்ற முறையில்தானே வைத்துப் பேசுகிறீர்கள்? நானும் எப்படி எப்படியோ என் மனத்தைத் திறந்து காட்ட முயன்று வந்திருக்கிறேன். அப்படியும் நீங்கள் என் மனதை உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லையே?"

"தெரியாமலென்ன, மிஸ்டர் ராம்சேகர்? ஒருவர் மனதை ஒருவர் அறிந்துகொள்ள ஒன்றே கால் வருஷம் போதாதா? இதற்குள் என் மனதையும் தாங்கள் அறிந்து கொண்டுதா னிருக்க வேண்டும்........."

"அம்மா, மொதலாளி வந்திருக்கிருர்."

"வரச் சொல்லு."

"நான் போய்வரட்டுமா, மிஸ் வஸந்த்? இன்றைய ஷூட்டிங்குக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்."

"செய்யுங்கோ. இன்றைக்கு நான் வரவில்லை."

"அப்படியா?"

"ஆமாம்......வாருங்கோ ஸார். ராம்சேகர்தான் அதிகாலையில் வந்தாரென்று பார்த்தேன். நீங்களுமல்லவா......"

"ஹஹ்ஹஹ்ஹ! இது என்ன பிரமாதம்? நாலு மணிக்கு வேணுமானுலும் எழுந்திரிச்சிடுவேனே? வேலையிருந்தால் செய்துதானே ஆகணும்."

"என்ன, இன்றைக்கு ஏதாவது முக்கியமான ஷூட்டிங்கோ!"

"அது என்ன, ஷூட்டிங்கோ கீட்டிங்கோ; அதை யார் கண்டது? அது கெடக்கட்டும், நீங்க இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி டீஇ இழுத்துக்கிட்டே போகப் போறீங்க?"

"படந்தானே? சீக்கிரமாக முடித்துவிடுகிறது."

"படங் கெடக்கிறது படம். ஒங்க இதெச் சொல்றேன்."

"எதை? புது காண்ட்ராக்டையா?"

"ஊம். அதெல்லா மில்லேங்றேன். ஒங்க கல்யாண விஷயத்தெத்தான் சொல்றேன்."

"ஓ, அதுவா, அதற்கென்ன இப்போது; அவசரம்? நடக்கிறபோது நடக்கிறது."

"அப்படியா, அதது காலா காலத்திலே......ஹஹ்ஹஹ்ஹ"

"உங்கள் அக்கறைக்காக என் நன்றி. ஆனுல்...உங்கள் காண்ட்ராக்டுக்கும் அதற்கும் ஒன்றும் சம்பந்தமில்லைபோலிருக்கிறதே."

"பார்த்திகளா? நான் சொல்றது உங்களுக்குப் புரியவே மாட்டேங்கறது. சரி, நான் வர்றேன். இப்ப வேளை சரியாயில்லேன்னு தோணுது."

"சரி, போய் வாருங்கோ. நமஸ்காரம்."

முதலாளி முத்தையா போன இரண்டு நிமிஷத்துக் கெல்லாம் நடிகர் சந்திரகுமார் வந்தார். எத்தனையோ படங்களில் எத்தனையோ நாரீமணிகளின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருக்கும் அவரால் வசந்த குமாரியின் மனதை அசைக்க முடியவில்லை. அவருக்குப் பின்னுல்

வந்த ஒரு சினிமாப் பித்தர் தாம் கொண்டிருந்த அத்யந்த பக்தியை எடுத்துரைத்துவிட்டுப் போனார். அதற்கப்புறம் சுமார் அரை டஸன் ஆசாமிகள் ஒவ்வொருவ ராய் வந்துவிட்டுச் சென்றார்கள். எல்லாரும் கிட்டத்தட்ட ஒரே விதமான பல்லவியைத்தான் பாடிவிட்டுச் சென்றார்களென்று சொல்ல வேண்டுமா?

பேட்டிகளெல்லாம் முடிந்தன. அவ்வளவு பேர் மனத்திலும் தாபத்தை எழுப்பிவிட்ட அந்த சுந்தரி தன் தாபத்தைத் தணிக்க முடியாமல் சோபாவில் சாய்ந் தாள். இத்தனைப்பேர் தங்களை அர்ப்பணம் செய்யத் துடிதுடித் துக் கொண்டிருப்பதை அறிந்த பின்னும் அவள் மனக்குறை தீர்ந்தபாடில்லை. உண்மையில் ஒவ்வொருவரும் அவள் ஏக்கத் தைத் தூண்டிவிட்டுத்தான் சென் றார்கள்.

இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியே மாலுமி இல்லாத கப் பல் போலத் தறிகெட்டுத் தத்த ளித்துக்கொண்டு கிடப்பது! இல்லை. சீக்கிரம் இந்த அவல வாழ்வுக்கு ஒரு முடிவு கண்டுதா னாக வேண்டும். என்றைக் கிருந்தாலும் ஒரு ஆண் பிள்ளை யோடு வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்டுதானே ஆகவேண்டும்? ஆண்கள் என்றால் எல்லாரும் ஆண்கள் தான். யாராவது ஒரு வரைத் தீர்மானிக்க வேண்டியது தான். தெரியாத தேவதையைக் காட்டிலும் தெரிந்த சைத்தான் தேவலை யென்று தோன்றுகிறது. இன்றைக்கு வந்த ஆசாமிகளிலே தான் ஒருவரைத் தெரிந்தெடுத் தால் என்ன? ஆமாம், அதுதான் சரி. எதோ பார்ப்போம்.

சந்திரகுமார் பார்வைக்கு நன் றாகத்தா னிருக்கிறார். புகழுக்குக் குறைவில்லை. படிப்புமிருக்கிறது. ஆனால் நடிகனையா வாழ்க்கையில் பிணைத்துக் கொள்வது! ஏடு டியோ நாடகத்தையே வீட்டி லும் நடத்திவிடுவதா! சரி, அவர் அப்படி இருக்கட்டும்; மற்றவர் களைப் பார்ப்போம்.

ராம்சேகர் எப்படி? இங்கே வந்துமல்லவா அந்தப் பாவி, "முகத்தை இப்படி வைத்துக் கொள்ள வேண்டும்; தலையை அப்படிச் சாய்த்துக் கொள்ள வேண்டும்; அங்கே கொஞ்சம் நிறுத்திப் பேச வேண்டும்; இங்கே இன்னுங் கொஞ்சம் அழுத்தங் கொடுத்தால் தேவலை" என்பான்?

நம்ப முதலாளி முத்தையா? பேஷ்! அடி வஸந்த்! உன் சமர்த்தே சமர்த்து! போயும் போயும் பணமூட்டைக்கா மாலை சூட்டப் போகிறாய்? இருக்கிற பணத்தை அனுபவிக்கத் தானேடி ஆள் தேடுகிறாய்?

இன்றைக்குப் புதிதாய் வந்ததே ஒரு பித்தம்? மூஞ்சியிலேயே எழுதி வைத்திருக்கிறது, கிறுக்கு என்று. இவன்களுக் கெல்லாம் திரையிலே பார்த்தால் தான் மோகம். அருகாமையில் வந்து விட்டால் அப்புறம் இந்த வஸந்த குமாரிக்குப் பதில் வேறு யாரா வது ஒரு ஹேமந்த குமாரியைத் தேடிக்கொண்டு போவான்கள்.

அப்புறம் வந்தவர்? 'சினிமா ஜோதி'யின் நிருபராமே? ஸ்வாமி, இந்த நிருபர்கள் இருக்கிற திசை யிலே கூடத் திரும்பக்கூடாது. "உங்களுக்கு எத்தனைப் பல் இருக்கிறது? உங்கள் மோட் டார்கார் சக்கரத்துக்கு எவ் வளவு காற்றடிக்கிறீர்கள்? உங் கள் நாய்க்குட்டிக்குக் கல்யாண மாகிவிட்டதா?" என்று சரமாரி

யாய்க் கேள்வியைப் போட்டுத் தொளைத்துவிடுவார்கள் பாவிகள்.

அந்த 'இசையுலக சர்வாதிகாரி'? நமக்கென்ன காண்டா மிருகத்தின் தோலிலா காது வைத்திருக்கிறான், பிரமன்! டாக்டர்...அவர் பேரென்ன சொன்னார்? என்னவாவது இருந்து தொலையட்டும். வாரம் ஒரு தடவையோடே நிற்கட்டும் அவர் தரிசனம். சரி, இன்னும் ...அவர்? ஊஹூம். இன்னொருவர் வந்தாரே அவர்?...ச்சோ.

அட ராமா, விஸ்டெல்லாம் எக்ஸாஸ்டாகியல்லவா போய்விட்டது? இந்த ரீதியில், இந்த இந்தியா முழுதும் சல்லடைபோட்டு சல்லித்தால் கூட ஒரு ஆசாமி நிற்கமாட்டார்போ லிருக்கிறதே? நம்முடைய விதி இவ்வளவு தானா? ஈஸ்வரா! இந்தப் பகட்டுலகிலே என்னத்துக்குப் புகுந்து தொலைத்தோம்? பற்றுத் தேய்க்க வருகிறாளே பாஞ்சாலி, அவள் வாழ்க்கை தேவலை போலிருக்கிறதே. எதாவதொரு கிராமத்திலே, சின்னஞ் சிறு குடிசையிலே, குடியுங் குடித்தனமுமாய் ஒருவர் கண்ணிலும் படாமல் நிம்மதியாய்க் கிடந்திருந்தால் நன்றாயிருக்கும்போ லிருக்கிறதே.

நிமிஷத்துக்கு நிமிஷம் கனத்துக் கொண்டே வந்த சிரத்தைத் தாங்கிக்கொண் டிருந்த கைகள் சோபாவின் கைமேல் துவண்டு விழுந்தன. அவள் குழப்பமெல்லாம், ஆத்திரமெல்லாம், ஏக்கமெல்லாம், மதகையுடைத்துக் கொண்டு பாயும் கலங்கல் போல் பீரிட்டுக்கொண்டு பாய்ந்தது. தாய் தந்தை யில்லாத அனைதைக் குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதாள் வஸந்தகுமாரி.

சுமார் கால் மணி நேரங் கழித்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்தபோது, அவள் முகத்திலே தீர்மானம் தெளிவாய் விளங்கியது. குரலைச் சரிப்படுத்திக் கொண்டு, "மிஸ்டர் கோபால்" என்று கூப்பிட்டாள். அவளுடைய அந்தரங்கக் காரியதரிசி கதவருகில் வந்து நின்றார். வந்தவரைத் திரும்பிப் பார்க்காமலே, "இன்றைக்குத் திருநாகேஸ்வரம் புறப்பட வேண்டும். ஒரு மாதம் தங்கியிருப்பதற்கு வேண்டியபடி ஏற்பாடு செய்யுங்கள். என்னோடுகூட ஒருவரும் வரவேண்டாம். இல்லறை வேலைகளுக்கு அங்கேயே ஒரு பெண்ணையையனை பார்த்துக்கொள்ளலாம். அங்கே நமது பங்களாவில் எல்லாம் சரியா யிருக்கிறதோ இல்லையோ? வாங்கின பிறகு போகவே யில்லையே. தோட்டத்தை யெல்லாம் கவனித்துவர யாராவது இருக்கிறார்களா இல்லையா?" என்றாள். ஒன்றும் புரியாமல் ஒரு கணம் திகைத்து நின்ற கோபாலசாமியை, "போங்கள், போய்ச் சீக்கிரமாய் ஏற்பாடு பண்ணுங்கள். வண்டி ஆறரைக்காச்சே?" என்று துரிதப்படுத்தினாள்.

மறுநாள், 'வஸந்த விஹார்' ஆவி பிரிந்த உடலம்போல் கிடந்தது. அது என்ன? அதற்கு வந்து வந்து போகும் நூற்றுக் கணக்கான ஆசாமிகளின் இதயங்களும் வெறிச்சென்று கிடந்தன. நெருங்கிய வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றும் புரியாமல் மனம் போனபடி பேசிக்கொண்டார்கள். ஸ்ரீமான் கிருபர் திரித்துவிட்ட சரடு அவர்களுக்கெல்லாம் ஒருவித ஆறுதலளித்தது.

"கொஞ்ச நாளாகவே வாழ்க்கையில் அலுப்படைந்திருந்த

சினிமா நக்ஷத்திரம் வஸந்த குமாரியின் மனம் மண வாழ்க்கையில் திரும்பி யிருக்கிறதென்றும், பல நாள் யோசித்தும் இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வர முடியாமையால் திருநாகேஸ்வரத்தில் போய்ச் சிறிது காலம் ஓய்வெடுத்துக்கொள்ளுகிறு ரென்றும், அங்கிருந்து திரும்பி வரும்போது அனேகமாய் ஒரு தீர்மானத்தோடுதான் திரும்பி வருவாரென்றும், நெருங்கிய வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுடன் சம்பந்தமுடையவர்கள் வாயிலாகக் கிடைத்திருக்கும் செய்திக்கு ஆதார மில்லாமலில்லை என்று அர்த்தமாகக் கூடியபடி மிஸ் வசந்தகுமாரியின் விவகாரங்களைக் கவனித்து வருபவர்களில் ஒருவர் கூறியதாக அவருடைய நண்பரொருவர் மூலம் நமது நிருபருக்குத் தெரியவந்திருக்கிறது. யார் பேருக்குச் சீட்டு விழுகிறதோ!'' என்ற செய்தி 'திரை மணி'யில் வெளியானதைப் பார்த்துப் பட முதலாளி முத்தையா தமது ஜோதிடரிடம் ஜாதகத்தைத் தூக்கிக்கொண்டு போனுர்; டைரெக்டர் ராம்சேகர் தமது பாங்கிக்கெழுதி இருப்பைக் கேட்டார்; நடிகர் சந்திரகுமார் புதிதாய் வந்த காண்ட்ராக்டைத் தள்ளிப் போட்டார். இன்னும் எத்தனையோ பேர் எப்படி யெப்படியோ தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

கண்ணை மூடித் திறப்பதற்குள் ஒரு வாரம் ஓடிவிட்டது. ஒவ்வொரு நாளும் தினசரிப் பத்திரிகைகளின் செய்திப் பத்திகளை லக்ஷக்கணக்கான கண்கள் துருவி ஆராய்ந்துவந்தன. அவர்கள் பிரயாசையும் வீணுய்ப் போகவில்லை. வஸந்தகுமாரி திருநாகேஸ்வரத்துக்குப் புறப்பட்ட வெள்ளிக் கிழமைக்கு அடுத்த வெள்ளிக்கிழமை வந்த 'திரை மணி'யை ஆயிரக்கணக்கான பேர் ஆளுக்கொன்று கையில் பிடித்துக்கொண்டு அகப்பட்ட இடத்தில் நின்றுகொண்டு கண்ணைப் பரக்க விழித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கண்களை அகலவைத்தது இந்தச் செய்திதான் :

பிரபல சினிமா நக்ஷத்திரத்தின் மனப்போக்கு

மிஸ் வஸந்தகுமாரியின் தீர்மானம்

பெயர் பெற்ற திரை உலக நக்ஷத்திரமான மிஸ் வஸந்த குமாரியின் வாழ்க்கைப் பிரச்னையைப் பற்றி நமது நிருபர் ஒரு வாரத்துக்கு முன் கூறி யிருந்த ஹேஷ்யம் பலித்துவிட்டதென்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம். அந்த சினிமா ராணி தமது தீர்மானத்தினுல் தமது அபிமானிகள் அவ்வளவு பேரையும் திகைக்க வைத்து விட்டார். ஆனுல் அந்த முடிவை அவரே நேற்றுவரை எதிர்பார்க்கவில்லை என்று தெரிகிறது. லக்ஷக்கணக்கான உள்ளங்களிலே இன்ப உணர்ச்சியை எழுப்பி வந்துள்ள அந்த வனிதை, தலை சிறந்த கலைஞர்களையும், செல்வத்தில் திளைக்கும் சீமான்களையும் தமது கடைக் கண் நோக்கத்துக்காக ஏங்கவைத்து வந்துள்ள அந்த ரம்பை, நேற்று திருநாகேஸ்வரத்தில் தமது தோட்டத்தைக் கவனித்துவந்த தோட்டக்காரனையே மணந்துகொண்டிருக்கிருர் !

அந்த அதிருஷ்டத்துக்குப் பாத்திரமான கிருஷ்ணனைப் பார்த்துப் பொருமைப்படுபவர்களுக்கு நாம் ஒரே ஒரு சமாதானங்கூறுகிறேம். கிருஷ்ணனும் இப்போது வஸந்த

குமாரியாக உள்ள ருக்மணியும் திருநாகேஸ்வரத்தில் பக்கத்து வீட்டுக்காரர்களாம். செப்பு வைத்து விளையாடுங் காலமுதல் ஒன்ருய் ஆடிப் பாடித் திரிந்தவர்களாம். அவர்கள் பிரிந்து சுமார் பத்து வருஷமாகி யிருந்தபோதிலும், எத்தனையோ பெரிய பெரிய நடிகர்களது உருவங்களும் ரஸிகர்களது உருவங்களும் வஸந்த குமாரியின் இதயத் திரையிலே நடமாடி வந்திருந்த போதிலும், கிருஷ்ணனின் உருவம் மட்டும் மங்காமல் ஒரு மூலையில் பதிந்து கிடந்ததாம். கிருஷ்ணனே, தான் ஏணி வைத்தாலும் எட்ட முடியாதபடி ருக்மணி உச்சாணிக் கொப்பிலே ஏறிவிட்டா ளென்பதை உணர்ந்திருந்தும், அவளை மறக்க முடியாமல், எப்படியாவது அவள் சம்பந்த மிருந்து வரட்டு மென்றுதான் 'ருக்மணி நிலயத்'தில் தோட்டக்காரனுயிருந்து வந்தானும். அந்தக் காதல் பலந்தான் எதிர்பாராமல் இப்போது இருவரையும் ஒன்று சேர்த்து வைத்திருக்கிறதென்று மிஸ். வஸந்தகுமாரி கருதுகிருர். உண்மையில், சமீபத்தில் திருநாகேஸ்வரம் போகும் வரை அங்கே தமக்காகத் தோட்டம் வைத்து வளர்த்துக்கொண்டிருப்பவன் தம்மை இளம் பிராயத்திலேயே மயக்கிய கிருஷ்ணன்தான் என்பது ருக்மணிக்கு (அதாவது வஸந்தகுமாரிக்கு) தெரியாதாம். கிருஷ்ணன் தோட்டக்காரனு யிருந்து வந்திருக்கிருனே யொழிய, உருவத்தில் ருக்மணிக் கேற்ற கிருஷ்ணன் தானும். நல்ல புத்திசாலியாம். சுமாராகக் கல்வியும் உள்ளவனும். தமிழ்நாட்டைப் பித்துக் கொள்ள வைக்கும் வஸந்த குமாரியின் பாடல்கள் அவ்வளவையும் அவன் (மன்னிக்க வேண்டும்—இப்போது அவர் என்றல்லவா சொல்ல வேண்டும்) அவர் அப்படியே இசைத்தட்டைப்போல் ஒப்பித்துவிடுவதாக அவரைப் பேட்டி கண்ட நமது நிருபர் தெரிவிக்கிருர்.

கடைசியாக ஒரு விஷயம் ரசிகர்களுக்குச் சொல்லி வைக்கிரும். "அப்படியானல் இனி கிருஷ்ணனையும் ருக்மணியையும் ஜோடியாய் வெள்ளித்திரையிலே காணலாமா" என்று அவர்கள் கேட்பது எங்கள் காதில் விழுகிறது. "முடியாது" என்ற ஒரே வார்த்தையில் அவர்கள் ஆவலுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டி யிருப்பதற்காக வருந்துகிரும். நமது பத்திரிகை நேயர்கள் கைக்கு வந்து சேருவதற்குள்ளே, கிருஷ்ணனும் ருக்மணியும் திருநாகேஸ்வரத்துக்குச் சுமார் 15 மைல் தூரத்திலுள்ள ஒரு சிறு கிராமத்தில் (பெயரை வெளியிடக் கூடாதென்பது கலைராணியின் விருப்பம்) குடியேறிவிட்டிருப்பார்கள். அனேகமாய் சினிமா உலகத்துக்கு வஸந்த குமாரி முழுக்குப் போட்டுவிட்டாரென்றுதான் தோன்றுகிறது. ஆனல் பூர்த்தியாகாத காண்ட்ராக்டையுடைய முதலாளிகள் அஞ்ச வேண்டியதில்லை. மிஸ். வஸந்தகுமாரியின் நாணயந்தான் உலகப் பிரசித்தமாயிற்றே?"

(அகில இந்திய ரேடியோ சென்னை நிலயத்தில் ஒலிபரப்பப்பட்டது.)

*

இருதயத் துடிப்பு

ஒரு நாளைக்கு ஏறக்குறைய லட்சம் தடவைகள் இருதயம் துடிக்கிறது.

திருவாங்கூர் திவானின் யுத்தகோஷம்

ஆர். எச். நாதன்

கடந்த அறுபது வருடங்களாக நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடி வந்தோம். ஆயிரக் கணக்கான தேச பக்தர்களைச் சுதந்திரப் போராட்டத்தில் பலி கொடுத்தோம். லட்சக் கணக்கான சுதந்திரவீரர்கள் சொல்லொணுத கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளானுர்கள். இறுதியில் நமது ஒன்றுபட்ட சக்தி, 1948-ம் வருடம ஜூன் மாதத்தில் இந்தியாவை விட்டு வெளியேறுவதாகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வாக்குறுதி கொடுக்கும்படி நிர்ப்பந்தித்தது.

ஒரு புறத்திலே, நமது ஒற்றுமையைக் குலைத்து, இந்தியாவில் தனது ஆதிக்கத்தை நிரந்தரமாக நிலைநாட்டப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சூழ்ச்சி செய்கிறது; நாட்டைத் துண்டு போடுகிறது. மற்றொரு புறத்திலே, தன் தத்துப் புத்திரர்களான சுதேச மன்னர்களுக்குச் ''சுதந்தரம்'' கொடுத்து, மன்னர் ஸ்தானைச் சிருஷ்டித்து, சுதேச சமஸ்தானங்களில் தனது பொருளாதார, ராணுவ ஆதிக்கத்தை நிலைநாட்டத் திட்டம் போட்டிருக்கிறது. ஏகாதிபத்தியத்தின் திட்டம் வெற்றி பெற்றால் சுதந்தரம் பெற்ற பிரிட்டிஷ் இந்தியாவில் தங்கியிருக்கலாம், அல்லது அடுத்த வருடம் ஜூன் மாதத்தில் சகல பகுதிகளிலிருந்தும் வெளியேறலாம். ஆனல், இந்தியாவின் மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதியையும், மொத்த ஜனத் தொகையில் நான்கில் ஒரு பகுதியினரையும் கொண்ட 584 சமஸ்தானங்களில் நிச்சயமாகத் தங்கியிருக்கப்போகிறது.

இவ்வாறு இந்திய சமஸ்தானங்களை ஏகாதிபத்தியத்தின் ஐந்தாம் படைக் கையாட்களாகமாற்றி, அங்கிருந்துகொண்டு நமது சுதந்தரத்திற்கும், ஆசிய மக்களின் சுதந்தரத்திற்கும பேராபத்தை விளைவிக்கப் போகிருர்கள். முக்கியமாகத் தமிழ் நாட்டின் எல்லையிலுள்ள திருவாங்கூர், தமிழ்க் குடியரசின் சுதந்தரத்திற்கு அபாயத்தை விளைவிக்கப் போகிறது. இது வெறும் வெத்து வேட்டல்ல. திருவாங்கூர் திவான் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், ''ஆகஸ்ட்மாதம் 15-ம் தேதிக்குப் பிறகு திருவாங்கூர் சமஸ்தானம் சுதந்தர நாடாகத் திகழும்; இந்திய யூனியனேடு சேரவே சேராது. அரசியல் நிர்ணய சபையிலும் சேராது. திருவாங்கூர் சுதந்தர நாடாகத் திகழ்வதை உலகில் எந்தச் சக்தியும் தடுக்க முடியாது. பகிரங்கமாகப் போர் தொடுப்பதன் மூலமாகத்தான் தடுக்க முடியும். யுத்தத்திற்கும் தயாராக இருக்கிருேம்'' என்று யுத்த கோஷம் செய்கிருர். இதே மாதிரியாக ஹைதராபாத், காஷ்மீர், போபால் முதலிய சமஸ்தான மன்னர்களும் சுதந்திரப் பிரகடனம் செய்துவிட்டார்கள்.

சில நாட்களாக இந்திய அரசியல் போர்க்களத்தில் கச்சை கட்டிக்கொண்டு போராடி வருகிருர் திருவாங்கூர் திவான். யாரை எதிர்த்து, எதற்காகப் போராடுகிருர்? அவர் போராட்டத்தின் மர்மங்களென்ன? இந்த ரகசியங்களை யெல்லாம் அம்பலமாக்குகிருர் கட்டுரையாளர்.

இது உண்மையில் சுதந்தரப் பிரகடனமா, அல்லது யுத்தப் பிரகடனமா?

"சமஸ்தான மன்னர்கள் இவ்வாறு சுதந்தரப் பிரகடனம் செய்வது கோடிக் கணக்கான சுதந்தர இந்தியர்கள் மீது யுத்தப் பிரகடனம் செய்வதாகும்" என்று ஜூன் மாதம் 15-ம் தேதியன்று டில்லியில் பிரார்த்தனையின்போது மகாத்மா காந்தி கூறினர்.

திருவாங்கூர் சமஸ்தானத்தைப் பற்றியும், மன்னனைப் பற்றியும், திவானைப் பற்றியும் இதுவரையிலும் பெரிய முகமூடி போடப்பட்டிருந்தது.

'திருவாங்கூர் சமஸ்தானமா, ஆஹா, இந்திரலோகம்! வானளாவிய மலைகள்; ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் மலிந்த மலைகள்; நவீன தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்கள். தேனும் பாலும் வழிந்தோடும் வஞ்சி நாடல்லவா அது?......

'திருவாங்கூர் ராஜாவா? தெய்வபக்தி உள்ளவர். தினசரி பத்மநாபஸ்வாமியைத் தரிசனம் செய்கிறுர். அந்த மகா பக்தர் பட்டை பட்டையாகத் திருநீறு அணிந்து கோவிலுக்குப் போவார். கோவிலுக்கு ஏராளமாகச் சொத்தை ஒதுக்கி வைத்திருக்கிறுர். பக்தர்களுக்குத் தினசரி சாப்பாடு போடுகிறுர். ஹரிஜனங்களுக்கு முதலில் ஆலயங்களைத் திறந்துவிட்ட முற்போக்கு மன்னர்......'

'திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயரா? மகா மேதாவி. அழகு சுந்தரன். திறமையில் அவருக்கு இணை அவரே. பாகிஸ்தானை எதிர்ப்பவர். காந்தி பக்தர். கம்யூனிஸ்டுகளையும், தொழிலாளர்களையும் நசுக்கி யெடுப்பதில் கெட்டிக்காரர்'—இம்மாதிரியெல்லாம் சிலர் நினைத்து வந்தனர்.

பத்திரிகைகளைப் புரட்டிப் பாருங்கள். அவரைப்பற்றி ஏதேனும் செய்தியோ, அல்லது திருவாங்கூர் சமஸ்தான விஷயம் முதல், சர்வதேசிய விஷயம் வரையிலும் சகல பிரச்சினைகளைப் பற்றியும் அவர் விடுத்த அறிக்கைகளோ இல்லாமல் தினசரிப் பத்திரிகைகள் வெளி வராது.

பத்திரிகைகளை யெல்லாம் தம் கைக்குள் போட்டுக்கொண்டு, இவ்வளவு சாமர்த்தியமாக உண்மையை மறைத்து வைத்துப் பிரசார வேலையைச் செய்துவந்தார். திருவாங்கூரில் நடக்கும் உண்மையான செய்தியை இது வரையிலும் எ. பி. ஐ. செய்தி ஸ்தாபனம் எப்படித் தெரிவிக்காமலிருந்தது என்று சென்ற வாரம் நேஷனல் ஹெரால்ட் பத்திரிகை ஒரு உபதலையங்கத்தில் கேட்கிறது. பணம் பாதாளம் வரையிலும் பாயும் என்ற உண்மையை ஆசிரியர் மறந்து விட்டாரோ என்னவோ! ஆயினும், இப்பொழுது திவானின் உண்மையான சொரூபம் வெட்ட வெளிச்சமாகி வருகிறது. திருவாங்கூரின் உண்மையான நிலைமை அம்பலத்திற்கு வருகிறது.

இதுவரையிலும் பொது ஜனங்களைச் சுட்டு வீழ்த்தினல், பொது ஜனத் தலைவர்களைக் கைது செய்தால், "கம்யூனிஸ்டுகள் கலாட்டா" என்று உடனே அறிக்கை விடுவார் திவான். பத்திரிகைகளும், சில தலைவர்களும் அதை வேதவாக்காக நம்பி வந்தனர்.

ஆனல், சமீபத்தில் நடந்த அகில இந்திய சமஸ்தான மக்கள் காங்கிரஸின் ஸ்டாண்டிங் கமிட்டி, "திருவாங்கூர் திவான் எதேச்சாதிகாரியாக நடந்து கொள்கிருர். பாஸிஸ்டுகளும், நாஜிகளும், நடந்துகொண்டதை விடப் படுமோசமாக நடந்து கொள்ளுகிருர்" என்று ஒரு தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

'திருவாங்கூர் சமஸ்தானத்திற்குச் சுதந்தரம் வேண்டும்' என்று கேட்கிருர் திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர். யாருக்குச் சுதந்தரம்? சமஸ்தான மக்களுக்கா?

தமது சுதந்தரக் கோரிக்கையை திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள பொது மக்கள் ஆதரிக்கிருர்கள் என்று அறிக்கை விட்டு, காரியாம்சத்தில் பலசமஸ்தானக் காங்கிரஸ் தலைவர்களையும், பொறுப்பாட்சிப் போராட்டத்தில் முன்னணியில் நிற்கும் தொழிலாளர் தலைவர்களையும் கைது செய்து வருகிருர்.

திருவாங்கூரிலுள்ள 61 லட்சம் ஜனங்களில் சுமார் 10 லட்சம் தமிழர்கள் தமிழ் நாட்டின் எல்லையை ஒட்டிய நாஞ்சில் நாட்டில் வசிக்கிருர்கள்.

தமிழ் நாட்டோடு சேருவதா அல்லது திருவாங்கூரிலேயே தங்கியிருப்பதா என்று முடிவு செய்ய அவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கவில்லை.

திருவாங்கூரிலுள்ள மலையாளிகள் ஐக்கிய கேரளத்தில் சேர விரும்புகிருர்கள். அதாவது திருவாங்கூர், கொச்சி, பிரிட்டிஷ் மலபார் ஆகிய மூன்று பகுதிகளிலுள்ள $1\frac{1}{2}$ கோடி மலையாளிகள் ஒன்ருக வாழ வேண்டும் என்று கேட்கிருர்கள். அதையும் திவான் எதிர்க்கிருர்.

'பொறுப்பாட்சி வேண்டும்' என்று ஒரே குரலில் கேட்கும் திருவாங்கூர் மக்களுக்கு "அமெரிக்கன் மாடல்" சர்வாதிகார அரசியல் திட்டத்தைக் கொடுக்க முன் வந்திருக்கிருர். ஆகவே வேறு யாருக்குச் சுதந்தரம்? திருவாங்கூரில் வெள்ளை முதலாளிகளும், தமிழ் நாட்டிலுள்ள சில முதலாளிகளும் மூலதனத்தைப்போட்டு திருவாங்கூர் மக்களைச் சுரண்டி வருகிருர்கள். முடிந்தவரையிலும் சுரண்டிக் கொழுக்கதான் அவர்களுக்குச் சுதந்திரம் கேட்கிருர்.

இத்துடன் அணுகுண்டு செய்வதற்கு வேண்டிய மணல் திருவாங்கூரில் ஏராளமாக இருக்கிறது. மூன்ருவது உலக மகா யுத்ததிற்கு அடிகோலிவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு சேர்ந்து கொள்ளச் சுதந்தரம் கேட்கிருர்.

இந்தியாவையும், ஆசியாவையும் அடிமைப்படுத்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களில் பொருளாதார ராணுவ தளங்களை அமைத்து வருகிறது. அந்த நோக்கத்தைப் பூர்த்திசெய்யப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத் திருவாங்கூரில் ராணுவ, பொருளாதார தளங்களைக் கொடுக்கச் சுதந்தரம் கேட்கிருர்.

ஆகவே, சமஸ்தான மக்களுக்கு ஆதரவாக, அகில இந்தியாவும் கிளர்ந்தெழுந்து, இஸ்டேட் ராஜாக்களின் ஐந்தாம் படை வேலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

*

புத்தக உலகம்

உயிர் மாலை: [ஆசிரியர்: காப்டன் என். சேஷாத்திரிநாதன். கிடைக்குமிடம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 1-8-0.]

உயிர், பூர்வஜன்மம், வேதனை, முதுமை, மரணம் முதலியவைகளுக்கு என்ன பொருள், உயிர் வர்க்கத்துக்கு இவை நேரக் காரணங்கள் என்ன, இவை சம்பந்தமாக உயிர் வர்க்கத்தில் என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்து சௌகரியமாக வாழலாம் என்பவற்றை விஞ்ஞானரீதியில் ஆசிரியர் எழுதியிருக்கிறார். விஷயம் எளிதில் புரியும் பொருட்டு, நடுநடுவே கதைகளைப் போல, உதாரணங்கள் காட்டியிருக்கிறார். தமிழில் இப்படிப்பட்ட புத்தகம் இப்போதுதான் வெளிவந்திருக்கிறது. ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய உபயோகமுள்ள புத்தகம். இப்படிப்பட்ட விஷயங்களை அறிஞர்கள் இன்னும் விரிவாக எழுதுவதற்கு ஊக்கமளிக்கும் நூல் இது. புத்தகம் அழகிய முறையில் வெளிவந்திருக்கிறது.

நாசகார சமூகம்: [ஆசிரியர்: எம். என். ராய். கிடைக்குமிடம்: அறிவுச்சுடர் பதிப்பகம், துறையூர். விலை அணா எட்டு.]

இப்புத்தகத்தை ஸ்ரீ 'ஜோதி மோஹன்' தமிழ்ப்படுத்தியிருக்கிறார். பிரமசரியம், வைதவ்யம், மதம், அரசாங்கச் சட்டங்கள்—இவற்றின் மூலம் மனித சமூகம் அடையும் பெருந் துன்பங்களையும், கொலை செய்யவும், கொலைக் குற்றத்துக்கு ஆளாகவும் வேண்டிய நிர்ப்பந்தங்களைச் சமூகம் சிருஷ்டி செய்வதையும், தாம் நேரில் கண்ட விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு அறிஞர் ராய் இப்புத்தகத்தை எழுதியிருக்கிறார். ஒரு சிறந்த சீர்திருத்த நூல். நம்முடைய இன்றைய சமூகத்துக்கு அவசியம் வேண்டிய புத்தகம். குறைந்த விலைக்கு இப்படி நல்ல புத்தகத்தை வெளியிட்டவர்களைப் பாராட்டுகிறோம்.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

லெனின் பிறந்தார்: [ஆசிரியர்: ஆர். ராமநாதன். கிடைக்குமிடம்: சக்தி காரியாலயம், சென்னை 14. விலை ரூ. 3-8-0.]

லெனின் இன்றைய ருஷ்யாவைப் பெற்றெடுத்த தந்தை. அத்துடன் உலகின் தலைசிறந்த ஒரு சில மகா புருஷர்களில் ஒருவரும்கூட. உலக சரித்திரத்தில் எத்தனை யுகாந்தரங்கள் இனிக் கடந்து சென்றாலும் மறக்க முடியாத கீர்த்தியைப் பெற்றுவிட்ட லெனினுடைய வாழ்க்கை வரலாறும் அவர் தலைமையில் ருஷ்யாவில் வெடித்தெழுந்த புரட்சியின் வரலாறும் அடங்கிய இந்தப் புத்தகம் எவ்வளவு முக்கியத்துவம் நிறைந்தது என்பது சொல்லாமலே விளங்கும். ஆசிரியர் நல்ல முறையில் எழுதியிருக்கிறார். ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய புத்தகம். புத்தகம் கண் கவரும் வனப்புடன் வெளிவந்திருப்பதுடன் யாரும் இது வரை சாதாரணமாகப் பார்த்திராத படங்களும், லெனின் எழுதிய கடிதங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இனி நாம் செய்ய வேண்டுவது யாது? [ஆசிரியர்: லியோ டால்ஸ்டாய். தமிழாக்கியவர்: ரா. விசுவநாதன். கிடைக்குமிடம்: சக்தி காரியாலயம், சென்னை 14. விலை ரூபாய் மூன்று.]

இந்த அரிய நூல் மூன்றாவது பதிப்பாக அழகிய முறையில் வெளிவந்திருக்கிறது. உலக மகாத்மாக்களில் ஒருவராகிய டால்ஸ்டாய் எழுதிய புத்தகம்; மகாத்மா காந்தியின்

மனத்தைப் பரிபூரணமாகக் கவர்ந்த புத்தகம். புத்தகத்துக்கு இனி 'வேறு முகமன் கூறவேண்டுமோ?' மனித தர்மத்தை அலசி ஆராய்ந்து, போதிக்கும் இந்தப் புத்தகத்தைப் படிக்கத் தவறிவிடக்கூடாது.

கவிக் குயில்: [ஆசிரியர்: எஸ் சிதம்பரம். கிடைக்குமிடம்: கவிதாலயம், சாலைத் தெரு, திருவனந்தபுரம். விலை ரூபாய் மூன்று.]

கதை, கவிதை, கட்டுரை என்று நாற்பத்தொரு விஷயங்களைக் கொண்ட இந்த விசேஷ மலரில் புதுமைப்பித்தன், "நாணல்", ந. பிச்சமூர்த்தி, ரகுநாதன், வேலூர் வெ. கந்தசாமிக் கவிராயர், கலைவாணன், சுகி முதலிய பல எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள். புதுமைப்பித்தன் எழுதியுள்ள 'பாட்டும் அதன் பாதையும்' என்பது கவிதை யம்சத்தை எடுத்துக் கூறும் பிரமாதமான கட்டுரை; கவி எழுதுபவர்களுக் கெல்லாம் வழி காட்டியாக அமைந்துள்ளது. "நாணல்" எழுதியுள்ள "எழில்" ஆழ்ந்த கருத்துக்களும், சொல்லழகும் நிரப்பப்பெற்ற சிறந்த கவிதை. 'கலைவாணன்' எழுதியுள்ள 'காவிரி' என்ற பாடல் அற்புதமான சந்தநயம் பொருந்திப் பாடப்பாடச் சுவையளிக்கிறது. ஆனால், பாடலைச் சற்று அதிகமாகவே 'கலைவாணன்' வளர்த்துவிட்டார் என்பது நம் அபிப்பிராயம். சற்றுச் சிறிதாக இருந்திருந்தால் கச்சிதமாகவும் இப்போதிருக்கும் சிறப்டைவிட இன்னும் அதிகச் சிறப்பாகவும் இருக்கும். ரகுநாதனின் 'ஆனைத்தீ' தத்துவ ரீதியில் எழுதப்பட்ட சிறந்த சிறுகதை. எஸ். சிதம்பரம் எழுதியுள்ள 'கதகளி' யென்னும் பெரிய கட்டுரை மிகவும் உபயோகமுள்ள கட்டுரை. கதகளியைப்பற்றிய விபரங்களை யெல்லாம் தெரிவித்திருக்கிறார். புகைப்படங்களுடனும் அழகான அச்சமைப்புடனும் சிறந்த விஷயங்களுடனும் வெளிவந்துள்ள இந்த விசேஷ மலருக்குத் தமிழ்நாடு ஆதரவளிக்க வேண்டும்.

வாழ்க்கைச் சித்திரம்: [ஆசிரியர்: வ. ரா. கிடைக்குமிடம்: பவானி பிரசுரம், ராயவரம், புதுக்கோட்டை சமஸ்தானம். விலை ரூ. 2-8-0.]

ஸ்ரீ வ. ரா. வின் விறுவிறுப்பு நிறைந்த தமிழ் நடை தமிழர்களுக்கு நன்கு அறிமுகமானது. ஏற்கெனவே 'நடைச் சித்திரம்' என்ற பெயருடன் இப்புத்தகம் வெளிவந்தபோது இதைத் தமிழர்கள் ஏராளமாக வாங்கிப் படித்து ரசித்தார்கள். இப்போது முன்னிலும் அதிகக் கவர்ச்சியுடன் பவானி பிரசுரகர்த்தர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். வாங்கிப் படியுங்கள்.

உவமை நயம்: [ஆசிரியர்: வல்லிக் கண்ணன், கிடைக்குமிடம்: பாரி நிலையம், சென்னை 1. விலை ரூ. 1-0-0.]

பாரதிதாசன் பாடல்களில் காணும் உவமைகளைப் பாராட்டும் நூல். இயற்கைக் காட்சியில் காணும் அதி நுணுக்கமான விஷயங்களையும் கண்டு அனுபவித்து அவைகளைப் பாட்டில் அமைத்துக் கொடுப்பதில் பாரதிதாசன் தீரர். இரவுப் பெண்ணைப்பாரதிதாசன் கீழ்க்கண்டவாறு ஓரிடத்தல் வர்ணித்திருப்பதை வல்லிக் கண்ணன் பாராட்டுகிறார்:

"வெள்ளை முத்துக்கள் தைத்த
போர்வையே மேனி போர்த்த
...உடல் திருப்பிக்
கண் மலர் திருப்பி நின்றாய்!
பின் புறம் கரிய கூந்தற்
கொண்டையில் ஒளியைக் கொட்டும்
குளிர் நிலா வயிரவில்லை!"

பாராட்ட வேண்டிய பிரமாதமான கற்பனைதான். இதைப் பாராட்டிவிட்டு, ஆணிப் பொன் கட்டிலைச் சேறாகவும், தலைவியை எருமையாகவும் உவமித்து எழுதப்பட்ட,

"அருமை மகள் தனக்கேற்ற அன்பனோடும்
ஆணிப் பொன் கட்டில் எனும் சேற்றினுள்ளே
எருமை எனக் கிடந் தின்பம் நுகர"

என்ற வரிகளையும், மற்றோரிடத்தில் தேச மக்களைப் பன்றிக் குட்டிகள்

என்று உவமித்து எழுதப்பட்ட வரிகளையும் பாராட்டுவது மிகவும் அர்த்தமில்லாத விஷயம். தவிரவும் பாரதிதாசனுடைய பாடல்கள் யாவும் பண்டிதர் முதல் பாமரர் வரை எல்லோரும் புரிந்துகொள்ளக் கூடியவாறு அவ்வளவு எளிய நடையில் அமைந்திருக்கும்போது, அவர் பாடல்களி லுள்ள உவமைகளைப் பிரித்து எடுத்து அடுக்கி விளக்குவதற்கென்று இந்த மாதிரி ஒரு தனிப் புத்தகம் எழுத வேண்டிய அவசியமும் இல்லை.

சுதந்திர இந்தியா: நேத்தாஜி, ஜப்பானின் தலைநகராகிய டோக்யோவில் அந்நிய மொழிச் சர்வகலாசாலையில் செய்த பிரசங்கத்தை ஸ்ரீ எஸ். எஸ். மாரிசாமி தெளிவான நடையில் மொழிபெயர்த்த இந்தச் சிறு நூல் வடிவத்தில் வெளியிட்டிருக்கிறார். இந்தியாவின் பலதிறப்பட்ட பிரச்சினைகளைத்தீர்த்து,சுதந்தர இந்தியாவை எப்படி அமைக்க வேண்டும் என்று நேத்தாஜி இப் பிரசங்கத்தின் மூலம் தெரிவித்திருக்கிறார். புத்தகத்தின் விலை அணா பத்து.

வள்ளுவர் தந்த இன்பம்: ஸ்ரீ ராய. சொ. திருக்குறள் காமத்துப் பாலுக்கு எளிய நடையில் பொருள் கூறி இந்த நூல் வடிவில் வெளியிட்டிருக்கிறார். யாவரும் 'காமத்துப் பால்' என்ற இலக்கியச் செல்வத்தை அனுபவிப்பதற்குப் பேருதவியாகப் பயன்படும் அருமையான நூல். விலை ரூ. 3-0-0.

டில்லி நோக்கி: இதுவும் நேத்தாஜி பேசியவையும் எழுதியவையும் அடங்கிய புத்தகம் தான். ஸ்ரீ சுப. நாராயணன் எளிய நடையில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். இந்தப் புத்தகத்தின் விலை ரூ. 3-0-0.

மேற் கண்ட நான்கு புத்தகங்களையும் மிகவும் அழகாகப் பாரி நிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

பரிசு: [ஆசிரியர்கள்: குயிலன், தமிழ் ஒளி. கிடைக்குமிடம்: உமையாள் அன் கோ, அருணசல ஆசாரி தெரு, சேலம். விலை அணா 4.]

16 பக்கங்களுள்ள இந்தச் சின்னஞ் சிறு புத்தகத்தில் சிறு குழந்தைகளுக்கேற்ற பாடல்களும் வர்ணப் படங்களும் நிறைந்துள்ளன. எளிய இனிய நடையில் எல்லாப் பாட்டுக்களுமே அமைந்துள்ளன. பாலர் பாடப் புத்தகங்களில் இந்தப் பாடல்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். அத்துடன் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பதற்குரிய அருமையான பரிசு, இந்தப் 'பரிசு'.

சுதந்திரச் சுழல்: [ஆசிரியர்: என். ஆர். பத்மநாபன். கிடைக்குமிடம்: அருள் நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூ. 5-0-0]

நேத்தாஜியினுடைய வரலாற்றின் முக்கியமான விபரங்களை யெல்லாம் இந்தப் புத்தகத்தில் கண்டுகொள்ளலாம்.

நேத்தாஜி வரலாறுடன் இ. தே. ரா. வின் வரலாறும், நேத்தாஜியின் சொற்பொழிவுகளும் இப் புத்தகத்தில் அடங்கியுள்ளன. ஆசிரியர் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் ஆவேசமாகவும் எழுதியிருக்கிறார். புத்தகத்தின் பெயருக்கேற்ற தமிழ் நடை தான். புத்தக அமைப்பும் அச்சும் நன்றாகவே இருக்கின்றன.

—கு. அ.

மறுமலர்ச்சி: [ஆண்டுப் பேரிதழ். யாழ்ப்பாணம். விலை 50 சதம்.]

எஸ். எம். செய்குதாவுது ராவுத்தர் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம் [அஹ்பாபுல் வத்தன் வெளியீடு, நாகை. விலை இனம்.]

மாற நாடு: [மாத வெளியீடு. ஆசிரியர்: பிரான்ஸிஸ் மோசஸ். வெளியிடுவோர்: தட்சண மாற நாடார் சங்கம், சிந்துபூந்துறை, திருநெல்வேலி. விலை அணா 4.]

சாரணன்: [ஹிந்துஸ்தான் சாரண சங்கத் தமிழ் மாசிகை. 11, பச்சையப்ப முதலி தெரு, கும்பகோணம். பிரதி விலை அணா 3.]

சாரணர் திருநாள் குறிப்பு: (சர்வசித்து ஆண்டு) [வெளியிட்டோர்: உலகநாயகி சாரணர் குழாம்,

கொத்தமங்கலம், இராமநாதபுரம் ஜில்லா. விலை அணா 8.]

ஸ்ரீ காமாக்ஷி (மாத வெளியீடு) [ஆசிரியர்: எஸ். ஆர். கணபதி செட்டியார், 103 தங்கசாலைத் தெரு, சென்னை. விலை அணா 4.]

மாதமணி (மாத வெளியீடு) [ஆசிரியர்: டி. ஸி. ராமசாமி, 5-7 பழைய போஸ்டு ஆபீஸ் ரோடு, கோயம்புத்தூர். விலை அணா 8.]

ஸ்ரீமத் தியாகராஜ ஸ்வாமியின் வர்ணப் படம்: [கிடைக்குமிடம்: ஸ்ரீ. தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜம், மயிலாப்பூர், சென்னை.]

1. தருமபுர ஆதீன மகா சந்நிதானம் அவர்களின் முதலாண்டு ஆட்சி அறிக்கை. 2. திருமணஞ்சேரித் திருப்பதிகங்கள். 3. திருக்குறுக்கைத் திருப்பதிகங்கள் 4. திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள். 5. திருக்கருப்பறியலூர்த் திருப்பதிகங்கள் 6. தருமபுர ஆதீனப் பாடசாலை ஆறுவது ஆண்டு அறிக்கை. மேற்படி புத்தகங்கள் ஆறும் தருமபுர ஆதீனத்தின் இனம் வெளியீடுகள்.

தமிழர் தேசியக் காங்கிரஸில் ஏன் சேரவேண்டும்? [நாகர்கோவில், தமிழர் தேசியக் காங்கிரஸ் வெளியீடு. விலை அணா 1.]

JL
M11,N36:S
N47.14.3

*

பல் தேய்வது......

பல் சுத்தமாக இருந்தால் தேய்வடையாமல் இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. பல் சுத்தமாக இருப்பது மட்டும் பல்லின் பலத்துக்குக் காரணமல்ல. உடம்பில் உள்ள சுகாதார நிலையையும், சாப்பிடும் ஆகாரத்தின் சத்தையும் பொறுத்துத்தான் பல்லுக்குப் பலம் ஏற்படுகிறது.

புகையிலையிலும் உணவு

அமெரிக்காவில் கென்டக்கி சர்வகலா சாலையினர் புகையிலைச் செடியின் விதைகளில் புரதம் என்கிற உணவுச் சத்து இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவைகளில் விஷச்சத்தே இல்லையாம். சில விஞ்ஞானிகள் புகையிலை விதையிலிருந்து எடுத்த எண்ணெயை எலிகளுக்குக் கொடுத்தார்கள். அந்த எலிகள் நன்றாகச் சதைபிடித்து வளர்ந்தன. ஆகவே, புகையிலை விதைகளில் எடுத்த எண்ணெய் மிகவும் சத்தானதும் எளிதில் ஜீரணமாகக் கூடியதும் ஆகும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

—ஜென்ஸ் ஸ்டாப்போர்டு

கொடுத்தவரும் வாங்கியவரும்......

அமெரிக்காவில் ஸாமர்ஸட் மாகம் என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் ஓரிடத்தில் தங்கியிருந்தாராம். அப்போது சிலர் அவர் இருந்த வீட்டுக்குள்ளேபோய் அவர் எழுதிய புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்களாம். அவர் எழுதிய ஒரு புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு ஸாமர்ஸட் மாகம் தம் கைப்படவே எழுதியிருந்தாராம்.

"ஸாமர்ஸட் மாகத்துக்கு மிகவும் நன்றியறிதலுடன் அளித்த அன்பளிப்பு—ஸாமர்ஸட் மாகம்"

88873
சென்னை-600 008

Edited, Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14.

மாலை வேளையின் மங்கலான வெளிச்சத்தில் காற்றிலசையுகின்ற அழகான இந்திய ரோஜா மலர்களைப் பார்த்ததும், உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பான வினோலியா, ஒயிட்ரோஸின் ஞாபகமேற்படும். உங்கள் எழிலை அதிகப்படுத்த இந்த சுகந்த சோப்பைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத்தரும் வினோலியா மிக நேர்த்தியான சருமத்தையும் சுகமாக சுத்தம் செய்கிறது ... மேலும், உங்களை சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச்செய்கிறது.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 20-111 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

உங்கள் குழந்தை

குழந்தைகளின் வளர்ச்சிக்கு நிம்மதியான தூக்கம் மிகவும் அவசியம். குழந்தை தூங்காமலும், அடிக்கடி அழுதுகொண்டும் இருந்தால் உடம்பில் ஏதோ கோளாறு இருக்கிறதென்றே அர்த்தம்.

குழந்தைக்கு காய்ச்சலோ, மலச்சிக்கலோ அல்லது ஏதாவது வலியோ இருக்கிறதென்று தெரிந்தால் உடனே 'க்ரைப் கால்' கொடுங்கள். உடனே கண்டிப்பாய் குணமாகி விடும். குழந்தை சுகப்படும். நன்கு கத்தூங்கும். நீங்கள் பெருமகிழ்ச்சியடையும் முறையில் குழந்தையைக் காண்பீர்கள்.

எப்பொழுதும் க்ரைப்-கால் பாட்டல் ஒன்று கைவசம் வைத்துக்கொள்ளுங்கள். பல்முளைக்கும் சமயத்தில் மிகவும் அவசியம்.

Meclec

க்ரைப் கால்

எல்லாகுழந்தைகளின்நோய்களுக்கும்

தீ மெக்லெக் நியூட்ரிமென்ட்ஸ்
அன் பார்மஸூடிகல்ஸ் லிட்.
99,-எ, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. மதராஸ்

ADARTS MNP. 48-Tamil

கவிராஜ் R. N. சென்குப்தாவின்

அமிர்த ஸலஸா

(ரிஜிஸ்டர்ட்)

(தங்க ஸத்துக் கலந்தது)

எல்லா விதமான சரும வியாதிகள், ரத்த அசுத்தம், கட்டிகள், வாத நோய்கள், ரத்தசோகை முதலியவற்றிற்கும் குழந்தை பிறந்தவுடன் ஏற்படும் பலவீனத்திற்கும் ஓர் சிறந்த ஔஷதம்.

ஒரு வாரம் உபயோகித்தால் அதன் குணம் நன்கு தெரியும். ரத்தம் சுத்தம் அடைந்து நாளடைவில் நல்ல ரத்தம் அதிகரிக்கிறது. எல்லா வியாதிகளும் நீங்கி அவயவங்கள் நல்ல சுவாதீனம் அடைகிறது. யௌவன சக்தியை மீண்டும் பெறுகிறது.

பாட்டில் 1க்கு ரூ. 1-4-0

1 டஜன் ரூ. 12-8-0

(தபால் செலவு தனி)

ஏஜண்டுகள் தேவை

Mahat Ayurvediya Ausadhalaya

144/1, Upper Chitpore Road, Calcutta

பத்து நிமிஷத்திற்குள்ளாக
வலி-
யிலிருந்து
விடுதலை
Saridon
ஸாரிடோன்
பிரசித்தி பெற்ற நோய் நிவாரணி

MGB

SHARK *liver* OIL

ஷார்க் லிவர் ஆயில்

பெயர் பெற்ற வைடமின் சத்து நிறைந்த எண்ணெ, ஒரு கிராமிற்கு 1500 I. U. G. வைடமின் A யும் 100 I. U. G. வைடமின் D யும் அடங்கியுள்ளது. இறக்குமதி யாகும் காட்லிவர் ஆயில்களை விட இது மிகவும் உயர்ந்தது. போதிய அளவு ஆகார வசதி யற்ற இக்காலத்தில் இது ஒரு சிறந்த பாதுகாப்பளிக்கும் உணவு.

GOVERNMENT OIL FACTORY
Calicut

சென்னை ராஜதானிக்கும், அதன் சுற்றுப்புறமுள்ள ஸமஸ்தானங்களுக்கும் ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ் பாரி & கம்பனி லிமிடெட்

மதராஸ்

ஸ்ரீ தேவி ஆச்ரமம்

வாலாஜாபாத் போஸ்ட்

செங்கல்பட்டு டிஸ்டிரிக்ட் S.I.Ry.,

அல்மோரா ஜில்லா பவாலி ஸ்ரீ தபஸ்வி பாபாஜி அவர்களின் சிஷ்யரும், கல்பாசாரியருமான ஸ்ரீ ஸ்வாமிஜி பண்டிதர் P. S. V. சாஸ்திரியாரால் அரக்கோணத்திற்கும் செங்கல்பட்டிற்கும் இடையே பாலாற்றங் கரையில் நிருவப்பட்டுள்ளது. மனித சமூகத்தின் கஷ்டங்களை நீக்கி ஸ்ரீ தேவி சக்தி மாதாவின் அருள் பெறச் செய்வதே இவ்வாச்ரமத்தின் முக்கிய நோக்கம். கேள்விகளுக்குப் பதிலும் மாதாஜியின் அருளும் ஆச்ரமத்தில் மெம்பர்களாக சேருபவர்களுக்கே உண்டு. இந்தியாவிற்குள் ரூ. 15|— வெளி நாடுகள் ரூ. 25|— ஆச்ரமம் லாபத்தைக் கருதி நடத்தப்படாததால் மெம்பர்கள் பிறகு எதற்கும் பணம் அனுப்பத் தேவையில்லை. மெம்பரானவுடன் தேவி பிரசன சக்ரம் அனுப்பப்படும். அதன் பின் பக்கம் கண்ட விதிகள்படி கேள்விகள் அனுப்பலாம், எல்லாவிதமான கர்ம ரோகங்களும் கல்ப முறைப்படி நிவர்த்திக்கப்படும். வசூலிக்கப்படும் பணம் பூராவும், அன்ன தானம் தபால் செலவுகளுக்கே உபயோகிக்கப்படும். கடிதப் போக்குவரத்து பணம் அனுப்புவது ப்ரொப்ரைடர் தேவி ஆசிரமம் என எழுதவும். கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும். கடிதங்கள் ரஹஸியமாகக் காப்பாற்றப்படும்.

ஸ்ரீ தேவி பராசக்தியே நமஹ

மிட்டாய்

★

உங்கள் குழந்தைகளுக்கு மிட்டாய் பிடிக்கிறது. மிட்டாய்க்காக உங்களுடன் வம்பு செய்கிறது. மிட்டாய் உடம்புக்குக் கேடு செய்தாலும் குழந்தையிடம் உள்ள வாஞ்சையால் மிட்டாய் வாங்கிக் கொடுக்கிறீர்கள். மிட்டாய் கேட்டு வம்பு செய்யும் குழந்தைக்கு 'அணில்' வாங்கிக் கொடுங்கள். வம்பு நின்றுவிடும். வாரத்தில் ஓரணாதான் செலவாகும்.

அறிவு, குழந்தைப் பருவத்தில்தான் வளர்வதற்காகத் துடிக்கும். வளர்வதற்குத் துடிக்கும் அறிவை 'அணில்' வளர்க்கும்.

'அணில்' பத்திரிகைக் கடைகளில் கிடைக்கும். அப்படிக் கிடைக்காவிட்டால் ரூபாய் மூன்று, **சக்தி காரியாலயம், சென்னை—14** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.